# காமராஜர் மாவட்ட
# வரலாற்றுக்கருத்தரங்கு.

அமைப்பு

தமிழ்நாடு அரசு
தொல் பொருள் ஆய்வுத்துறை
சென்னை.

வரலாற்றுக்கள ஆய்வு
மையம்
ராஜபாளையம்.



12-13 மார்ச் 1994

**ஸ்ரீலட்சுமி மஹால்**

இராஜபாளையம் - 626 117.
காமராஜர் மாவட்டம்.

**ஸ்ரீ வைஷ்ணவி எலக்ட்ரிக்கல்ஸ்,**
636, தென்காசி ரோடு ★ P.A.C.R. சிலை தென்புறம்,
**இராஜபாளையம்-626 117.**

A
V2;1196Kp,N94
N94



திரு. **பி. ஏ. சி. ராமசாமி ராஜா** அவர்கள்

ஸ்தாபகர் ராம்கோ நிறுவனம்

**(1894 - 1962)**

இராஜபாளையம்,

# ஸ்ரீ பி. ஏ. சி. ராமசாமி ராஜா நினைவு வரலாற்று

## அருங்காட்சியகம்.

P. நாராயண ராஜா,
உப-தலைவர், வரலாற்றுக்கள ஆய்வு மையம்,

இறையருள் கால்பகுதி என்றால் மனிதமுயற்சி முக்கால் பகுதியாகும், அமரர் திரு. P.A.C. **ராமசாமி ராஜா** அவர்கள் சீரிய முயற்சியாலும், ஊக்கத்தாலும், உழைப்பாலும் இறையருளாலும் பல தொழில்களை ஆரம்பித்து பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பை நல்கி புகழ்பட வாழ்ந்து தான் பிறந்த மண்ணிற்கும் நாட்டிற்கும் வளம் சேர்த்த பெருந்தகை.

. ஒளிமயமான அப்பெருந்தகையின் காலம் இராஜபாளையத்திற்கு ஓர் குன்றா விளக்காகத் திகழ்ந்து இன்று ஒரு தொழில் நகரமாக தலைநிமிர்ந்து நிற்கிறது. ஈட்டிய செல்வத்தை ஆக்கப் பணிகளுக்கும், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும், அறப்பணிகளுக்கும் செலவிட்டு நம் எல்லோரது உள்ளங்களிலும் குடிகொண்டுள்ளார்கள்.

மனிதன் அவன் செயலால் அறியப்படுகிறான் "Man is Judged by his Action" என்பார்கள். அமரர் **ராஜா** அவர்கள் உள்ளுவதெல்லாம் உயிர் உள்ளல் என்ற கருத்திற்கிணங்க பொதுநல வளர்ச்சியில் தன் வளர்ச்சியை பகிர்ந்து கொண்டார். அவரால் உயர்ந்தோர் பலர். அவர் சுதந்திரப் போராட்டத்திற்கு பொருள் உதவியும், பொருளாதார முன்னேற்றத்திற்கு ஆலைகளும், மக்கள் நன்மைக்கு பூபதிராஜா கூட்டுறவு வங்கியும், கல்விகலை வளர்ச்சிக்கு பள்ளிகளையும், ஸ்ரீ P.A. சின்னையராஜா உயர்நிலை பள்ளி, ஸ்ரீ ராம ராஜா கலைப்பிரிவு ஆகியவற்றை ஆரம்பித்தார்.

வரலாற்றில் **ராஜராஜ சோழன்** புகழுக்கு புகழ் சேர்க்க தனயன் **ராஜேந்திர சோழன்** தோன்றினான். அதுபோன்று அமரர் P.A.C. **ராமசாமி ராஜாவிற்கு** தனயனாக திரு. P. R. **ராமசுப்பிரமணிய ராஜா** தன் தந்தை புகழைக்காத்து புகழுக்கு புகழ்சேர்த்து வருகிறார்கள்.

திரு. P. R. **ராமசுப்பிரமணிய ராஜா** அவர்கள் நமது வரலாற்றுக்கள ஆய்வு மைய நிகழ்ச்சிக்கு முன்னிலை வகிப்பது குறித்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம். ஆக்கத்திற்கு ஊக்கம் தரும் அவரது வாழ்த்துக்களை பெரும்பேராக கருதுகிறோம்.

அமரர் திரு. P.A.C. **ராமசாமி ராஜா** அவர்களின் புகழுடம்பிற்கு வயது நூறு. இந்த நூற்றாண்டு தினத்தில் அன்னாரது சேவையை நினைவு கூறும் வகையில் எங்களது **வரலாற்று கள ஆய்வு மையம் அவரது பெயரால் ஸ்ரீ P.A.C. ராமசாமி ராஜா நினைவு வரலாற்று அருங்காட்சியகம்** இன்று துவக்கி இருக்கிறோம்.

அவர் புகழைத் தாங்கி நிற்கும்
இவ்வருங்காட்சியகம் சீரும்
சிறப்பும் பெற்று எங்கள் ஆய்வுப்
பணிகளின் சின்னமாக விளங்கும்
என்று உறுதி கூறுகிறோம்.

# காமராஜர் மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கம்

## வரலாற்றுக் கள ஆய்வு மையம்

## இராஜபாளையம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வரலாற்றுக் கள ஆய்வு மைய அறிக்கை | 1 - 3 |
| 2. | காமராஜர் மாவட்டத்துச் சமணச் சான்றுகள்<br>- டாக்டர் எ.ஏகாம்பரநாதன் | 4 - 10 |
| 3. | காமராஜர் மாவட்டத்தில் பழங்காலக் காசுகள் புதிய வரலாற்றுச் சான்றுகள்<br>- ஆர்.பாலச்சந்திரன் | 11 - 15 |
| 4. | இராஜபாளையம் வட்டார வரலாற்றுச் சான்றுகள் - M.வெங்கடேசன் | 16 - 18 |
| 5. | கூமாப்பட்டி மடைக்கல்வெட்டு<br>- கரு.இராசேந்திரன் | 19 - 20 |
| 6. | இசைத்தூண்கள் - Prof.T.மாரிமுத்து | 21 - 25 |
| 7. | திருத்தங்கள் கோயில் கல்வெட்டுக்கள்<br>- Prof.S. லலிதா | 26 - 33 |
| 8. | வட்டார வழக்கியலும் வள்ளுவர் வரலாறும்<br>Dr. S.பத்மநாபன் | 34 - 40 |
| 9. | மேஜர் பானர் மேன் செப்பேடு<br>வெ.மாணிக்கம் | 41 - 47 |
| 10. | காமராஜர் மாவட்டத்தில் சேதுபதி இனம்<br>Dr. S.M. கமால் | 48 - 53 |
| 11. | செவல்பட்டி குடைவரைக் கோயில் விநாயகர்<br>சீ.இலட்சுமணன் | 54 - 56 |
| 12. | அருப்புக்கோட்டை கல்வெட்டுக்கள்<br>P. சந்திரசேகரன் | 57 - 59 |
| 13. | அய்யனார் கோயில் - ஊர் ஆய்வு<br>K. அழகர் | 60 - 65 |
| 14. | The Socio. Cultural Aspects Gleaned from Andal's Pasurams<br>- Dr.V.Balambal | 66 - 73 |
| 15. | Gandhiji in Rajapalayam<br>- P.S.Chandraprabhu | 74 - 82 |
| 16. | The 1942 August Revolution - A Study<br>- V.Thiruppathiselvam | 83 - 89 |
| 17. | The Religious life of silavarus of Kamarajar District.<br>- B.Rajam | 90 - 92 |
| 18. | Heroes of Indian National Army in Kamaraj District.<br>- Dr.A.Subramanian | 93 - 97 |

## வரலாற்றுக் கள ஆய்வு மையம்
*************************

454-சி, தென்காசி ரோடு
இராசபாளையம் - 626 117

'காமராசர் மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு'

நாள் :- 12,13-03-'94.

### வரலாற்றுக்கள ஆய்வு மைய அறிக்கை

அன்புடையீர்,

உங்கள் அனைவருக்கும் மையத்தின் வரவேற்பும், வணக்கங்களும் சமர்ப்பிக்கப்படுகின்றன.

வரலாறு என்றால் அது ஓர் அரசர்கள், தங்களுடைய வீர பராக்கிரமங்களைக் காட்டுவதற்காக போரிட்ட பேர்களின் ஓர் அட்டவணை கட்டுரை என்ற காலம் காற்றில் கரைந்து போய் விட்டது. வரலாறு என்பது சுதந்திரத்துக்காக பாடுபட்டவர்களின் வாழ்க்கையும் ஓர் வரலாறே என்றும், வரலாறு என்பது நீர் நிலைகளின் ஓரத்தில் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டு, சமூகமாக தன்னை மாற்றிக் கொள்ள முயற்சி செய்த கற்கால மனிதனின் வாழ்க்கையும் ஓர் வரலாறே என்றும், கிராமங்களில் வாழ்ந்த குடியானவர்கள் கோவில்களோடும், நகரங்களோடும் சேர்ந்து வாழ்ந்து கொள்ள எங்ஙனம் பாடுபட்டனர் என்பதெல்லாம் ஓர் வரலாறே என்று சொல்லக்கூடிய காலம் இன்று வந்து விட்டது.

வரலாறு என்றால், அது ஆசிரியர்கள் மட்டுமே தெரிந்து கொண்டு போதிக்கக்கூடிய பாடம் என்ற நிலையும் கொஞ்சம் கொஞ்சமாக மாறிக் கொண்டு வருகின்றது. வரலாறு என்பது நெல் மணிகளை அள்ளித் தூவும் விவசாயிலிருந்து, இயந்திரங்களை ஓட வைக்கும் சிறுசிறு உழைப்பாளியிலிருந்து, மூலதனத்தை வைத்து சமுதாய முன்னேற்றம் காணத் துடிக்கும் முதலாளிகள் வரை படித்து, அறியத் துடிக்கும் ஓர் பாடமாக அது தற்சமயம் மாறிக் கொண்டும் வருகின்றது. அங்ஙனம் பழமையை அறியத் துடிக்கும் ஆர்வம் பரவலாக இன்று மக்களிடையே பரவிக் கொண்டு வருகின்றது. அங்ஙனம் திடீரென்று முளைத்துள்ள இந்த ஆர்வக் காய்ச்சலின் ஓர் பரிணாமமே வரலாற்றுக் கள ஆய்வு மையம், இராசபாளையம் என்ற ஓர் அமைப்பாகும். இந்த அமைப்பு பல்முனைப்பட்ட தரப்பு மக்களின் ஆர்வத்தன்மையினால் முகிழ்த்த ஓர் அமைப்பாகும். இந்த அமைப்பின் உறுப்பினர்கள் பல் வகைத் தொழில் செய்பவர்களாக உள்ளனர். இதிலும் ஓர் சிறப்பம்சம் இராஜபாளையம் நகரின் முக்கிய பிரமுகர்களான திருவாளர்கள் பி.ஆர். ராமசுப்பிரமணியராஜா, ஏ.ஏ. சுப்பராஜா, என்.ஆர். சுப்பிரமணிய ராஜா போன்றோர்களின் ஆர்வப் பாதுகாப்பில் செயல்பட

துவங்கிய ஓர் சிறுபறவையே வரலாற்றுக் கள ஆய்வு மையம் ( HISTORICAL EXPLORAION) இராஜபாளையம் என்ற அமைப்பாகும். இச்சிறு பறவைக்கு பறக்கச் சொல்லித் தர தமிழ்நாடு அரசு தொல் பொருள் துறையே முன் வந்திருக்கின்றதென்றால், வரலாறு இப்பொழுது எந்த ஓர் தனிமனிதர்களின் கட்டுப்பாட்டிற்குள் இல்லை என்பதனையும் நீங்களே அறிந்து கொள்ளலாம்.

வரலாற்றுக் கள ஆய்வு மையத்தின் பிரதான நோக்கம் முதன் முதலில் இராஜபாளையம் என்ற நகரத் தோற்றத்தின் ஆரம்பத்தினை அறிய வேண்டும் என்ற நோக்கத்தில் ஆரம்பித்து, அதனைச் சுற்றியிருந்த பல் ஊர்களையும் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது.

இராஜபாளையம்-தென்காசி சாலையிலிருக்கும் தேவதானத்தில், உழவு வேலை செய்வதன் பொருட்டு அப்பகுதியில் கிடைக்கும் முதுமக்கள் தாழிகளை அப்புறப்படுத்தி வருகின்றார்கள் என்று அறிந்து, அவ்விடம் முதலில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தேவதானத்து நெடும்பறம்பு என்ற பகுதியில் முதுமக்கள் தாழிகளை பொது மக்கள் பாழடிக்காதவாறு கேட்டுக் கொண்டு, அவைகளை முறையாக பரிசோதனை செய்தனர். அவைகளில் அந்த மக்கள் பயன்படுத்திய கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. மேலும் சிறு குழந்தைகள் அணியும் காலணிகளும் கண்டுபிடிக்கப் பட்டன. மேலும் இதைவிட முக்கியமான அந்த மக்கள் பயன்படுத்திய இரும்பு ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தேவதானம் என்ற ஊர் வரலாற்றில் நீண்டதோர் காலத்திற்குச் சொந்தமானது என்று அந்த ஊரிலிருக்கும் கோவிலை வைத்து கணக்கிட்டாலும், அந்த பகுதி சங்கு காலத்து மக்கள் குடியிருப்பாக இருந்திருக்கின்றன் என்று நம்முடைய ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

இதுபோலவே இராஜபாளையத்தினைச் சுற்றி இருக்கக்கூடிய புத்தூர் கிராமத்திலும் முதுமக்கள் தாழிகள் இருப்பதனையும் இந்த மையம் குறிப்பெடுத்துள்ளது. ஏன்? இராஜபாளையம் நகரிலேயே கொண்டனேரி பகுதியிலமுதமக்கள் தாழிகள் உள்ளன என்பதனையும் இம்மையம் குறிப்பெடுத்துள்ளது. முதுமக்கள் தாழிகள் தமிழ் நாட்டில் பரவலாக காணப்படுகின்றன என்று இவைகளை நாம் ஒதுக்கித்தள்ள முடியாது. ஏனென்றால் இவைகள் ஓர் வட்டார அளவின் வரலாறு என்ற ரீதியில் பார்க்கும் பொழுது அவைகள் அந்த வட்டாரத்து மக்களின் முந்தைய குடியிருப்புக்களாகத் திகழ்ந்து நெஞ்சத்தினை வருடுகின்றன என்பது ஓர் குறிப்பிட்டுப் பேச வேண்டிய விஷயமாகின்றது.

இராஜபாளையத்தினைச் சுற்றியுள்ள வரலாறு சங்க காலமான கி.மு.300 ஆண்டுகள் வரைதான் நீட்டிக்க முடியும் என்பது இதன் பொருளல்ல. புத்தூர் பகுதியில் நுண்ணிய கருவிகளைப் பயன்படுத்தி மக்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதுவும் அங்கு கிடைக்கப்பெறும் நுண்ணியல் கருவிகள் நமக்கு அறிவிக்கின்றன. நுண்ணியல் கருவிகளின் காலம். 10000 ஆண்டுகளுக்கு —

— முன்பு என்றிருக்கும் பொழுது, நம்முடைய காலில் மிதிபடும் இடம், முன்பாகவே மக்களின் குடியிருப்பு இடமாகயிருந்தது என்ற உணர்வே நம்மை திகிலடைய வைக்கின்றது. நம்மை ஆச்சர்யப்படவும் வைக்கின்றது.

இதனைவிட மெய்சிலிர்கவைக்கும் விஷயம் சோழபுரம் இடமாகும். சோழபுரம் என்பது இராஜபாளையம்-சங்கரன்கோவில் சாலையில் இருக்கும் இடமாகும். இங்கு சீனர்கள் நாணயமும், சீனர்கள் நாட்டு நுவணி பாண்ட ஒடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்கே வணிகர்கள் வசித்திருந்த ஒரு தெரு ஒன்றும் கல்வெட்டில் சொல்லப்படுகின்றது. ஒருவேளை, இங்கு வசித்த வணிகர்கள் சீனாவிற்கு சென்று வணிகம் நடத்தியிருப்பார்களோ, அல்லது சீனாவின்னச் சேர்ந்த வணிகர்கள் இங்கு வந்திருப்பார்களோ என்று கேட்கக் கூடிய அளவிற்கு சோழபுரம் இடம் நம்மை வியப்பிலாத்துகின்றது. இதனைவிட நம்மை வியப்பிலாத்துபவைகள் சோழபுரம் கோவிலில் காணப்படும் பிரமாண்டமான தூண்களும், மண்டப அமைப்பும் தூரத்திலிருந்து பார்த்தால் ஆயிரங்கால் மண்டப அமைப்புகளைப் போலத் தூண்களைக் கொண்ட சிவன் கோவில் இங்கு எத்தனை கலை நணுக்கம் கொண்ட சிற்பிகள் வந்து தங்கி யிருப்பார்கள், இவர்கள் எப்படியெல்லாம் யோசனை செய்து இதனை அமைத் திருப்பார்கள் என்று நினைக்கும் பொழுது இவர்கள் வாழ்ந்த காலத்திற்கே நாம் எல்லாம் செல்வது போன்ற உணர்வு ஏற்படுகின்றதல்லவா?

இந்த விழிப்புணர்வின் அடிப்படையில் அழகர் கோவில் மலையிலுள்ள பாறை எழுத்துக்களையும், குறிகளையும் கண்டிருக்கின்றார்கள். இந்த மையத் தார்கள். இறுவகள் இந்த மையத்தின் அதிகப் பருவான பணியின் காரணமாக முறையான ஆய்வுக்கு இன்னும் உட்படுத்தப்படவில்லை. இவைகளைத் தவிர மற்றும் சில தொல்லியல் சம்பந்தப்பட்ட இடங்களை திரு. விஜயவேணு கோபால் அவர்களும், திருத்தங்கல் பாலச்சந்திரன் அவர்களும் குறிப்பிட்டுள்-ளார்கள். அவைகள் இந்த மையத்தின் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப் படவிருக்கின்றன என்று கூறி பழமையையும், பண்பாட்டு உணர்வினையும் காக்கும் ஆர்வம் மக்களிடையே பெருக வேண்டும் என்றும், அதற்கு அரசும், நகரப் பிரமுகர்களும் தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டும் என்று கூறி தங்கள் பொற்பாதம் வணங்கும்.

இராசபாளையம் வரலாற்றுக் கள
ஆய்வு மையத்தார்.

*-*-*-*

## காமராசர் மாவட்டத்துச் சமணச் சான்றுகள்

டாக்டர் ஏ. ஏகாம்பரநாதன்,
தொல்லியல்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை - 05.

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகின்' தென்பகுதியாகிய பாண்டிய நாட்டில் கிறித்தவ ஊழி தொடங்கப்பெறுவதற்கு முன்பே சமண சமயம் சிறந்த நிலையில் இருந்திருக்கிறது. பாண்டியரது தலைநகராகிய மதுரையைச் சுற்றிவுமுள்ள மாங்குளம், அழகர்மலை, ஆனைமலை, அரிட்டாபட்டி, முத்துப்பட்டி, கொங்கர்-புளியங்குளம், திருப்பரங்குன்றம் முதலிய பல்வேறு இடங்களிலுள்ள குன்றுகளில் கி.மு. 2 ஆம் நூற்றாண்டிலிருந்தே சமணத்துறவியர் வாழ்ந்தமையைக் குறிக்கும் வகையில் குகைப்பள்ளிகளும், அவற்றில் கற்படுக்கைகளும், பிராமிக்கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன.[1] தென்பாண்டிய நாட்டில் மறுகால்தலை, குற்றாலம் முதலிய தலங்களிலும் இத்தகைய சான்றுகளைக் காண இயலும்.[2] ஆனால் பாண்டிய நாட்டிற்குட்பட்ட பகுதியாகிய இப்போதைய காமராசர் மாவட்டத்தில் கி.பி.8 ஆம் நூற்றாண்டிற்குப் பிந்திய தடயங்களே கிடைத்துள்ளன. இந்த சமணச் சான்றுகளின் வாயிலாக அறியப்பெறும் செய்திகளை ஈண்டுக் காண்போம்.

பண்டைக் காலத்தில் இப்பகுதியில் எந்தெந்த ஊர்கள் சமணத் தலங்களாக அல்லது சமண சமயத் தொடர்புடைய தலங்களாக இருந்தன என்பதை அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை. எனினும் எருக்கன்குடி, கோவிலங்குளம், பள்ளிமடம் ஆகிய ஊர்களில் சமண சமயச் சின்னங்கள் காணப்படுகின்றன. மேலும் சில தலங்களைப் பற்றிய குறிப்புக்கள் கோயில்ப்பட்டிக்கு அண்மையிலுள்ள கழுகுமலையில் பொறிக்கப் பெற்றிருக்கும் சமணச் சாசனங்களில் இடம் பெற்றிருக்கின்றன. இப்போது இந்தத் தலங்கள் எவையும் சமணக் கோயில்களை உடையனவாகவோ அல்லது சமணப் பெருங்குடி மக்கள் வசிப்பவையாகவோ திகழவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### 1. எருக்கன்குடி:-

சாத்தூர் வட்டத்தில் மாரியம்மன் வழிபாடு சிறப்பாக நடைபெற்றுவரும் எருக்கன்குடி பண்டைக் காலத்தில் இருப்பைக்குடி எனப்பெயர் பெற்றிலங்கியிருக்கிறது. இத்தலத்தில் கி.பி.9 ஆம் நூற்றாண்டில் சமணக் கோயிலாகிய பெரும்பள்ளி ஒன்றிருந்திருக்கிறது. பாண்டிய மன்னனாகிய ஸ்ரீமாறஸ்ரீவல்லபனது ஆட்சியின்போது (கி.பி.829) இம்மன்னனது அதிகாரியாகிய எட்டிச் சாத்தன் என்பவர் இருப்பைக்குடியில் கருவறை, மண்டபம் ஆகியவற்றையுடைய இக்கோயிலை எடுப்பித்ததாக அறியவருகிறோம். மேலும் இருப்பைக்குடிக்கிழவன் என அழைக்கப் பெற்ற இந்த எட்டிச் சாத்தன் இவ்வூரிலுள்ள பாழிக்குளத்தினைச் செப்பனிட்டுச் சீர்செய்தும் நற்பணிபுரிந்திருக்கிறார்.[3] மிக்கவாறும் முன்பே இவ்வூரிலிருந்த குளத்தினை இவர் செப்பனிட்டு, இங்கு கட்டிய கோயிலுக்கு அளித்திருக்கவேண்டுமாதலால், இந்தக்குளம் பள்ளிக்குரிய குளமாகக் (பாழிக்குளம்) கருதப்பட்டு வந்திருக்கவேண்டும்.

இருப்பைக்குடி கிழவன் கட்டிய பெரும்பள்ளி காலப்போக்கில்

முற்றிலுமாக அழிந்துவிட்டது. ஆனால் இக்கோயிலில் இடம் பெற்றிருந்த சாசனங்களைக் கொண்ட சில கற்கள் இவ்வூர்க் குளக்கரையில் நட்டுவைக்கப் பட்டிருந்ததாக அறியவருகிறோம். இவற்றிலுள்ள கல்வெட்டுக்களின் வாயிலாகத்தான் இங்கிருந்த சைனக்கோயிலைப் பற்றிய செய்திகள் தெரியவருகின்றன. இந்தக்குளமே கல்வெட்டு குறிப்பிடும் பள்ளிக்குரிய குளமாக இருக்குமாயின், பண்டைய சைனக்கோயில் இதற்கு அண்மையில்தான் இருந்திருக்கக்கூடும்.

2. கோவிலங்குளம்:

அருப்புக்கோட்டை வட்டத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புடைய தலங்களுள் கோவிலங்குளமும் ஒன்றாகும். இவ்வூர் பண்டைக் காலத்தில் கும்பனூர் எனப்பெயர் பெற்றிருந்திருக்கிறது. மேலும் இது வெண்புநாடு என்னும் நாட்டுப் பிரிவிற்குட்பட்ட செங்காட்டிருக்கை எனும் உட்பிரிவைச் சார்ந்த ஊராக விளங்கியிருக்கிறது.[4] இங்கு அம்பலப்பசுவாமி கோயில் எனப்பிற்காலத்தில் அழைக்கப்பட்டு வந்த கோயில் சமண சமயத்தைச் சார்ந்ததாக இருந்திருக்கிறது. இந்தக் கோயிலின் அடித்தளத்தைத் தவிர எஞ்சிய பகுதிகள் அனைத்தும் அழிந்து விட்டன. ஆதலால் இதன் நட்டிடக் கலையம்சங்கள் முதலியவை பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பில்லாமற்போய் விட்டது.

எனினும் இக்கோயிலின் அடித்தளத்தில் சோழர் காலத்தைச் சார்ந்த இரண்டு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவற்றிலிருந்துதான் இந்த சைனக் கோயில் பற்றிய சில செய்திகள்ள அறிய முடிகிறது. முதலாவது கல்வெட்டு கும்பனூர், குறண்டி, குன்றத்தூர், புத்தூர் முதலிய ஊர்களை உள்ளடக்கிய நிலப்பரப்பிற்குத் தலைவனாகத் திகழ்ந்த சோழகோன் என்பவனைப் புகழ்ந்து கூறும் பாடலாகும்.[5] இதன் முழுமையான வாசகங்களை அறிய இயலவில்லை. குறண்டி, குன்றத்தூர் ஆகியவை அருப்புக்கோட்டை, சாத்தூர் வட்டங்களிலுள்ள ஊர்களாகும். இக்கல்வெட்டு குறிப்பிடும் சோழகோன் இப்பகுதியை நிர்வகித்து வந்த ஒரு தலைவனேயன்றி சோழர்பரம்பரையில் உதித்த மன்னன் அல்லன். இவனுக்கும் இங்குள்ள கோயிலுக்கும் எவ்வகையில் தொடர்பிருந்தது என்பதனைக் கூறுவதற்கில்லை.

அடுத்துள்ள சாசனம் முதலாம் குலோத்துங்க சோழ மன்னனது 48 ஆவது ஆட்சியாண்டில் (கி.பி.1118) பொறிக்கப்பட்டதாகும். இது வெண்பு நாட்டில் செங்காட்டிருக்கைக்குட்பட்ட கும்பனூராகிய இவ்வூரில் முக்குடைநாதனாகிய அருகதேவனுக்கு (தீர்த்தங்கரருக்கு) பொன்னை ஒத்த விமானமும், மண்டபமும் கொண்ட கோயிலைத் தமிழ்மொழியில் புலமைபெற்ற 25 பேர்கள் தோற்றுவித்ததாகக் கூறுகிறது. மேலும் இவர்கள் இக்கோயிலுக்கு அருகக் கடவுள், யக்ஷி ஆகியோரது உலோகத்திருமேனிகளை திருவிழாவின்போது ஊர்வலமாக எடுத்துச் செல்லும் பொருட்டும் அளித்திருக்கின்றனர். இக்கோயிலுக்கு அருகில் கிணறு ஒன்றை வெட்டுவித்தும், அதற்கு அருகில் தண்ணீர்ப் பந்தல் ஒன்றை நிறுவியும், இந்தக் கோயிலின் வழிபாடு முதலியவற்றிற்கான செலவுகளுக்குப் பயன்படும் வகையில் சில நிலங்களைத்

தானம் செய்தும் நற்பணிகள் பலவற்றை இவர்களே புரிந்திருக்கின்றனர்.[6]

இந்தக் கல்வெட்டுக்களிலிருந்து கோவிலங்குளமாகிய கும்பனூரில் கி.பி.1118 ஆம் ஆண்டில் சைன சமயக் கோயில் ஒன்றினைத் தமிழ் மொழியில் ஆழ்ந்த புலமை உடையவர்கள் கட்டியிருப்பது தெரியவருகிறது. ஆனால் இக்கோயில் எந்த தீர்த்தங்கருக்காகத் தோற்றுவிக்கப்பட்டதென்று குறிப்பிடப்படவில்லை. இதற்கு அருகதேவன், யக்ஷி ஆகியோரது உலோகத் திருவுருவங்கள் அளிக்கப்பட்டிருப்பதிலிருந்து இக்கோயிலில் திருவிழாக்கள் கொண்டாடப் பெற்றிருப்பதும், அப்போது இறைத்திருமேனிகளை ஊர்வலமாக எடுத்துச் செல்லும் வழக்கம் இருந்திருப்பதுவும் தெரியவருகிறது. மேலும் பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் இங்கு தண்ணீர்ப் பந்தலும் நிறுவப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பாண்டியநாடு சோழரது ஆட்சியின் கீழ்க்கொணரப் பெற்றிருந்த காலை கட்டப்பெற்ற இக்கோயில் தொடர்ந்து பிற்காலம் வரையிலும் நல்ல நிலையில் இருந்தமையை அறிவிக்கும் வகையில் சான்றுகள் எவையும் இல்லை. இதுபோன்று இத்திருக்கோயில் எப்போது அழிவுற்றது என்பதையும் வரையறை செய்வதற்கில்லை. பொதுவாகப் பாண்டிய நாட்டில் கி.பி.11 ஆம் நூற்றாண்டிலிருந்து சமண சமயம் வீழ்ச்சியடைந்த போதிலும், ஓரிரு தலங்களில் இதற்குப் பின்னரும் சமணக் கோயில்கள் வழிபாடுடையனவாக இருந்திருக்கின்றன. அவற்றுள் ஒன்றாகத் திகழ்ந்த பெருமையுடையது கோவிலங்குளத்திலிருந்த பள்ளியாகும்.

3. <u>பள்ளிமடம் (குறண்டி)</u>

காமராசர் மாவட்டப் பகுதியிலுள்ள முதன்மை வாய்ந்த சமணத் தலம் அருப்புக்கோட்டை வட்டத்தைச் சார்ந்த பள்ளிமடம் என்னும் பண்டைய குறண்டியாகும். கி.பி.8 ஆம் நூற்றாண்டிலிருந்தே செல்வாக்கு மிக்கிருந்த இவ்வூரில் சமண சமயக் கோயிலும், மடமும் இருந்தனவென்று கூறப்படுகிறது. சமணக் கோயிலாகிய பள்ளியும், அதற்கு அண்மையில் மடமும் இருந்தமையால் இவ்வூர் பள்ளிமடம் எனப்பெயர் பெற்றிருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது.[7]

தென்பாண்டிய நாட்டிலுள்ள கல்வெட்டுக்கள் பலவற்றில் குறிப்பிடப் படும் குறண்டி என்னும் தலம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குறண்டி என்னும் ஊரேயாகும் என்று அண்மைக் காலத்தில் கருத்தொன்று கூறப்பட்டுள்ளது.[8] இக்கருத்து ஏற்புடையதல்ல. குறண்டி என்ற பெயரில் பல ஊர்களிருப்பினும் சமண சமயத் தொடர்பு உடையது அருப்புக்கோட்டை வட்டத்திலுள்ள தலம் மட்டும் தான்.[9]

வெண்பு நாட்டிலுள்ள இந்த குறண்டி கி.பி.8 ஆம் நூற்றாண்டிலேயே சமணத் தலமாகத் திகழ்ந்தமையைக் கழுகுமலையிலுள்ள சில சாசனங்கள் அறிவுறுத்துகின்றன. வெண்புநாடு என்பது அக்காலத்தில் அருப்புக்கோட்டை வட்டத்தின் பெரும்பகுதியையும் குறிப்பதாக இருந்திருக்கிறது. இக்குறண்டி யிலுள்ள சமணப்பள்ளியைச் சார்ந்த கனகநந்தி, பூரணச்சந்திரர், உறரச்

சந்திரதேவர், சிறுபட்டாரர் ஆகிய துறவியர் கழுகுமலைக்கு வந்து சமயப் பணி ஆற்றியும், தீர்த்தங்கரர்களை சிற்பங்களை வடிக்கத் துணைநின்றும் இருந்திருக்கின்றனர்.[10] இவர்களைப் போன்று இவ்வூரில் பிறந்த இல்லற நெறியாளர்களாகிய இயக்கன்காடி, கோவன்மிகன், இவரது மனைவி, நாகன்காலன், சாத்தன், குறண்டிகாவிதி ஆகியோரும் கழுகுமலையில் சிற்பத் திருப்பணிக்கு உதவி செய்திருக்கின்றனர்.[11]

கி.பி.8 ஆம் நூற்றாண்டிலேயே இக்குறண்டியைச் சார்ந்த துறவியரும், சிராவகப்பெருமக்களும் கழுகுமலைக்குச் சென்று அறப்பணி மேற்கொண்டிருப்பதிலிருந்து, அதற்கு முன்பே குறண்டி சமயச் சிறப்புடையதாகத் திகழ்ந்திருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. அந்த காலக் கட்டத்திலேயே இங்கு சைனக்கோயிலும், மடமும் இருந்திருக்கவேண்டும்.

இங்கிருந்த கோயிலும், மடமும் காலப்போக்கில் அழிந்திருக்கின்றன. அதன்பின்னர் இவற்றிலுள்ள கற்கள் இவ்வூரிலுள்ள காலநாதசுவாமி கோயிலின் (சிவன்கோயில்) கட்டுமானப் பணிகளில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தக் கற்களில் காணப்படும் சிதைந்த கல்வெட்டுக்களின் வாயிலாகத்தான் குறண்டியிலிருந்த சமணப் பள்ளியைப் பற்றிய செய்திகளை அறியமுடிகிறது.

இக்கல்வெட்டுக்கள் மாறஞ்சடையன் என்னும் பட்டப் பெயர் பூண்டிருந்த பராந்தக வீரநாராயணபாண்டிய மன்னனது ஆட்சியில் பொறிக்கப் பட்டவையாகும். இவற்றில் இங்குள்ள சமணக்கோயிலுக்கு ஆடுகள் தானமாக அளிக்கப்பட்ட செய்திகள் காணப்படுகின்றனவேயன்றி, கோயில் கட்டியமை, அதன் நிர்வாகம் போன்றவை பற்றிய தகவல்கள் எவையும் இடம் பெறவில்லை. கி.பி.892 ஆம் ஆண்டில் குறண்டியிலிருந்த காட்டாம்பள்ளி (கோயில்)யில் எழுந்தருளியிருக்கும் அருகக் கடவுள் திருவுருவத்திற்கு முன்பாகத் தினமும் விளக்கிடுவதற்குத் தேவையான நெய் கிடைக்கும் வகையில், குண்ணூரைச் சார்ந்த சாத்தன் குணத்தான் என்பவன் 100 ஆடுகளை வழங்கியிருக்கிறான்.[12] கி.பி.901 ஆம் ஆண்டில் தினமும் 5 நாழி நெய் கொடுக்கும் வகையில் 50 ஆடுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.[13] இவற்றைப் போன்று சாத்தன் காரி என்பவன் 50 ஆடுகளையும், திருநொந்தானம் எனும் ஊரைச் சார்ந்த பூவணவன் என்பவன் 75 ஆடுகளையும் வழங்கி கோயிலில் திருவிளக்கிடும்பணி சிறக்க வழிவகை செய்திருக்கின்றனர்.[14]

குறண்டியிலிருந்த சமணக் கோயிலும், அதனுடன் இணைந்திருந்த மடமும் பொதுவாகக் காட்டாம்பள்ளி என அழைக்கப் பெற்றிருக்கிறது. இவையன்றி இங்கு பெண் துறவியருக்கெனத் தனியாகவும் ஒரு பள்ளி(மடம்) இருந்திருக்கிறது. இது 'கன்னிமாரின் காட்டாம்பள்ளி' எனப்பெயர் பெற்றிருந்திருக்கிறது. இப்பள்ளியில் திருநொந்தானத்துப் பூவணவன் சில நற்பணிகள் புரிந்ததாகவும் அறியக் கிடக்கிறோம்.[15] இவன் எத்தகைய நற்பணிகள் செய்தான் என்பது பற்றியோ அல்லது இந்தப் பெண்பள்ளியின் செயல்பாடுகள் பற்றியோ அறிந்து கொள்வதற்கில்லை.

சமணசமயம் ஆடவர்களுக்கு மட்டுமின்றி, பெண்களுக்கும் சமயக் கல்வி புகட்டுவதில் முன்னுரிமை அளித்திருக்கிறது. தமிழகத்தில் குறண்டியிலும், வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள வேடலிலும் பெண்டிருக்கெனக் கல்வி புகட்டும் பள்ளிகள் இருந்திருக்கின்றன. வேடல் பள்ளியில் கனகவீரக்குரத்தி எனும் தலைமைப் பெண் துறவியும், துறவு நெறிபூண்ட 400 குரத்திகளும், 500 பெண் மாணாக்கிகளும் சமயக்கல்வி பயின்றிருக்கின்றனர்.[16] ஆண்துறவியர் வாழ்ந்த பள்ளிகளில் பெண் துறவியரும், மாணாக்கிகளும் சமயக்கல்வி பயின்று வந்திருந்தபோதிலும், பெண்டிருக்கென குறண்டியிலும், வேடலிலும் தனிப்பள்ளிகள் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். பெண்கல்விக்குச் சமணம் அளித்த முதன்மையை இது காட்டுவதாகும்.

<u>பிறதலங்கள்:</u>

காமராசர் மாவட்டத்தில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தலங்கள் மட்டுமின்றி, வேறு சில ஊர்களும் கி.பி.8, 9 ஆம் நூற்றாண்டுகளில் சமண சமயத் தொடர்புடையனவாகத் திகழ்ந்திருக்கின்றன. ஆனால் இவை எவற்றிலும் சமணசமயச் சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஊர்களைப் பற்றிய குறிப்புகள் கழுகுமலையிலுள்ள கல்வெட்டுக்கள் சிலவற்றில் காணப்படுகின்றன.

சாத்தூர் வட்டத்தின் கிழக்குப் பகுதியும், அருப்புக்கோட்டை வட்டத்தின் மேற்குப் பகுதியும் உள்ளடக்கியதாக இருந்த நாடு வெண்பைக்குடி நாடாகும். இதிலுள்ள ஒரு பேரூர் வெண்பைக்குடியாகும். இப்பேரூரைச் சார்ந்த பெண் துறவி தச்சன்சங்கக்குரத்தியாவார். இவரது மாணாக்கியாகிய விஜயக்குரத்தியும், இவ்வூர்வாசியான குமரன் என்பவரும் கழுகுமலையில் தீர்த்தங்கரர்களது சிற்பங்களைச் செதுக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர்.[17] இவர்களைப் போன்று படையனூர் முட்டத்தைச் சார்ந்த காரி என்பவரும் சிற்பத்திருப்பணி புரிந்துள்ளார்.[18]

சாத்தூர் வட்டத்தின் மேற்குப் பகுதி கருநீலக்குடி நாடு எனப் பெயர் பெற்றிருந்தது. இந்த நாட்டிற்குட்பட்ட கண்ணூரில் அவதரித்த சமணத்துறவி குண்ணூர் யோகியாராவார். இவரும், இவ்வூரைச் சார்ந்த சாத்தன் மறத்தான் என்பவரும் கழுகுமலையில் சமணச் சிற்பங்களை வடிக்கத் துணை நின்றிருக்கின்றனர். குண்ணூர் என்ற பெயர் பிற்காலத்தில் குன்றத்தூர் எனவும், தற்காலத்தில் குண்டலக்குத்து எனவும் மாற்றம் பெற்றிருக்கிறது.[19]

அருப்புக்கோட்டை வட்டத்தின் பெரும்பகுதியையும் உள்ளிட்டதாக இருந்த வெண்புநாட்டில் குறண்டி, கோவிலங்குளம் மட்டுமின்றி பேரெயிற்குடி, நால்கூர்க்குடி முதலியவையும் சமண சமயத்தவர் வாழ்ந்த தலங்களாகத் திகழ்ந்திருக்கின்றன. பேரெயிற்குடியைச் சார்ந்த சாத்தன்தேவன், தேவன் சேந்தன், சேந்தன்காரி ஆகியோர் கழுகுமலையில் சிற்பக்கொடை அளித்தவர்களுள் சிலராவர்.[20] இவர்கள் மிக்கவாறும் தந்தை, மைந்தன், பேரன் ஆகிய உறவினை உடையவர்களாக இருக்கக்கூடும்.

நால்கூர்க்குடியில் தோன்றிய பெண்துறவியருள் ஒருவர் அமலநேமி பட்டாரகர் என்னும் பெருந்துறவியின் மாணாக்கியாக விளங்கியவர். இவரும், இவ்வூரில் வாழ்ந்த அருள்துணை என்பவரது பெண்மக்களாகிய மணிநங்கை, மண்ணி ஆகியவர்களும், பொருள்துணை என்பவரும் தொட்டான் தருக்கி என்பவரும் கழுகுமலைப் பள்ளியில் சிறப்பத்திருப்பணி ஆற்றிய பெருமையுடையவர்கள்.[21] இவர்களுள் அருள்துணையும், பொருள்துணையும் அண்ணன்-தம்பி போன்ற உறவுடையவர்களாக இருக்கலாம்.

இதுகாறும் கூறப்பட்ட செய்திகளிலிருந்து காமராசர் மாவட்டத்தில் இருக்கன்குடி, கோவிலங்குளம், பள்ளிமடம் போன்ற தலங்களில் சமண சமயத்தவர் மிகுதியாக வாழ்ந்தமையால் இங்கு கோயில்கள் கட்டப்பெற்றிருக்கின்றன என்பது நன்கு புலப்படும். மேலும் இந்த மாவட்டத்திற்குட்பட்ட வெண்பைக்குடி, குன்னூர், பேரெயிற்குடி, நால்கூர்க்குடி முதலிய ஊர்களிலும் சமண சமயத்தினர் வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்றும், அவர்களுள் பலர் கழுகுமலைப் பள்ளியின் வளர்ச்சிக்குத் துணை நின்றிருக்கின்றனர் என்றும் தெரியவருகிறது. இந்த ஊர்களுள் சிலவற்றைத் தவிர எஞ்சியவை காலப் போக்கில் பெயர் மாற்றம் பெற்றிருக்கின்றன.

பாண்டிய நாட்டில் கி.மு. 2 ஆம் நூற்றாண்டிற்கு முன்பே சமண சமயம் வேரூன்றியிருந்த போதிலும், காமராசர் மாவட்டப் பகுதியில் மிகவும் தொன்மையான சமணச் சான்றுகள் காணப்படவில்லை. தென்பாண்டிய நாட்டில் மறுகால்தலை, குற்றாலம் ஆகிய இரு இடங்களைத் தவிர எஞ்சிய தலங்களாகிய திருச்சாரணத்துமலை, நாகர்கோயில், ஏறுவாடி, கழுகுமலை, மலையடிக்குறிச்சி, வீரசிகாமணி முதலியவற்றில் சமண சமயம் கி.பி. 8, 9, 10 ஆம் நூற்றாண்டுகளில் செல்வாக்கு பெற்றிருந்தது போல,[22] காமராசர் மாவட்டத்திலும் அந்த நூற்றாண்டுகளில்தான் இச்சமயம் தழைத்திருந்திருக்கிறது. அதற்குப் பின்னர் இங்கு சமணம் படிப்படியாக வீழ்ச்சியடைந்திருக்கிறது. இந்து சமயத்தின் எழுச்சி, சமணர்களின் பொருளாதார ஏற்றமின்மை, பிற்காலத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், நெருக்கடிகள் போன்ற பல்வேறு காரணங்களினால் தமிழகத்தின் தென்பகுதியில் ஆதரவற்ற நிலையில் வாழ்ந்த சமணப் பெருங்குடிமக்கள் படிப்படியாகத் தமிழ் மண்ணின் வடபகுதியாகிய தொண்டை நாட்டிற்குக் குடிபெயரலாயினர்.[22] காமராசர் மாவட்டப் பகுதியில் முன்பு வாழ்ந்த சமண சமயத்தவரும் இதற்கு விதிவிலக்காக இருந்திருப்பதற் இல்லை எனலாம்.

மேற்கோள்கள்:

1. I.Mahadevan, Corpus of Tamil-Brahmi Inscriptions. P.P. 3-12.
2. ANNUAL REPORT ON EPIGRAPHY (ARE) 407/1906, 25/1912
3. ARE, 334/1929-30
4. Ibid., 396/1914
5. Ibid., 397/1914

6. *Ibid.*, 397/1914

7. ஏ. ஏகாம்பரநாதன், *கழுகுமலையில் சமணம்* (1993) பக்.131

8. S. Padmanaban, "Jainism in Kanyakumari" *Jain Journal*, 1969, No.2 P. 48

9. R. Champakalakshmi, "Kurandi-Tirukkattampalli", *Studies in Indian Epigraphy*, Vol.II, 1975, p.48ff

10. *ARE*, 37,56,70/1894, 864/1917

11. *South Indian Inscriptions* (SII)
    Vol.5, Nos. 318, 332, 335, 336, 376, 381.

12. *ARE*, 430/1914

13. *Ibid.*, 431/1914

14. *Ibid.*, 428-A & B/1914

15. *SII*, Vol.14, No.35

16. *ARE*, 84/1908

17. *SII*, Vol.5, No.322, 395, 403

18. *Ibid.*, Vol.14, No.205

19. *ARE*, 50, 95/1984, also
    *கழுகுமலையில் சமணம்*, பக்.137

20. *ARE*, 21, 58, 96, 100/1894, SII. Vol.14, No.31

21. *ARE*, 62-68/1894

22. ஏ.ஏகாம்பரநாதன், *தென்பாண்டிய நாட்டுச் சமணக் கோயில்கள்*, பக்.62 (அச்சில்)

23. ஏ.ஏகாம்பரநாதன், *தொண்டை நாட்டுச் சமணக் கோயில்கள்* (1991), பக்.280.

# காமராசர் மாவட்டத்தில் பழங்காலக் காசுகள்

## புதிய வரலாற்றுச் சான்றுகள்

– ஆர். பாலச்சந்திரன்,
திருத்தங்கல்.

காமராசர் மாவட்டம் பண்டைய தமிழ்நாட்டில் பாண்டியர்களுக்கு உட்பட்ட பகுதியாக இருந்து வந்துள்ளது. பண்டைக்காலம் முதல் மக்கள் செழிப்புற்று வாழ்ந்த பகுதியாக இருந்து வந்துள்ளது. இப்பகுதி பற்றி பல இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் மூலம் அறியும் செய்திகளை மாவட்டத்தில் தற்போதைய தொல்லியல் தேடல்களில் கிடைத்த சான்றுகள் உறுதி செய்கின்றன. அத்தொல்லியல் சான்றுகளில் முக்கிய இடம் வகிப்பது பழங் காசுகள் என்றால் மிகையாகாது.

### திருத்தங்கல் – சங்ககாலப் பாண்டியர் காசு.

திருத்தங்கல் காமராசர் மாவட்டத்தின் பழம்பெரும் ஊராகும். இவ்வூரில் சங்ககாலப் புலவர்களாகிய தங்கால் முடக்கொல்லனார், தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார், தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனார், போன்ற புலவர்கள் வாழ்ந்துள்ளனர். சங்க இலக்கியங்களான நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு போன்ற இலக்கியங்களில் இவர்கள் இயற்றிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் சங்க மருவியகால சிலப்பதிகாரத்தில் கட்டுரைக் காதையில் திருத்தங்கல் ஊரைப்பற்றி எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு கிடைக்கும் –

– சங்ககால இலக்கியச் சான்றுகளை உறுதிப்படுத்தும் வகையில் தற்போது திருத்தங்கலில், பழைய தொன்மை குடியிருப்பு கண்டுபிடிக்கப்பட்டு இக்கட்டுரையாளரால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. திருத்தங்கல் செங்குளம் பகுதியில் இத்தொல்மேடு அமைந்துள்ளது. இம்மேட்டில் மேற்பரப்பாய்வில் சங்ககால கருப்பு சிவப்பு பானை ஓடுகள் அலைவரி ஓடுகள் உட்பட பலசான்றுகள் கிடைத்துள்ளன. அவைகளில் முக்கியமானவை சங்ககாலப் பாண்டியர் காசு[1] ஆகும். இக்காசு செம்பினால் ஆனதாகவும் செவ்வக வடிவினதாகவும் அமைந்துள்ளது. அதன் ஒரு பக்கம் குறியீட்டினாலான மீன்சின்னம் உள்ளது. அதன் மறுபக்கம் யானையின் உருவம் உள்ளது. குறியீட்டினாலான மீன்சின்னம் சங்ககாலப் பாண்டியர்களுக்கே உரியது. மேலும், அக்காசு கிடைத்த இடத்தின் அருகிலேயே மீன்குறியீட்டுச் சின்னம் பொறித்த பானை ஓடு[2] ஒன்றும் கிடைத்துள்ளது. சங்ககால இலக்கியச் சான்றுகளை இக்காசின் கண்டுபிடிப்பு உறுதி செய்கின்றது.

### இடைக்கால – பிற்கால பாண்டியர் காசுகள்

காமராசர் மாவட்டத்தில் விருதுநகர், சாத்தூர் வட்டப் பகுதிகளில் 40க்கும் மேற்பட்ட தொல்லியல் மேடுகள் மேற்பரப்பு ஆய்வு செய்யப்பட்டன. அவற்றில் சுக்கிரவாரப்பட்டி, குட்டப்புளி, பாணான்குளம், கோவிந்தநல்லூர்–கம்பத்தைப் பெருமாள் கோவில், கன்னிசேரி ஆகிய இடங்களில் கிடைத்த காசுகளில் பல பாண்டியர்கள் கால காசுகள் ஆகும். மீன்சின்னம் உள்ள காசுகள், 'சு' என்ற சுந்தரபாண்டியனின் உருவத்தில் மிகச்சிறியனவைகளாக உள்ளன. மேலும் பல காசுகள் அடையாளம் காணப்பெறாமல் உள்ளது.

சோழர் காசுகள்:

கி.பி.900-க்குப்பின் பாண்டிய நாட்டில் சோழர்களுடைய படையெடுப்பு இருந்து வந்துள்ளது. கி.பி.1020 முதல் 1070 வரை சோழ பாண்டியர்களில் ஆட்சியின் கீழ் பாண்டிய நாடு இருந்து வந்துள்ளது. இப்படையெடுப்புகள் பாண்டியர்களுடைய பங்காளிச் சண்டைகளாலும் பின் ஈழ நாட்டின் தலையீட்டினாலும் ஏற்பட்ட நிகழ்வுகள் ஆகும். மாரவர்மன் சுந்தரபாண்டியன் (1238-1251) ஆட்சிக்கு வரும்வரை சோழர்களுக்கு திரை செலுத்தியும் பாண்டியர்கள் ஆட்சி செய்துள்ளனர். இச்சோழர் களின் ஆட்சி பாண்டியநாடு முழுவதும் இருந்து வந்துள்ளது.

திருத்தங்கல், சுட்டப்புளி, கோவிந்தநல்லூர், வெம்பக்கோட்டை, மாறனேரி, ஆலமரத்துப்பட்டி, தாலோடைமேடு ஆகிய இடங்களில் சோழர்கால செப்புக்காசுகள் கிடைத்துள்ளன. இவைகளில் ஒருபுறம் நின்ற நிலையிலும், மறுபுறம் உட்கார்ந்த நிலையிலும் உள்ள மனித உருவம் காணப்படுகிறது.

ஈஞ்சார்-தடங்கண்ணி-இராஜராஜசோழன் காசு:

பாண்டிய பேரரசன் முதலாம் சுந்தரபாண்டியனின் அரசியல் அதிகாரியாக இருந்த "உய்யநின்றாடுவானாகிய குரு குலத்தரையன்" திருத்தங்கல் கோவிலை திருப்பணி செய்து கற்றளியாக கட்டியவன்-ஊர் தடங்கண்ணியாகும். இவ்வூர் தற்போது ஈஞ்சார் என்று அழைக்கப்படு கின்றது. இவ்வூருக்கு தென்மேற்கே உள்ள தொல்மேட்டில் சங்ககாலத் தொடக்கம் பிற்காலம் வரைபல தொல்சான்றுகள் கிடைத்துள்ளன. அதில் முக்கியமான ஒன்று இராஜராஜசோழன் காசு ஆகும். இக் காசின் ஒருபுறம் உட்கார்ந்த நிலையில் உள்ள மனித உருவத்தில் அருகில் "ராஜராஜ" என தேவநாகரி எழுத்தில் மேலிருந்து கீழாக பொறிக் கப்பட்டுள்ளது.

சங்கரபாண்டியம் ஈழக்காசு:

ஏழாயிரம்பண்ணை அருகில் உள்ள சங்கரபாண்டியபுரத்தில் களஆய்வின்போது ஈழக்காசு ஒன்று கிடைத்துள்ளது. இக்காசு சிறிதளவு பொன் சேர்க்கப்பட்ட வெள்ளிக்காசு ஆகும். இக்காசின் ஒருபுறம் ஈழமனிதன் நின்ற நிலையிலும் மறுபுறம் அமர்ந்த நிலையிலும் பொறிக்கப் பட்டுள்ளது. அமர்ந்த நிலையில் அமைந்த உருவத்தின் அருகில் நாகரி எழுத்தில் "லங்கவீர" என எழுதப்பட்டுள்ளது.

சோழர்களும், பாண்டியர்களும் பலமுறை ஈழத்துடன் போர்புரிந் துள்ளனர்வென்று ஆட்சியும் புரிந்துள்ளனர். ஈழத்து மன்னர்களும் தமிழக அரசியலில் தலையிட்டுள்ளனர். 11-ம் நூற்றாண்டாக இருக்கலாம் எனக் கருதப்படும் இக்காசின் கண்டுபிடிப்பு இந்நிகழ்ச்சிகளை உறுதிப்படுத்துகிறது.

**வாணாதிராயின் காசு:-**

வாணதிராயர்கள் ஆரம்பகாலத்தில் பாண்டிய மன்னர்களின் அரசியல் அதிகாரிகளாக விளங்கினர். முகமதியர் தாக்குதல்களினாலும் விஜயநகர படையெடுப்பிற்குப் பின்னும் பாண்டியர்கள் வலுவிழந்த நிலையில் இவர்கள் பல இடங்களைக் கைப்பற்றி ஆட்சி செய்து வந்துள்ளனர். திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதிராயன் (கி.பி. 1428-1477) மதுரையிலிருந்து ஆண்ட இவனது ஆட்சிப்பரப்பு பாண்டிய நாட்டில் தெற்கில் ஸ்ரீவில்லிப்புத்தூர் வரைக்கும் வடக்கே புதுக்கோட்டை மாவட்டத்தையும் உள்ளடக்கியதாக இருந்துள்ளது.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலுக்கு பல தானங்கள் வழங்கியுள்ளான் என்பதனை இக்கோவிலுள்ள கல்வெட்டுக்கல் மூலம் அறிய முடிகிறது.

**குன்னூர் - துலுக்கப்பட்டி-வாணாதிராயர் காசு:-**

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தில் உள்ளது குன்னூர். இவ்வூர் தொன்மைக் காலம் முதல் இக்காலம் வரை இருந்துவந்துள்ளது. ஸ்ரீமாரன் ஸ்ரீவல்லவன் தனது எதிரியை குன்னூரிலிருந்து சிங்களம் வரை துரத்தியடித்தான் என சின்னமனூர் செப்பேட்டிலும் தளவாய்புரம் செப்பேட்டிலும் கூறப்பட்டுள்ளது. முற்காலப் பாண்டியர் கால இருக்கன்குடி, குறண்டி கல்வெட்டுக்களில் கருநிலக்குடி நாட்டுக் குன்னூர் எனக் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு நீடுநிலை பெற்ற குன்னூருக்கு அருகில் உள்ளது துலுக்கப்பட்டி என்னும் சிற்றூர் அருகில் ஓடும் அர்ச்சுன நதிக்கரை தொல்லியல்மேடு கள ஆய்வின்போது மாவலி வாணாதிராயன் காசு[4] ஒன்று கிடைத்துள்ளது. ஒருபக்கம் கருடன் மறுபக்கம் சமரகோலாகலன் என எழுதப்பட்டுள்ளது.

வாணதிராயர்கள் ஆட்சிக்காலக் கல்வெட்டுகள் மூலம் அறிந்த செய்தியை மேலும் இவை உறுதிப்படுத்துகின்றது.

**விஜயநகர பேரரசு, நாயக்கர் காலக் காசுகள்:**

விஜயநகர ஆட்சியானது முகமதிய சுல்தான்களின் கொடுமையிலிருந்து இந்து மக்களைக் காப்பாற்ற தமிழகம் வந்தது. மதுரையில் சுல்தானியர்களை ஒடுக்கிவிட்டு தானே தனது பிரதிநிதிகளைச் கொண்டு ஆளத்தொடங்கியது. பிற்காலத்தில் அரசின் பிரதிநிதிகளாக இருந்து ஆட்சி செய்த நாயக்க மன்னர்கள் பேரரசின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு தானே ஆட்சி செய்யத் ஆரம்பித்தனர். ஆங்கிலேய ஆட்சி காலம்வரை பாண்டிய நாட்டில் நாயக்கர் கால ஆட்சி நீடித்தது. காமராசர் மாவட்டத்தில் விஜயநகர, நாயக்கர் காசுகள் சாத்தூர் வட்டம் திருத்தங்கல், சுக்கிரவாரப்பட்டி, கோவிந்தநல்லூர், பாணான்குளம், காரிசேரி ஆகிய இடங்களில் உள்ள தொல்லியல் மேடுகளில் கிடைத்துள்ளன. இங்குள்ள தொல்லியல் மேடுகள் குடியிறுப்புகள் நாயக்கர் காலம் வரை நீடித்து இருந்ததை இவை சான்றளிக்கின்றன.

இந்நாணயங்கள் பெரியனவும் சிறியனவுமாக உள்ளது. இந்த நாணயங்களை ஆய்வு செய்தால் நாயக்கர் கால மக்களின் பணப்புழக்கத்தை

நன்கு உணரமுடியும்.

## ஐரோப்பிய ஆட்சியாளர்கள்:-

15-ம் நூற்றாண்டின் கடைசியில் இந்தியா வந்த ஐரோப்பிய வணிகர்கள் ஆட்சியாளர்களாக மாறியபின் இந்தியாவை ஆளத்துவங்கினர். பிரஞ்சு, டச்சு, போர்த்துக்கீசியர், ஆங்கிலேயர்கள் இந்திய மண்ணில் போட்டியிட்டனர். ஆங்கிலேயர்களே கடைசியில் வெற்றியடைந்தனர். போர்த்துக்கீசியர்கள் மற்றும் பிரஞ்சுக்காரர்கள் சிலபகுதிகளை ஆண்டு வந்தனர். ஆரம்பகாலத்தில் அவர்கள் வெளியிட்ட காசுகள் தற்போது கிடைத்துள்ளன.

## பிரஞ்சுக் காசு:-

1642-ல் பிரஞ்சுக் கிழக்கிந்திய கம்பெனி உருவாகியது அது இந்திய மண்ணில் வெளியிட்ட செப்புக்காசு கோழிக்காசு என அழைக்கப் படுகிறது. (GALLIC COCK with date 1836 or 1837 இக்காசு ஒன்று திருத் தங்கல் ஆய்வின் போது கிடைத்தது. இது மிகவும் சிதைந்து காணப்படுகிறது ஒரு பக்கம் கோழி உருவம் தென்படுகிறது. மறுபக்கம் சரியாக தெரிய வில்லை.

## டச்சுக்காசு:-

இக்காசு வெம்பக்கோட்டை தொல்லியல் மேடு கல ஆய்வின் போது கிடைத்தது. ஒருபக்கம் V.O.C. என்ற எழுத்து உள்ளது. இதன் விளக்கம் டச்சு மொழியில் "Vereenigde Oost Indische Compagnie" Meaning "United East India Company" மறுபக்கம் அந்நாட்டு அரசின் சின்னம். சிதைந்த நிலையில் தெரிகிறது.

## ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் காசுகள்:-

நாயக்கர் கால ஆட்சிக்குப்பின் நிலைத்து நின்ற ஐரோப்பிய குழுக்களில் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியே முக்கியமானதாகும். ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவில் உறுதியாக காலூன்றி ஆட்சி செய்ய வாரம்பித்தது. அதன்பின் ஆங்கில அரசு ஆட்சியை கைப்பற்றிக் கொண்டது. 1947 ஆகஸ்ட் வரை ஆங்கில ஆட்சி நீடித்தது. ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் காசுகள் 1808, 1835 ஆண்டுகள் காசுகள் முறையே திருத்தங்கல் நென்மேனி ஆகிய பகுதிகளில் கிடைத்துள்ளன. 1808ம் ஆண்டுக் காசில் பிரிட்டிஷ் சின்னத்தைச் சுற்றி East India Company என எழுதப்பட்டுள்ளது. மறுபக்கம் உருது எழுத்துக்கள் உள்ளது. கீழே X CASH என எழுதப்பட்டுள்ளது. 1835ம் ஆண்டுக் காசில் அப்பக்கத்தில் 'HALF ANNA' என எழுதப்பட்டுள்ளது.

இவ்வாறாக இம்மாவட்டத்தில் கிடைத்துள்ள காசுகள் இம்

மாவட்டத்தின் வரலாற்றை எழுதுவதற்கு உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

அடிக்குறிப்புகள்:

1. இக்காசு தற்போது மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட்டு விட்டது.
2. இக்குறியிட்டு ஓடு மதுரை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது.
3. இந்த ஈழக் காசு சங்கரபாண்டியபுரம் கள ஆய்வின்போது திருமதி குருவம்மாள் அவர்களிடம் இருந்து பெறப்பட்டது.
4. துலுக்கப்பட்டி கள ஆய்வின் போது ஐ. முனியசாமி என்ற மாணவரிடம் பெறப்பட்டது.
5. Tamil Coins - Dr. R. Nagasamy. APP. XX

# இராஜபாளைய வட்டார வரலாற்றுச் சான்றுகள்

*********************************

எம். வெங்கடேசன், செயலர்,
வரலாற்றுக் கள ஆய்வு மையம்,
இராசபாளையம் 626 117.

இராசபாளையம் என்பது காமராசர் மாவட்டத்தில் இருக்கின்ற வட்டாரங்களில் ஒன்றாகும். இந்த வட்டாரமானது மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியைச் சார்ந்ததாகவும், பலகாட்டாறுகளான முடங்கியாறு, தேவநதி போன்றவை பாயக்கூடிய பகுதியாக இருக்கின்றமையால் இது வரலாற்றில் தொண்மை வாய்ந்த இடங்களைக் கொண்டதாகத் திகழ்கின்றது. இந்தொண்மை வாய்ந்த இடங்களை வரலாற்றுக் கள ஆய்வு மையம் இராசபாளையம் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தற்போது கீழ்க்கண்ட ஊர்கள் தொல் பழங்கால வரலாற்றை தெளிவு படுத்தியுள்ளன. அவைகளாவன சோழபுரம், கொல்லங்கொண்டான், கூனங்குளம், தேவதானம், சேத்தூர், புத்தூர், சிலம்பலபுரம், சுந்தரநாச்சியர்புரம்(எ) மேலப்புதூர், கீழ்புதூர் போன்றவைகளாகும். மேற்கண்ட ஊர்களில் கிடைத்த சான்றுகள் இராசபாளைய வட்டார வரலாற்றினை கீழ்க்கண்ட வரலாற்றுக் காலங்களுக்குச் சான்றாக இருக்கின்றன. 1. நுண்கற்காலம், 2. புதியகற்காலம், 3. பெருங்கற்காலம், 4. சங்ககாலம் போன்ற காலங்களுக்குச் சான்றுகள் இராசபாளைய வட்டாரத்தில் கிடைத்திருப்பதை குறித்து இக்கட்டுரை ஆய்வு செய்யும்.

## நுண்கற்காலம் (கி.மு.10,000-8,000)

நுண்கற்கால கருவிகள் புத்தூர், தேவதானம், சோழபுரம், கூனங்குளம் சுந்தர நாச்சியர்புரம் ஆகிய பகுதிகளில் கிடைக்கின்றன. ஆனால் புத்தூர் பகுதியில் (microlithic) என்றழைக்கப்படும் நுண்கற்காலக் கருவிகள் அதிகமாக கிடைக்கின்றன. தற்சமயம் இப்பகுதியில் கருவேலங் காடுகள் நிறைந்துள்ளன. மேலும் இப்பகுதி பெரிய மணல்மேடுள்ள ஓர் பெரிய விளையாட்டு மைதான அளவிலான பரப்பில் நுண்கருவி அதிகம் கிடைக்கின்றன. பிளேடு, ஸ்கிரப்பர் என்று அழைக்கப்படக்கூடிய கூர்மையான முனைகளை உடைய கற்கருவிகள் இப்பகுதிகளில் அதிகமாக காணப்படுகின்றன. மேலும் நுண்கற்கருவிகளைச் செய்கின்ற போது ஏற்படுகின்ற சில்லுகள் அதிகமாக காணப்படுகின்றமையால், இப்பகுதியானது அக்காலத்தில் இந்த சுற்று வட்டார மக்களுக்கு தேவையான நுண்கற்கருவிகளை செய்து கொடுத்த ஓர் தொழிற்சாலை மையமாக கூட இருந்திருக்கலாமோ என்று தோன்றுகிறது. பொதுவாக வரலாற்று அறிஞர்கள் நுண்கற்கருவிகளின் காலத்தினை 10,000 ஆண்டுகள் முதல் 8,000 ஆண்டுகள் என்று கணிக்கின்றார்கள். இக்கருத்தை ஆய்வு செய்கின்ற போது இராசபாளையம் வட்டார புத்தூர், தேவதானம், சோழபுரம், கூனங்குளம் ஆகிய கிராமங்களின் வயது தற்சமய ஆய்வின்படி 10,000 ஆண்டுகள் இருக்கலாம் என்று கணிக்கப்படுகிறது.

## பெருங்கற்காலம்:-

மேற்கண்ட அதே புத்தூரில் பெரிய பெரிய கற்களைப் பயன்

படுத்தி கல்வியல்கள் அமைந்துள்ள சான்றுகளும் காணப்படுகின்றன. இவை அனைத்தும் முதுமக்கள் தாழியினை உட்கொண்டவைகளாகும். ஆனால் ஒவ்வொரு முதுமக்கள் தாழியினைச் சுற்றியும் கல் குவியல்கள் காணப்படுகின்றன. இது கண்மாய் ஓரமாக அமைந்துள்ளன. வரலாற்றில் பெருங்கற்கால மக்கள் நீர்ப்பாசன வசதி முறையினை ஏற்படுத்தியவர்கள் என்ற கருத்து நில்வுகின்றது அந்த கருத்திற்கு இது ஓர் சான்றாக அமைகின்றது.

சங்க காலம்:- (கி.மு. 300-கி.பி.300)

தேவதானம் என்ற ஊர் இராசபாளையத்திலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவில் தென்காசிக்குச் செல்கின்ற சாலையில் அமைந்துள்ளது. இப்பகுதியில் மேற்பகுதியில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள "சாஸ்தா கோயிலுக்கு" செல்கின்ற வழியில் "நெடும்பறம்பு" என்ற பகுதியில் முதுமக்கள் தாழிகள் நிறைந்த "தாழிகாடுகள்" என்றழைக்கப்படுகின்ற ஓர் குன்றுப் பகுதியில் அதிகமாக காணப்படுகின்றன. இந்த தாழிகள் அகழ்ந்து நோக்கும் பொழுது சிறுசிறு மட்பாண்டங்கள் காணப்படுகின்றன. இந்த மட்பாண்டங்கள் பல வகைப்பட்டன. கிண்ணம், பாலைகள், குடுவைகள், சாடிகள் தாங்கிள் போன்றவைகளும் கிடைத்திருக்கின்றன. இப்பகுதி மக்கள் உலோகங்களையும் பயன்படுத்தினார்கள் என்பதற்குச் சான்றாக செம்பினால் ஆகிய சிறு குழந்தைகள் அணியக் கூடிய காலணிகள் கிடைத்துள்ளன. மேலும் இவர்கள் இரும்பினை உபயோகித்தார்கள் என்பதற்கு சான்றாக பலதரப்பட்ட ஆயுத வகைகள் கிடைத்திருக்கின்றன. சங்க காலம் என்றால் வீரயுகம் என்று இலங்கை ஆசான் கைலாசபதி குறிப்பிட்டுள்ளார். அவர் கூற்றினை மெய்ப்பிக்கக்கூடிய சான்றாக இரும்பு ஆயுதங்கள் இப்பகுதியில் காணப்படுகின்றது. இந்த மட்பாண்டங்களும், இரும்பு ஆயுதங்களும் முதுமக்கள் தாழிக்கு உட்பகுதியிலும் வெளிப்பகுதியிலும் வைக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டுக்கள் காலம்:-(கி.பி. 600 - கி.பி.1600)

கல்வெட்டுக்கள் காலம் இப்பகுதியில் அதிகமாக காணப்படுகின்றன. நக்கனேரி என்ற சிறு கிராமத்தில் ஒரு வட்டப் பாறையின் மீது மிகப் பழமையான ஓர் வட்டெழுத்துக் கல்வெட்டு காணப்படுகின்றது. இதனை ஆய்வு செய்த மதுரைப் பல்கலைக்கழக தனி அலுவல் திரு.விஜயவேணு கோபால் அவர்கள் இதன் காலம் கி.பி.961 என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

வெங்காநல்லூர் என்னும் கிராமத்தில் காணப்படும் சிவன்கோயில் ஒன்றில் பிற்காலப் பாண்டியர்கள் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இக்கோயிலுக்கு முன்பாக பெரிய நீண்ட கல்தூணில் கல்வெட்டுக்கள் வெட்டப்பட்டுள்ளன. இது இவ்வூரின் எல்லைகளை குறிப்பதாக தெரிகிறது.

கொல்லங்கொண்டான் என்றும் ஊரே பாண்டியர்கள் கொல்லத்தினை அதாவது கேரளப்பகுதியை கைப்பற்றிய பிறகு அந்த போரில் பங்கு கொண்டவர்கள் இந்த ஊரினை அதன் நினைவாக இப்பகுதிக்கு இப்பெயரினை வைத்திருக்கலாம். இப்பகுதியில் பெருமாள் கோயிலும் சிவன் கோயிலும் இருக்கின்றன இவைகளில் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

சோழபுரம் என்பது இராசபாளையத்திலிருந்து சங்கரன்கோவிலுக்குச் செல்கின்ற வழியில் சாலைக்கு மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. சோழபுரம் என்பது சோழர்கள் காலத்தில் சோழர்கள் படைகள் தங்குவதற்கு உருவாக்கியிருக்கலாம். இந்த இடத்தில் வணிகர்கள் வந்து தங்கியிருந்திருப்பார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. இப்பகுதியில் சீன நாணயமும், அத்தேசத்து மட்பாண்ட ஓடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சோழர்கள் காலத்தில் சீனாவுடன் வாணிக தொடர்புகள் கொண்டிருந்தார்கள் என்று சதாசிவ பண்டாரத்தார் குறிப்புகளிலிருந்து தெரியவருகிறது. ஒருவேளை சோழப்படையெடுப்பு இப்பகுதியில் நடைபெறும் பொழுது படை வீரர்கள் பழக்கத்திலிருந்து ஓடுகள் இங்கு சிதறியிருக்குமோ என்ற ஆய்வு செய்யத் தோன்றுகின்றது. ஒருவேளை சோழபுரத்திலிருந்து வணிகர்கள் சோழர்கள் காலத்தில் சீனாவுடன் வைத்திருந்த வணிக தொர்பின் காரணமாக அந்த நாணயங்கள் இங்கு சிதறடிக்கப்பட்டிருக்குமோ என்று ஆய்வு செய்ய இடமளிக்கின்றது.

முடிவுரை:

இச்சான்றுகளை ஆய்வு செய்கின்றபோது இராசபாளையமும் அதனைச் சார்ந்தப் பகுதிகளும் தொல் பழங்காலப் பகுதி என்றும், இது வரலாற்றுக் காலங்களில் தொடர்பு கொண்ட பகுதி என்றும் அறியப்படுகின்றது.

# கூமாப்பட்டி மடைக்கல்வெட்டு

கரு. இராசேந்திரன்
மேலப்பாளையம்.

மலைகளிலும் காடுகளிலும் உணவிற்காக அலைந்து திரிந்த மனிதன் ஒரு காலத்தில் ஆற்றுப்படுகைகளுக்கும் சமவெளிகளுக்கும் வந்து நிலையாக தங்கிவாழத் தலைப்பட்டான். அப்போது அங்கு மழைக்காலத்தில் பெருக்கெடுத்து ஓடும் பெரும்வெள்ளத்தைக் கண்டான். அதே சமயம் கோடையின் கொடிய வெம்மையின்போது சில இடங்களில் சில நேரங்களில் நீரில்லாதிருப்பதையும் பார்த்தான். தன் தேவைக்கு நீரைச் சேமித்து வைத்து கொள்ளலாமா எனச் சிந்தித்தான். விளைவு குடிநீர்க் குளங்கள் பாசனக் கண்மாய்கள், ஏரிகள், ஆற்றுக் கால்கள் என பலவகை நீர்நிலைகள் பழங்காலத்திலேயே நாட்டில் தோன்றலாயின.

இன்றைக்கு 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டது சங்ககாலம் என்பர். சங்க காலத்திலேயே தமிழர் குளம் தொட்டு வளம்பெருக்கி உழுதொழில் கண்டு உயர்வுகொண்டனர். சங்க இலக்கியங்கள் பல உழுதொழிலின் மேன்மையினை திறம்பட கூறுகின்றன. உழுதொழிலில் முக்கிய பங்காற்றுவது குளத்து நீர்ப் பாசனம் எனலாம்.

அ. "குளக் கீழ் விளைந்த களக் கொள் வெண்ணெல்" [2]

ஆ. "தெந் நீர்ச் சிறுகுளம்" [2]

இ. "நிறை குளப் புதவின் மகிழ்ந்தனென் ஆகி" [2]

ஈ. "அடு குளத்து உகுத்தும் அகல் வயல்பொழிந்தும்" [2] என்று புறப்பாட்டு பரிகளாலும்

உ. "காடு கொன்று நாடு ஆக்கி
குளம் தொட்டு வளம் பெருக்கி" [1] என்ற பட்டினப்பாலை
அடிகளாலும்.

ஊ. "தோள் தாழ் குளத்து கோடு காத்திருக்க" [3]
என்ற பெரும் பாணாற்றுப் படையின் வரிகளாலும் தமிழர் அக்காலத்திலேயே குளம் கண்டு வளம் படைத்தனர் என்பதை அறிகிறோம்.

நாட்டில் இன்றைக்கு பாசனக் குளம், குட்டை, ஏரி, ஏந்தல் கண்மாய் எனப்பல வேறு பெயர்களைக் கொண்டதாக வழங்குகின்றன. குளத்து நீர் வயல்களுக்குச் செல்வதற்குண்டான அமைப்புகள் மடை, குமிழி, மணவாளக்கால், குமரிக்கல் தூம்பு என்று பெயர்களை கொண்டதாக விளங்குகின்றன.

சங்ககாலத்தில் தொடங்கிய குளத்து நீர்ப்பாசனம் பல்லவர்கள் காலத்தில் வளர்ச்சி பெற்று, சோழர்கள் பாண்டியர்கள் காலத்தில் மேன்மையுற்று நாயக்க மன்னர்கள்காலத்தில் வெற்றிநடைபோட்டது எனலாம். அத்தகைய நாயக்கர் கால கல்வெட்டாக கருதக்கூடிய மடைக் கல்வெட்டு ஒன்றினை கீழே பார்போம்.

அருப்புக்கோட்டை காமராஜர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தைச் சேர்ந்த கூமாப்பட்டி வராகசமுத்திரம் என்ற பெரிய கண்மாயின் நடுமடைத்தூணில் உள்ள கல்வெட்டு ஒன்று இக் கட்டுரை ஆசிரியரால் கண்டு பிடிக்கப்பட்டது. கல்வெட்டு கி.பி.1552 ஆம் ஆண்டிற்கு உரியது. கல்வெட்டின் மேல் 4 வரிகள் கிரந்த எழுத்தாலும், கீழ் 7வரிகள் தமிழிலும் பொறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டில் தமிழிலுள்ள வரிகளில் "அந்தம்பர் கண்டன் உரிக்கோல் சுரத்தானன் வரிசைதர தும்பி சிறாயன் மடை" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. அந்தம்பர் கண்டன் உரிக்கோல் சுரத்தானன் என்ற விருதுப் பெயர்கள் விஜயநகரத்து மன்னர்களில் சிலருக்கும் இராமநாதபுரம் சேது மன்னர்களில் சிலருக்கும் இருந்து வந்ததை வரலாறு நமக்கு காட்டுகிறது. கி.பி.1552ல் சேது மன்னர்கள் ஆட்சி அமையவில்லையாதலால் இது அப்பகுதியினை ஆண்ட நாயக்க மன்னர் கல்வெட்டாக இருக்கலாம் என்று கருதலாம். இக் கல்வெட்டு கொண்டு சோழ பாண்டியர்களைப் போல் நாயக்கர்களும் நீர்ப்பாசன பணிக்கு ஆதரவு நல்கினர் எனலாம்.

| கல்வெட்டு | கிரந்த எழுத்துடன் |
|---|---|
| 1. சு ப ம ஸ் | 1) [handwritten Grantha] |
| 2. ச ்கா த் த ்ம் | 2) [handwritten Grantha] |
| 3. 1 4 4 4 | 3) [handwritten Grantha] |
| 4. விரு ஊ ம் | 4) [handwritten Grantha] |
| 5. ஆ வ ணி க. உ. | 5. ஆ வ ணி க. உ. |
| 6. அ ந் த ம் ப ர் | 6. அ ந் த ம் ப ர் |
| 7. க ண் ட ன் | 7. க ண் ட ன் |
| 8. உ ரி கோல் | 8. உ ரி கோ ல் |
| 9. சு ர த் தா ண ன் | 9. சு ர த் தா ண ன் |
| 10. வ ரி சை தர | 10. வ ரி சை தா |
| 11. தும்பி சு றா யன் | 11. தும் பி சி றாயன் |
| 12. மடை. உ | 12. மடை. உ. |

அடிக்குறிப்பு

1. பட்டினப்பாலை, வரி 283-284.
2. புறநானூறு - பாட்டு 33, 118, 142, 370
3. பெரும்பாணாற்றுப்படை - வரி 273
4. மதுரைக் காஞ்சி - 246
5. கள ஆய்வில் கண்டறிந்தவை.
6. சேதுபதி மன்னர் செப்பேடுகள் எஸ்.எம்.கமால் செப்பேடு 10, வரி-9, 11 - வரி11 12 வரி,13 15வரி9
7. ஆவணம் இதழ் 1 பக்கம் 38.

# இசைத் தூண்கள்

## தென் இந்தியத் திருக்கோவில்களில் காணும் ஓர் அறிவியல் கலை

பேரா. த. மாரிமுத்து, எம்.ஏ. (வரலாறு),
பி.ஜி.எல்., எம்.எஸ்.ஸி.,
எம்பில் (பி.எச்டி)
தலைவர் இயற்பியல் துறை,
ராஜூக்கள் கல்லூரி,
இராஜபாளையம்.

### முன்னுரை :

ஒலி, ஒளி அமைப்போடு தெய்வீக மணம் கமழும் தென்னிந்தியத் திருக்கோவில்கள் பல சிறப்புகளைப் பெற்றுள்ளன. கட்டிடவியல், பொறியியல், ஒலியியல் அடிப்படையில் அமைந்துள்ள கருவறை, தூண்கள் நிறைந்த மண்டபங்கள் தூண்கள் சுமந்து நிற்கும் மேல்விதானங்கள், வெளிப்பிரகாரங்கள், சந்துக்கள், சாளரங்கள் முதலியன கோவில் மணியோசை, மத்தள ஓசை குழலோசை, பக்தர்களின் இன்னிசைப் பாடல்கள் நிறைந்த ஒலி அலைகளை – ஒலி வெள்ளத்தை இரைச்சலாக்காமல் இன்னிசையாய் எதிரொலிக்கும் வகையில் அமைந்துள்ளன. தூண்கள் சுமந்து நிற்கும் சிற்பங்கள், சுவர்கள் ஏந்தி நிற்கும் சித்திரங்கள் கண்ணுக்கு விருந்தளிக்கும் நேரத்தில் மண்டபத்தின் முகப்பில் நிற்கும் இசைத்தூண்களின் தொகுப்பும் அமைப்பும் அறிவுக்கு விருந்தளிக்கும் ஓர் அறிவியல் கலையாகும். மீட்டினால் இன்னிசை பரப்பும் ஒருவகைக் கல் இசைக் கருவியாகும். இந்து மத கட்டிட கலையும் செயல்பாடும் இயற்கையாக அறிவியல் சார்ந்து விளங்கும் என்பதற்கு இசைத் தூண் ஒரு நிலையான சின்னமாக திகழ்கின்றது.

### இசைத் தூண்களின் வடிவ அமைப்புகள்

மண்டபத் தூண்களில் சிற்பங்களை, இலைக் கொடி போன்ற சித்திரங்களை வடித்து வடித்து அலுத்துப்போன சிற்பிகள் மையப் பெருந்தூணைச் சுற்றி சின்னஞ் சிறு தூண்களாக அமையும் வண்ணம் ஒரே கல்லில் இசைத்தூண்களை குடைந்து அமைத்தனர். இசைத் தூண்கள் ஒரே உயரமுடையவை, ஆனால் வெவ்வேறு சுற்றளவுகளை (விட்டங்களை) கொண்டவை, உருளையாகவும், பட்டையாகவும், திருகுபட்டையாகவும் பலவடிவங்களைக் கொண்ட இவைகள் உள்ளங்கையினால் தட்டினால் அல்லது சிறு கல் கொண்டு கொட்டினால் இன்னிசை எழுப்புகின்றன. அடிப்பாகமும் தலைப்பாகமும் ஒரே தளமாக இருப்பதினால் கல் கூரையின் அழுத்தம் எல்லாத் தூண்கள் வழியாகவும் செல்கிறது. எனவே ஒரு பெருந்தூண் இசைத் தூணாக குடைந்து எடுக்கப்படுவதினால் குறையும் தூணின் எடை குறைவு கல் கூரையை சுமந்து நிற்கும் அழுத்தத்தில் எந்த மாறுதலையும் ஏற்படுத்துவதில்லை.

## இசைத் தூண்கள் தற்செயலாக அமைந்த ஒன்றே!

இசைத்தூண்கள் திட்டமிட்டு அறிவியல், இயற்பியல், பொறியியல், தொழில் நுட்பவியல், கோட்பாடுகளை மையமாக வைத்து அமைக்கப்பட்ட தல்ல. மாறாக தற்செயலாக அமைந்து அநுபவ அறிவியல் போற்றும் அளவிற்கு வளர்ந்ததாகும்.

கோவில் அமைப்பு பற்றிய வேதிய, ஆகமநூல்கள் எதுவும் இசைத்தூண்கள் பற்றி குறிப்பிடவில்லை என இசைப் பேராசிரியர் சாம்பமூர்த்தி குறிப்பிடுகிறார். எனவே காஞ்சீபுரம், சிதம்பரம், தஞ்சாவூர், திருவாரூர், கும்பகோணம் போன்ற இடங்களில் காணும் பல்லவ, சோழப் பேரரசுகள் நிர்மானித்த கோவில்களில் இசைத்தூணைகள் காணப்படுவதில்லை.

## விஜயநகரப் பேரரசின் பங்கு

பதினான்காம் நூற்றாண்டில் தோன்றிய விஜயநகரப் பேரரசு காலத்தில்தான் இசைத்தூண்கள் கோவில் மண்டபங்களில் அமைக்கப்பட்டுள்ளன. விஜயநகர் அழிவுச் சின்னங்களைத் தாங்கி நிற்கும் உறம்பி (கர்நாடகம்) என்ற சிற்றூரில் காணப்படும் விருபக்ஷா விட்டலா கோவில் மண்டபங்களில் நூற்றுக்கணக்கான இசைத்தூண்கள் காணப்படுகின்றன.

## உறம்பி முதல் கன்யாகுமரி வரை உள்ள இசைத் தூண்கள்.

உறம்பி முதல் கன்யாகுமரி வரை பரவிக் கிடக்கும் இசைத்தூண்களை பரிணாம வளர்ச்சி அடிப்படையில் மூன்று வகையாகப் பிரிக்லாம். உறம்பி, லெபாக்ஷி, தாட்பத்ரி, திருப்பதி கோவில்கள் காணப்படும் இசைத்தூண்கள் முதல் வகையாகும். மதுரை, தாடிக்கொம்பு அழகர் கோவில், ஆவுடையார் கோவில் முதலியன இரண்டாம் வகையாகும். திருநெல்வேலி, தென்காசி களக்காடு, ஆழ்வார் திருநகரி, செண்பகராம நல்லூர், சுசீந்திரம் முதலியன மூன்றாம் வகையாகும்.

துங்கபத்ரா நதிக் கரையில் (உறம்பி) பிறந்த இசைத்தூண்கள் வைகைக் கரையில் (மதுரை) வளர்ந்து தாமிரபரணிக் கரையில் (நெல்லை) சிறந்தோங்கியது என்றால் மிகையாகாது. விஜயநகரப் பேரரசு ஆதரித்து உருவாக்கிய இசைத்தூண் சிற்பிகள் தெற்கே மதுரை (விஜயநகரப் பேரரசு ஆளுநர்) நாயக்கர் ஆட்சியில் வளர்ச்சியடைந்து பிற்காலப் பாண்டியர்களின் தென்பாண்டிச் சீமையாகும். திருநெல்வேலியில் சிறப்படைந்தார்க்ள். உறம்பி முதல் கன்யாகுமரி வரை எங்கெல்லாம் ஒலி உமிழும் கருங்கற்கள் கிடைத்தனவோ அங்கெல்லாம் வழிவழியாய் இசைத்தூண்கள் உருவாக்கிச் சென்றார்கள் என தென்னிந்தியத் திருக்கோவில் கட்டிடக்கலை வரலாறு விளக்குகிறது.

உறம்பியில் உள்ள இசைத்தூண் தொகுப்பு மூன்று அல்லது நான்கு, ஐந்து இசைத்தூண்களைக் கொண்டது. சுமார் ஒரு மீட்டர் உயரமுள்ள இவ்விசைத் தூண்களின் அதிர்வெண் மாறுபாடு சிறப்பான முறையில் இல்லை எனக் கூறலாம்.

## மதுரை வட்டார இசைத்தூண்கள்.

மதுரை வட்டார இசைத்தூண் தொகுப்புகள் சற்று சிறப்பாக அமைந்துள்ளன. மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆயிரங்கால் மண்டபத்தின் (அருங்காட்சியகம்) முகப்பில் உள்ள ஒரு இசைத்தூண் தொகுப்புகளும் திருநெல்வேலி வட்டார இசைத்தூண் தொகுப்புகள் போல் அமைந்துள்ளன. ஆனால் மொட்டைக் கோபுரத்தின் அடியில் வைக்கப்பட்டுள்ள ஐந்து இசைத் தூண் தொகுப்புகளும் குட்டையான இசைத் தூண்களைக் கொண்டவை. 1857-ல் இக் கோபுரம் கட்டப்படும் பொழுது இவ்விசைத்தூண் தொகுப்புகள் ஏதோ ஒரு சீரழிந்த மண்டபத்திலிருந்து எடுத்து வந்ததாகத் தெரிகிறது. எனவே இவ்விசைத்தூண் தொகுப்பிற்கு மேல் பாகத்தில் சுமையில்லை. அடிப்பாகம் அதை கொண்டு தரையுடன் பூசப்பட்டுள்ளது. தாடிக் கொம்பு இசைத்தூண்கள் சிறப்பானவை.

## திருநெல்வேலி வட்டார இசைத்தூண்கள்.

திருநெல்வேலி வட்டார இசைத்தூண்கள் தொகுப்புகள் எல்லா வகையிலும் மிகச் சிறந்தவைகள் குறிப்பாக நெல்லையப்பர் கோவில் இசைத் தூண்டுகள் மிக உயரமானவை. சுமார் 1.8 மீட்டர் உயரமுள்ள இவ் விசைத் தூண்கள் வீணையின் தந்தி போல் அதிர்கின்றன. காந்திமதி அம்மன் கோவில் முன் உள்ள இசைத்தூண் தொகுப்பிலுள்ள ஒன்று தூண்வில், போல், ஆணைபோல் அமைந்துள்ளது. ஆழ்வார் திருநகரி இசைத்தூண் தொகுப்புக்கள் மிகச் சிறந்தவை. இங்கு கல்நாதஸ்வரமும், சங்கு எக்காளம் போல் ஒலிக்கும். குழல் கருவிகளும் காணக் கிடக்கின்றன. சுசீந்திரம் இசைத்தூண் ஒன்று கடப்பாற்கம்பி போல் அமைந்துள்ளது.

## இசையியல், இயற்பியல் இசைத்தூண்:

இசையியல், இயற்பியல் பற்றி சில அடிப்படைக் கருத்துக்கள் இசைத் தூண்களின் அமைப்பு செயல்பாடு பற்றி புரிந்துகொள்ள உதவுகின்றன.

செவிப்பறையில் உணரப்படும் ஒலியே சுருதி எனப்படும். இச் சுருதி ஒலியின் அதிர்வெண்ணுக்கு நேர்விகிதமாகும். சுருதியின் இனிமையுள்ள எழுத்துக் களின் சேர்க்கை செவிக்கு விளங்குவதால் சுரம் எனப்பட்டது.

ச, ரி, க, ம, ப, த, நி – ஏழு சுரங்கள் சப்தகம் எனப்படும்

ச, ரி, க, ம, ப, த, நி, ச – எட்டுச் சுரங்கள் அட்டகம் எனப்படும்.

ஏழு சுரங்களை கர்நாடக இசையில் ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்தியமம், தைவதம், நிஷாதம் எனக் குறிப்பிடுவர். ஒவ்வொரு சுரத்திற்கு தனித்தனி அதிர்வு எண் அல்லது சுருதி உண்டு. சுரத்தை பலதான பேதங்கள் அடையச் செய்வது தான் சுருதி.

இசைத்தூண்கள் இவ்வேழு சுரங்களையும் தரவல்லனவா இசைக் கருவிகள் போன்று செயல்படும் தன்மையுள்ளனவா என்பதுதான் இவ்வாய்வின் தலையாய நோக்கமாகும்.

இசையியலையும், இயற்பியலையும் இணைத்து விளக்கம் தரும் திருமிகு. விபுலானந்த சுவாமிகளின் தமிழிசை நூலான "யாழ்நூல்" இசைத் தூண்கள் பற்றி விரிவாகத் தெரிந்துகொள்ள உதவுகிறது.

வீணை, யாழ், போன்ற இசைக் கருவிகள் எட்டுச் சுரங்களையும் தரவல்லன. வீணையின் ஒரே தந்திக் கம்பியில் நீளத்திற்கு ஏற்றவாறு அதிர்வெண்ணும் சுருதியும் மாற்றமடையும். யாழ் இசைக் கருவியில் நீளம் மாறுபட்ட பல தந்திகள் ஏழு சுரங்களையும் தரவல்லன.

இசைத்தூண் தொகுப்பு ஒரே கல்லில் அமைந்தது. ஒரே அழுத்தத்திற்கு உட்பட்டது. எல்லாத் தூண்களும் ஒரே உயரமுடையவை. ஆனால் வேறுபட்ட விட்டங்களை உற்றளவை உடையவை. எனவே தூண்களின் விட்டத்திற்கு ஏற்றவாறு அதிர்வெண்ணும் சுருதியும் மாற்றமடைகின்றன. இவ்விசைத்தூண்களை மீட்டினால் ஒவ்வொரு தூணும் வெவ்வேறு அதிர்வெண்ணோடு ஒலியை இன்னிசையை எழுப்பவல்லது.

"திடப்பொருளில் குறுக்கு அதிர்வு" என்ற ஒலியியல் கோட்பாடு இசைத்தூண்கள் உமிழும் சுரங்களை விளக்குகிறது. இவ்வதிர்வெண்களை மிகத் துல்லியமாக அளக்க மின் இயல் கருவிகளான கேத்தோடு ரே, ஆஸிலோஸ்கோப் ஆடியோ ஆசிலேட்டர் மற்றும் கம்ப்யூட்டர்களும் பயன்படுத்தப்பட்டன. இசைக்கருவிகள் போன்று இசைத்தூண்களில் ஏழு சுரங்களும் கிடைப்பதில்லை. மாறாக முதல் ஐந்து சுரங்கள்தான் (ச, ரி, க, ம, ப) கிடைக்கின்றன. என்பதைக் கீழ்காணும் அட்டவணை விளக்குகிறது.

| | | ச1 | ரி | க | ம | ப | த | நி | ச2 | ச1:ச2 | | சுருதி எண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | இசைக் கலவை | 256 | 288 | 320 | 360 | 384 | 426 | 480 | 512 | 1:2 | 1:2 | 22 |
| 2. | வீணை | 125 | | 240 | 235 | 282 | 300 | 337 | 355 | 1:2 | 1:2 | 23 |
| 3. | கிதார் | 278 | 298 | 330 | 350 | 390 | 443 | 493 | 530 | 1:2 | 1:2 | 21 |
| 4. | இசைத் தூண்கள் | 126 | 135 | 152 | 168 | [illegible] 176 | 1[illegible] | - | - | - | - | 13 |

இசைக் கருவிக்குரிய எட்டுச் சுரங்களும் 22 சுருதி என்னும் இசைத்தூண் தொகுப்பில் காணப்படாத காரணத்தினால் வீணை, சிதார் போன்று இசைத் தூண்கள் இசைக் கருவியாய் பயன்படாது என்பது உறுதியாகிறது. எனவே இசைத்தூண்களின் பயன் தான் என்ன?

இசைத்தூண் பயனும் நோக்கமும்.

திருநெல்வேலி, தென்காசி, ஆழ்வார் திருநகர் சுசீந்திரம் இசைத்தூண்களை ஆராய்ந்த போது ஒவ்வொரு கோவிலும் மாறுபட்ட பயனும் நோக்கமும் காணப்படுகின்றன. தென்காசி காசிவிஸ்வநாதர் கோவில் இசைத்தூண்கள் கணிதவியலையும் சீரமைப்பு முறையையும் முதலிடமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. ஆழ்வார் திருநகரி ஆதிநாத ஆழ்வார் கோவில் கண்ணாடி மண்டபத்திற்கு முன் அமைந்துள்ள இசைத்தூண் தொகுப்பு நடன நிகழ்ச்சியில் ஜதி பாடுவதற்காக பயன்படுகிறது என்பதை இசைத்தூண் தொகுப்புக்கள் எதிரே அமைந்துள்ள நடன பெண்களின் சிற்பங்கள் உறுதிப்படுத்துகின்றன. இவ்விசைத் தூண்கள் எல்லா இசைத் தூண்களையும்விட இனிமையான ஒலியை எழுப்பவல்லன.

சுசீந்திரம் தாணுமாலைப்பெருமாள் கோவிலுள்ள இசைத்தூண் தொகுப்புக்கள் அலங்காரத்திற்காக அமைக்கப் பட்டுள்ளன. இங்குதான் மிகச் சிறிய விட்டமுள்ள (4 செ.மீ.) இசைத் தூண்கள் உள்ளன.

கல் ஒலிபெருக்கி

திருநெல்வேலி, நெல்லையப்பர் கோவிலின் மணிமண்டபத்தில் உள்ள இசைத்தூண்களின் தொகுப்பு எல்லாக் கோவில்களையும் விட சிறப்பானது. இங்கு பலவிதமான பயன்களைக் காணலாம். மணி மண்டபத்தை அலங்கரிக்கவும், மணி மண்டபத்தில் நடக்கும் நடன நிகழ்ச்சிக்கு ஜதி வாசிக்கவும் பயன்படுவதோடு மணி மண்டபத்தின் மத்தியில் தொங்கும் காண்டார மணியின் ஒலி ஓசையைப் பெருக்குவதற்கும் இசைத்தூண்கள் பயன்படுகின்றன. மணி ஒலிக்கும் போது எல்லா இசைத்தூண்களும் ஒலி அலை, தாக்கத்தால் அண்டா, சிதார், அதிர்வது போல அதிர்கின்றன. இதன் காரணமாக மணியின் ஒலி ஆற்றல் பெருக்கப்பட்டு மண்டபத்தின் உயரே பக்கவாட்டில் தெற்கும் வடக்கும் அமைந்துள்ள இடைவெளி வழியாக கோவிலைச் சுற்றி ஒலி பரப்பப்படுகிறது. எனவே இசைத்தூண்கள் நிறைந்த மணி மண்டபம் கல் ஒலி பெருக்கியாய் செயல்படுகிறது என்பது தெளிவாகிறது. பல்வேறு அதிர்வெண்களைக் கொண்ட 158 இசைத் தூண்கள் அமைந்த இம்மணி மண்டபத்தின் அடிப்பாகம் வீணையின் பத்தல் போல் காணப்படுகிறது. மணி மண்டபத்தின் மேற்கூரை வீணையின் மேல்பகுதி போலவும், மணி ஓசையைப் பிரதிபலிக்கும் கிண்ணம் போலவும் அமைந்துள்ளது. மணி மண்டபத்தின் நடுவில் தொங்கும் காண்டார மணி

ஒலிப்பதால் ஏற்படும் ஒலி அலைகள் பெருக்கப்பட்டு கோவிலைச் சுற்றி வாழும் பக்தர்களுக்கு கோவில் மணியோசையை ஒலி பரப்பும் கல் ஒலி பெருக்கியாய் இசைத்தூண் நிறைந்த மணி மண்டபம் செயல்படுகிறது. என்பது இந்த ஆய்வின் முடிவாகும்.

## முடிவுரை:

இசைத்தூண் பற்றிய கருத்துக்களை அனைவரும் அறிந்து கொள்ளவும் இவ்வறிவியல் கலையைச் சிறிது தெரிந்துகொள்ளும் வகையில் இக்கட்டுரை தமிழில் தரப்படுகிறது.

பல்கலைக் கழக மானியக் குழுவின் நிதிஉதவியுடன் மேற்கொள்ளப்பட்ட பி.எச்.டி பட்டத்திற்கான இவ்வாய்வு தென்பாண்டி நாட்டுத் திருக்கோவில் களில் நான்கு கோவில்களை மட்டும்தான் எடுத்துக்கொள்ள முடிந்தது.

உறம்பி முதல் கன்யாகுமரி வரையில் உள்ள அனைத்துக் கோவில்களையும் எடுத்துக் கொண்டால்தான் இசைத் தூண்கள் பற்றிய முழுமையான விளக்கமான விளிவான ஆய்வை மேற்கொள்ள இயலும்.

இசைத் தூணின் சிறப்பு பய்றி ஓர் இசை மேதைதான் புரிந்துகொள்ள முடியும் என்பதற்கு 1.10.93 ஜூனியர் போஸ்ட் பத்திரிக்கையில் வெளியான வயலின் இசை மேதை திரு.லால்குடி ஜெயராமனின் கேள்வி பதிலே இதற்கு சான்றாகும்.

<u>கேள்வி:</u> இன்னும் செய்யமுடியவில்லையே என்று இப்போதும் கவலைப்படுகிற ஒரு சாதனை அல்லது செயல் என்ன?

<u>பதில்:</u> சில கல்தூண்களைத் தட்டினால் ஏழுசுரங்கள் வருவதாக சொல்வார்கள். உண்மையில் இதுவரை ஏழு சுரங்களை கல்தூணில் யாரும் கொண்டுவரவில்லை. சில கோவில்களில் இருக்கிற இசைத் தூண்களில் கூட ஒரிரு சுரங்கள்தான் வர்றது. ஆனால் முயன்றால் ஏழு சுரங்களை வரவழைக்க முடியும். திருவாரூரில் மும்மூர்த்திகள் வீட்டில் இரண்டு வருஷம் இதற்காக முயற்சி பண்ணினேன். என்னோட இந்த முயற்சிக்கு பெங்களூர் ஸ்தபதி ஒருவர் ரொம்ப உதவி செய்தார். நிறைய செலவு ஆனதுதான் மிச்சம். கல்தூணில் ஏழு சுரங்களைக் கொண்டு வர்றதுக்கு பல லட்சம் ரூபாய் செலவாகும் வருங்காலத்தில் மறுபடியும் முயற்சி செய்யலாம் என்று இருக்கிறேன். எவ்வளவோ மனசிருந்தும் பண வசதி இல்லாமல் செய்ய முடியவில்லை என்கிற வருத்தம் எனக்கு இப்பவும் உண்டு.

இந்த

ஏழு சுரங்களைத் தரக்கூடிய இசைத் தூண்களை இசைத்தூண் தொகுப்பை கம்ப்யூட்டர் உதவியுடன் எளிதாக மலிவாக உருவாக்க முடியும். இதற்கு தலை சிறந்த ஸ்தபதியான திரு.கணபதியின் தொழில் உதவியும், அரசு அல்லது ஒரு வள்ளலின் நிதி உதவியும் தேவை. இவ்வகை இசைத்தூண் தொகுப்பிற்கு முன்னமே முயற்சிகள் நடந்துள்ளன என்பதற்கு சுசீந்திரம், தாடிக்கொம்பு இசைத்தூண் தொகுப்பு ஓர் எடுத்துக்காட்டாகும். திரு.லால்குடி ஜெயராமனின் கனவும் திட்டமும் நனவாகும் வெற்றியாகும் என்பதற்கு சிறிதும் ஐயமில்லை என்பதை இக்கட்டுரையின் மூலம் தெரிவித்து மகிழ்வேன்.

# திருத்தங்கல் கோவில் கல்வெட்டுக்கள்

செல்வி சு.லலிதா, எம்.ஏ.,
எம்.எட்., எம்.பில்.
வரலாற்றுத் துறைத் தலைவர்
பராசக்தி மகளிர் கல்லூரி,
குற்றாலம் - 627802.

## முன்னுரை:

திருமால் வழிபாடு தமிழ்நாட்டில் மிகப்பழமையானதாகும். 'மாயோன் மேய காடுறை யுலகமும்' (1) என்று தொடங்கும் நூற்பா மாயோனைப் பற்றிய குறிப்பினைத் தருகிறது. திருமாலுக்கு ஆலயம் பழங்காலத்திலேயே அமைக்கப்பட்டிருந்தது என்பதையும் தமிழ் நூல்கள் மூலம் அறிய முடிகிறது. (2) பாண்டி நாட்டுத் திருப்பதிகள் பதினெட்டில் ஒன்றாக அமைந்திருப்பதுதான் திருத்தங்கல் ஊராகும்.

## திருத்தங்கல் ஊர்சிறப்பு

திருத்தங்கல் தமிழ்நாட்டில் காமராஜர் மாவட்டத்தில் விருதுநகரில் இருந்து சிவகாசி செல்லும் பாதையில் உள்ளது. இது சாத்தூர் வட்டத்தில் சிவகாசி யூனியனைச் சேர்ந்த சிற்றூர். இவ்வூர் பல வசதிகளும் பெற்ற அடிய இடம். இங்கு நூல் நிலையம், பஞ்சாயத்து யூனியன், மருந்தகம், தந்தி வசதியுடன் கூடிய தபால் நிலையம் போன்றன உள்ளன. மேலும் உயர்நிலைப்பள்ளியும், ஆரம்ப பள்ளியும் பாலர் பள்ளியும் உள்ளன.

இவ்வூர் திருத்தன்கால், திருத்தங்கல், திருத்தன்காலூர், ஸ்ரீசேத்திரம் என்ற பல பெயர்களால் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வூரில் பெருமாள் எழுந்தருளி சேவை தரும் கோயில் தங்கால மலையில் உள்ளது. இம் மலையிலேயே கிழக்கு பக்கம் கருநெல்லி நாதர் என்ற சிவபெருமானது ஆலயமும், பழனி ஆண்டவர் கோயிலும் உள்ளன. இங்ஙனம் ஒரே மலையில் சைவ, வைணவக் கோயில்கள் அமைந்திருப்பது சிறப்பு. இவ்வூர் மூர்த்தி, தீர்த்தம், தலம் ஆகியவற்றால் சிறப்புப் பெற்றது. இப்புனிதத் தலத்தில் ஐந்து புனிதநீர்த் துறைகள் உள்ளன. (3) இத்தலம் திருமங்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூன்று ஆழ்வார்களால் பாடப் பெற்ற சிறப்புடையது. (4)

## ஸ்ரீ நின்ற நாராயணப் பெருமாள் கோயில்:

ஸ்ரீ நின்ற நாராயணப் பெருமாள் கோயில் மலையின் மீது அமைந்துள்ளது. இத்தலத்தில் பெருமாள் நின்றும், கிடந்தும், அமர்ந்தும் தரிசனம் தருவது சிறப்பு. 108 திருப்பதிகளில் பெருமாள் நான்கு பிராட்டிகளுடன் எழுந்தருளியிருக்கும் தலம் இதுவாகும். இவ்வூரில் பத்தாம் நூற்றாண்டுக்கு முந்தைய கல்வெட்டுக்கள் எதுவும் இல்லை. இக்கட்டுரையில் திருத்தங்கல் மலையில் உள்ள கல்வெட்டுக்களிலிருந்து அறிய வரும் செய்திகளே ஆராயப் படுகின்றன.

## கல்வெட்டுப் பற்றிய செய்திகள் :-

திருத்தங்கல் மலையில் உள்ள முப்பத்தைந்து கல்வெட்டுக்கள் கல்வெட்டியல் துறையினரால் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் இரண்டு கல்வெட்டுக்கள் சோழர்கள் காலத்தையும் மற்றவை பாண்டியர்கள் காலத்தையும் சேர்ந்தவை. வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்றும், தமிழும் சமஸ்கிருதமும் சேர்ந்த கல்வெட்டு ஒன்றும், தமிழும் கிரந்தமும் சேர்ந்த கல்வெட்டு ஒன்றும், ஏனையவை தமிழ் மொழியிலும் உள்ளன. இரண்டு கல்வெட்டுகள் செய்யுள் வடிவில் உள்ளன. இவற்றுள் ஒன்று தமிழும் சமஸ்கிருதமும் கலந்த மொழியிலும் மற்றொன்று தமிழிலும் உள்ளது. ஒரே ஒரு கல்வெட்டில் மட்டும் சக ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றைய கல்வெட்டுக்களில் மன்னர்களின் ஆட்சி ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளது.

## கல்வெட்டுக்களில் வரும் நாடுகளின் பெயர்கள் :

மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி முதலாம் குலசேகர தேவன் (கி.பி.1268 - 1308) காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகளில் கருநிலக்குடிநாடு(5) என்னும் சடையவர்மன் என்ற குலசேகர தேவன் காலத்துக் கல்வெட்டுகளில் மதுரோதய வளநாடு(6) அரிநாடு(7) திருமலைநாடு(8) வேம்புநாடு(9) என்னும் சோழ மன்னன் பரகேசரிவர்மன் காலத்தைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டில் மல்லிநாடு(10) என்னும் குலோத்துச்சோழன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டில் மதுராந்தக வளநாடு, ராஜராஜப்பாண்டி நாடு(11) என்னும், திரிபுவனச்சக்கரவர்த்தி என்ற சுந்தரபாண்டியனின் கல்வெட்டில் இருஞ்ச நாடு, புங்கநாடு(12) என்ற நாடுகளின் பெயர்களும் குறிப்பிடப் பட்டுள்ளன.

## கல்வெட்டுக்களில் வரும் ஊர்பெயர்கள் :

சடையவர்மன் குலசேகரதேவன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டில் (கி.பி.1207) புலியோககந்தநல்லூர்(13) மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்து கல்வெட்டில் ஆனையூர், தென்னவன் சிற்றூர்(14) சுந்தர பாண்டியனின் கல்வெட்டில் (கி.பி.1227) தடங்கண்ணிச் சிற்றூர்(15) சடையவர்மன் குலசேகர தேவனின் கல்வெட்டில் அந்தணூர், சிறுகாம்பூர்(16) என்னும் ஊர்பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

## கல்வெட்டுக்களில் வரும் தேவதானங்களும், சதுர்வேதிமங்கலங்களும் :

பாண்டியரது ஆட்சிக் காலங்களில் சிவன் கோயில்களுக்கு இறையிலியாக அளிக்கப்பட்ட நிலம் தேவதானம் எனவும், திருமால் கோயில்களுக்கு அளிக்கப்பெற்றது திருவிடையாட்டம் எனவும், சைன பௌத்த கோயில்களுக்கு விடப்பெற்றது பள்ளிச்சந்தம் எனவும், பார்ப்பனர்களுக்கு அளிக்கப் பெற்றது பிரமதேயம், பட்டவிருத்தி எனவும்,

மடங்களுக்கு விடப்பட்டது மடப்புறம் எனவும், புலவர்கட்கு அளிக்கப்பட்டது புலவர் முற்றூட்டு எனவும், சோதிடர்களுக்கு அளிக்கப்பெற்றது கவி முற்றாட்டு எனவும் வழங்கப்பட்டன(17).

சடையவர்மன் என்ற குலசேகர தேவன் காலத்துக் கல்வெட்டில், நான்கு தேவதானங்களை இணைத்து, குலசேகர சதுர்வேதி மங்கலம் என்பதைத் தோற்றுவித்ததாகவும்(18), பிறிதொரு கல்வெட்டில் பராந்தகச் சதுர்வேதி மங்கலம் என்பது அரிநாட்டில் உள்ள பிரமதேயம் என்றும்(19) குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பத்மநாப சதுர்வேதி மங்கலம் என்பது இருஞ்ச நாட்டில் உள்ள பிரமதேயம் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. இவற்றின் மூலம் பாண்டிய மன்னர்கள் தேவதானங்களையும் சதுர்வேதிமங்கலங்களையும் ஏற்படுத்தி, தானதர்மங்களைச் செய்து வந்தனர் என்பதை அறியமுடிகிறது.

## கல்வெட்டுகளில் வரும் கட்டிடப் பணிகள்

மாறவர்மன் குலசேகர தேவன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டில் திருவரங்கதேவன் என்பவன் "திருவரங்க தேவன் திருமண்டபம்" கட்டுவதற்கு நிலத்தைத் திருத்தங்கல் கோயிலுக்குத் தானமாக கொடுத்ததாகத் தெரிய வருகிறது.(20)

முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கி.பி.1216-1238 முடிய மதுரை மாநகரில் முடிமன்னனாக வீற்றிருந்து பாண்டி நாட்டை ஆட்சி புரிந்தவன்(21) இவ்வேந்தன் காலத்தில் சோழன் உய்ய நின்றாடுவானாக குருகுலத்தரையன் என்பவன் அமைச்சராகப் பணிபுரிந்தவன். இவன் திருத்தங்கலிலுள்ள திருமால் கோயிலையும் சிவன் கோயிலையும் கி.பி. 1232ல் கற்றளியாக எடுப்பித்தவன், மேலும் இவன் கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகியவற்றைக் கட்டியதாகவும் அறிய வருகிறது.(22) இவன் அரசனால் வழங்கப்பெற்ற குருகுலத்தரையன் என்னும் பட்டம் பெற்றவன்.

மேலும் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் திருவரங்கத் தேவன் மகாபாரதம், இராமாயணம், புராணம் ஆகியவற்றைப் படிப்பதற்கு மடங்களைக் கட்டினான் என்றும் புலனாகிறது. அரசனின் பெயர் இல்லாத ஓர் கல்வெட்டில் சோழன் உய்ய நின்றாடுவானாக குருகுலத்தரையனுக்கு கோயிலைப் புதுப்பிப்பதற்கும் கல் மண்டபம் கட்டுவதற்கும், சில சலுகைகளை அளித்ததாகவும் அறிய முடிகிறது.(24)

## கல்வெட்டுகளில் வரும் திருவிழாக்கள்:

மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டில் திருவரங்கத் தேவனும் அவனது சகோதரனும் திருத்தங்கல் கோயிலுக்கு ஆண்டுதோறும் வைகாசி விசாகத்திருவிழா நடத்துவதற்கு நிலத்தைத் தானமாக வழங்கியுள்ளனர்.(25) மற்றொரு கல்வெட்டில் ஆதிரையன் என்பவன் ஆவணிமாதம் நடக்கும் ஜெயந்தி விழாவிற்கான வழிபாடு, நைவேத்யம்,

இறைவன் திருவீதி உலா வருவதற்கு ஆகும் செலவினை செய்வதற்கு நிலத்தைத் தானமாக வழங்கியுள்ளான்.(26)

குலோத்துங்கச் சோழனின் நாற்பத்திரண்டாம் ஆட்சி ஆண்டின் கல்வெட்டில் ஒன்றரை வேலி நிலத்தைவரி விதிப்பு இல்லாமல் இக் கோயிலுக்குத் தானமாகக் கொடுத்து அமாவாசை நாட்களில் கோயிலில் நடக்கும் வழிபாட்டிற்கும், இறைவன் திருவீதி உலாவிற்கும் ஆகும் செலவினைச் செய்வதற்குத் தானமாக நிலத்தைக் கொடுத்ததாக அறிய முடிகிறது(27) இதிலிருந்து மன்னர்களும், மக்களும் கோயில் திருவிழாக்கள் தடையின்றி நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்ததை அறிய முடிகிறது.

<u>கோயில் தொண்டில் மகளிர் ஈடுபாடு:</u>

சடையவர்மன் குலசேகர தேவன் காலத்தில் இரண்டு பெண்கள் இருபத்தைந்து ஆடுகளை இக்கோயிலுக்கு சந்தி விளக்கிற்காகப் பரிசாக அளித்துள்ளனர்(28) மேலும் செந்தாமரை மலர் மாலையினைத் கோயிலுக்குத் தினமும் கொடுப்பதற்காக உய்ய நின்றாடுபவன் என்ற உடையார் காளிங்கராயனின் மனைவி திருமங்கை ஆண்டாள் என்பவள் கேணியுடன் கூடிய நிலத்தைக் கோயிலுக்குத் தானமாக வழங்கியுள்ளாள். மேலும் இவளது கொடையினால் கோயிலின் செந்தாமலைக் குளம் சீராக பராமரிக்கப்பட்டது.(29) மேலும் கார்மார்ச்சானை எப்பெருமான், தாயார் விக்கிரகங்களை இக்கோயிலில் அமைத்து, இத்தெய்வங்களின் வழிபாட்டிற்கும், நைவேத்தியம் போன்ற இதர செலவுகளுக்கும் நிலத்தையும் வீட்டு மனையையும் தானமாக அளித்துள்ளார்.(30)

குலசேகர தேவன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றில் ஐம்பது ஆடுகளை நந்தா விளக்கிற்காக மகளிர் அளித்துள்ளனர்(31) என்பது அறிய வருகிறது. மேலும் வேம்பு நாட்டில் உள்ள வானவன் மகாதேவி சதுர்வேதி மங்கலம் என்ற பிரமதேயத்தைச் சார்ந்த ஒரு பெண் பதின்மூன்று ஆடுகளைச் சந்தி விளக்கிற்காகத் தானமாகக் கோயிலுக்கு அளித்துள்ளார்(32) என்பதும் தெரிய வருகிறது.

இவற்றிலிருந்து கோயிலில் பூசை, வழிபாடு, விக்கிரக ஆராதனை, தெப்பக்குளம், பராமரிப்பு, பூ மாலை வழங்குதல் விளக்கெரிய வைத்தல் ஆகியவற்றில் மகளிருக்கு இருந்த ஈடுபாட்டினைத் தெற்றென அறிய முடிகிறது.

<u>சிறப்பு சந்தி:</u>

கோயில்களில் நடைபெறும் தினசரிப் பூசைகளைத் தவிர சிறப்பு வழிபாடுகளும் நடந்தன. இதற்குச் சந்தி என்று பெயர். இச்சிறப்பு வழிபாடான சந்தி, அரச குடும்பத்தினர், உயர் பதவியிலுள்ள அலுவலர்

ஆகியோரால் தோற்றுவிக்கப்படுவதாகும். இச்சந்திகள் பெரும்பாலும் தோற்றுவிக்கப்பட்டவர் பெயராலேயே அழைக்கப்படும். திருத்தங்கல் கோயிலில் "சுந்தர பாண்டியன் சந்தி" என்ற வழிபாடு நாள்தோறும் நடைபெறும் பொருட்டு பாண்டியனின் அமைச்சரான குருகுலத்தரையன் தென்னவன் சிற்றூர் என்ற ஊரினை இறையிலியாக வழங்கியுள்ளான் (33) என்பது இக் கல்வெட்டுக்களின் மூலம் தெரிய வருகிறது. மேலும் குருகுலத்தரையன் தன் பெயராலும் ஒரு சந்தியை வழங்கினான் என்பது இவன் கோயிலுக்குள் நுழையும் பொழுது "குருகுலத்தரையன் வருகிறார்" என்று இசைக்கருவிகள் முழங்கின என்ற கல்வெட்டுச் செய்தியிலிருந்து அறிய முடிகிறது (34) மேலும் இச்சந்தியினால் இறைவன் தன் உணவிற்காக பிச்சை எடுப்பதைத் தடுத்து நிறுத்தினார் (35) என்று கல்வெட்டின் மூலம் அறிய வருகிறது.

## கல்வெட்டுகளில் வரும் முன்னுரை:

சடையவர்மன் திரிபுவன சக்கரவர்த்தி காலத்தைச் சேர்ந்த கல்வெட்டு "பூவின் கிழத்தி" (36) என்றும், மாறவர்மன் சுந்தர பாண்டியன் கல்வெட்டு "பூ மருவிய திருமந்தையும்" (37) என்றும் சடையவர்மன் என்ற ஸ்ரீ வல்லப தேவன் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டு "திருமடந்தையும் ஜயமடந்தையும் (38) போன்ற அழகிய முன்னுரையுடன் தொடங்கியுள்ளன.

## பிறசெய்திகள்:

குலசேகரதேவன் காலத்தைய கல்வெட்டில் "தேவேந்திர வல்லபப் பேரேரி" என்ற குளமும், குன்றப்பரக்கோல் (39) குன்ற பரைமேல் கரோல் (40) போன்ற அளவுகோல்களும் இருந்தனவாகத் தெரிகிறது. மேலும் கோயில் நிர்வாகத்தைக் கவனிப்பதற்கும் வரி வசூலிப்பதற்கும் பல சபைக்ள் இருந்ததாகவும் அறியமுடிகிறது (41) இது தவிர கோயிலின் நந்தா விளக்கிற்காகப் பாண்டிமண்டலத்திலுள்ளவர்கள் மட்டுமன்றி சோழமண்டலத்தைச் சேர்ந்தவர்களும் (42) நிலத்தை தானமாக அளித்துள்ளனர். ஆடு, பசு ஆகியவையும் கோயில் விளக்கிற்காகத் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் அரசன் கோயில் நிறுத்தத்திற்குச் சரிவர வரி செலுத்தாதவர்களை வரி செலுத்த உத்தரவிட்டதையும் அறிய முடிகிறது. (43)

## முகவுரை:

ஆராயப்பட்ட கல்வெட்டுகளின் மூலம் நாடு, ஊர்ப்பெயர்கள், திருவிழாக்கள், சமய வழிபாட்டில் மகளிரின் ஈடுபாடு, சிறப்பு பூசைகள் ஆகியவற்றை அறிய முடிகிறது. கோயில்கள் மன்னரிடமிருந்தும், மக்களிடம் இருந்தும் மானியம் பெற்றுள்ளன (44) என்ற கூற்று நியாயமானது என்பதை இக்கோயில் கல்வெட்டுக்கள் மூலம் உரைரலாம். திருத்தங்கல் பாண்டிநாட்டுத் திருப்பதிகளில் முக்கிய வைஷ்ணவத் தலமாக அன்றும் இன்றும் விளங்குகிறது என்றால் அது மிகையாகாது.

நன்றியுரை :

என்னுடைய இவ்வாய்வுக் கட்டுரை நன்முறையில் அமைய உதவி செய்த, ஊக்கம் அளித்த டாக்டர். சம்பத் தலைமை கல்வெட்டாய்வாளர் மைசூர் திருமதி.பங்கஜா சம்பத், கணிதத் துறைத் தலைவர், டாக்டர். சித்ரலேகா, தமிழ்த்துறைத் தலைவர், பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம் ஆசிரியோருக்கு என் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***********

## REFERENCE BOOKS


1. தொல்காப்பியம், அகத்திணையியல், 5.
2. 'நாடு பல கழிந்த பின்றை நீடுகுலைக்
காந்தளஞ்சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பம்பணைப் பள்ளி யமர்ந்தோ னாங்கண்'

பெரும்பாணாற்றுப்படை, 371 - 373
3. திருத்தங்கல் தல வரலாறு - தஞ்சை எல்.எஸ்.தாதாசாரியார், பி.ஓ.எல்., பக்.4.
4. இரண்டாம் திருவந்தாதி - 70 வது பாடல் - பூதத்தாழ்வார், பக்.362

ஐந்தாம் பத்து - ஆறாந்திருமொழி -
கைம்மான மழகளிற்றை - பக்.234
சிறிய திருமடல் - 71 வது கண்ணி வரி - 141 - 142
5. A.R.E.No. 540 of 1992 - 25 P.36
6. Ibid, No.543, P.36
7. Ibid, No.545, P.36
8. Ibid, No.553, P.37
9. Ibid, No.569, P.39
10. Ibid, No.557, P.38
11. Ibid, No.564, P.38
12. Ibid, No.572, P.39
13. Ibid, No.543, P.36
14. Ibid, No.549, P.36
15. Ibid, No.554, P.37
16. Ibid, No.559, P.38
17. S.I.I., Vo.III, PP.454 - 458, Ibid, Vol. V.No.301
18. A.R.E., No.543 of 1922 - 25, P.36
19. Ibid, No.545, P.36
20. Ibid, No.540, P.36

21. Ep. Ind., Vol. VIII, Appendix II, P.24
22. A.R.E. 554, 575 of 1922, A.R.E. for 1923 part II, Paras 49 & 50
23. A.R.E. No.546, of 1922-25, P.37
24. Ibid, No.554, P.37
25. Ibid, No.556, P.38
26. Ibid, No.565, P.38
27. Ibid, No.564, P.38
28. Ibid, No.558, P.38
29. Ibid, No.559, P.38
30. Ibid, No.562, P.38
31. Ibid, No.567, P.39
32. Ibid, No.568, P.39
33. Ibid, No.548, P.37
34. Ibid, No.575, P.39
35. Ibid, No.543, P.36
36. Ibid, No. —— P.110
37. Ibid, No.549, P.37
38. Ibid, No.555, P.38
39. Ibid, No.540, P.36
40. Ibid, No.541, P.36
41. Ibid, No.544, P.36
42. Ibid, No.560, P.38
43. Ibid, No.553, P.37
44. A.R.E. No.283 of 1909, 66 of 1932 - 33.

***********

# வட்டார வழக்கியலும் வள்ளுவர் வரலாறும்

-டாக்டர் எஸ். பத்மநாபன்,
பொதுச்செயலர், கன்னியாகுமரி
வரலாற்றுப்பண்பாட்டு ஆய்வுமையம்,
நாகர்கோவில்.

வட்டார வழக்கியல் என்பது அந்த வட்டார மக்கள் நாவிலே தவழும் சொற்கள், அவர்களது நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். ஒரு சமுதாயத்தின் பண்பாட்டில் அதன்கண் காணப்படும் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் அம்மக்கள் பயன்படுத்தும் சொற்களும் மிக முக்கியமான அங்கத்தை வகிக்கின்றன. ஒரு சமுதாயத்தின் உண்மையான வரலாற்றையும் பண்பாட்டையும் அறிய வேண்டுமாயின் அந்தச் சமுதாயத்தின் பழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும் அம்மக்கள் பயன்படுத்தும் சொற்களையும் ஆராய வேண்டும். இவையே சமுதாயத்தின் பண்பாட்டினை அப்படியே படம் பிடித்துக் காட்டும் தன்மை கொண்டவை. வட்டார வழக்கியல் ஆய்வு இன்று மேல்நாட்டில் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. ஆனால் பாரத நாட்டில் குறிப்பாகத் தமிழகத்தில் வட்டார வழக்கியலை வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்ள தயக்கம் காட்டுகின்றனர். தமிழகத்தில் வட்டார வழக்கியல் ஆய்வு வளர்ச்சியடைந்தால் தமிழ்ப் பண்பாட்டின் உண்மையான வரலாற்றினை அறிய பெருந்துணையாக இருக்கும்.

வட்டார வழக்கியலில் பேச்சு வழக்கும் ஒன்று. பேச்சு வழக்கு என்பது இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப வழங்கப்பெறும் மொழியியக்கமாகும். ஓரிடத்தில் வழங்கும் சொல் பிறிதோரிடத்து வழங்காமையும், ஒரு காலத்து வழங்கும் மொழி பிறிதொரு காலத்து வழங்காமையும் காண்கிறோம். இந்த உண்மையை தொல்காப்பிய உரையில் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். (தொல் - பொருள். 39 648) வட்டார வழக்குகளை கிளைமொழிகள் ( Dialect ) என்றும் கூறுவர். ஓர் இடத்தார் அல்லது ஓர் இனத்தார் அல்லது ஒரு வட்டத்தைச் சார்ந்தவர் தமக்குள் தங்குதடையின்றி இயல்பாகப் பேசிவரும் மொழியே திசை மொழியாகும். மாவட்டம்தோறும் இம்மொழி வேறுபாடுகளைக் காணலாம். இதுபற்றிய ஆய்வினை திசை வழக்கியல் ( dialectology ) என்று கூறுவர். ஒருவன் பேசும் மொழியை வைத்து அவன் இந்த மாவட்டத்தைச் சார்ந்தவன் என்று கூறிவிடலாம். இந்த அடிப்படையில் எழுந்ததுதான் "உன் பேச்சே உன்னைக் காட்டி விடும்" என்ற விவிலிய வாக்கு (மத். 27:23)

ஒருவன் வாழைப்பழம் என்று கூறினால் அவன் குமரி மாவட்டத்தைச் சார்ந்தவன் என்று கூறிவிடலாம். ஒருவன் வாழைப்பளம் என்று கூறினால் அவன் மதுரை மாவட்டத்தைச் சார்ந்தவன் என்றும், வாயப்பயம் என்றால் சென்னையைச் சார்ந்தவன் என்றும் கூறமுடியும். "உசுப்பினாள்" என்பது நெல்லை மாவட்ட வழக்கு, "மட்ட (குறைந்த) வயதென்றேன்" என்பது இராமநாதபுரம் வழக்கு "துச்சனமாசி (காயம்) விட்டால்" என்பது மதுரை மாவட்ட வழக்கு. "என்ன விடை (பரிசு) கொடுத்தார்?" என்பது தஞ்சை மாவட்ட வழக்கு. "பத (பெரிய) மழை வருகுது" என்பது

திருச்சி மாவட்ட வழக்கு. "ஊளை (கெட்ட) முட்டை" என்பது கோவை வழக்கு. "சதுராக (அழகாக) கூட்டிடுங்கோ" என்பது தர்மபுரி மாவட்ட வழக்கு; "ஒரு கண்ணும் நொள்ளையா (குருடு)" என்பது சேலம் வழக்கு, "தாங்கல் (சிறுகுளம்) வற்றிப் போனது" என்பது செங்கல்பட்டு மாவட்ட வழக்கு. "ஆத்தேண்டி (உலர) உள் கூந்தலை" என்பது சென்னை வழக்கு. இவ்வாறு பேச்சு வழக்கினை வைத்து பேசுபவர் எந்தப் பகுதியைச் சார்ந்தவர் என்று கூறிவிட முடியும்.

வட்டார வழக்கியலில் மரபு ஒரு தனி அங்கமாகும். பழக்க வழக்கங்களைத் தனி மனிதனும் சமுதாயம் என்ற அமைப்பும் இணைந்து உருவாக்குகின்றன. மனிதனது தேவைகளின் அடிப்படையில் பழக்கங்கள் தோன்றுகின்றன. அவை சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற நிலையில் வழக்கங்களாக உருப்பெறுகின்றன. அதுவே பின்னர் மரபு எனப்பட்டது.. எழுதப்படாத சட்டமேமரபு. மரபு என்பது வழக்கமாகத் தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்படுவது எனப் பொருள்படும். ஒவ்வொரு சமுதாயமும் தனக்கென சிலத்தனித்த மரபுகளைக் கொண்டிருக்கக் காண்கிறோம்.

பழக்கம், வழக்கம், மரபு என்ற சொற்கள் ஒன்றோடொன்று உறவுடையன. ஒன்றன் வளர்ச்சி நிலையே மற்றொன்றின் தொடர்ச்சியாக அமைகின்றது. வலது கை கொண்டு எழுதுவது பழக்கமாகி அதுவே சமுதாய வழக்கமாகி பின்னர் சமுதாய மரபாயிற்று. திருமணம் பெண் வீட்டில் நிகழ்த்துவது வழக்கம். அதுவே வழக்கமாகி பின்னர் சமுதாயத்தின் மரபாயிற்று. பழக்க, வழக்க, மரபுகள் எளிதில் மாற்ற முடியாதவை. அவை கால, இட, சூழ்நிலை அமைவுகளுக்குத் தகுந்தபடி உருப்பெறுவன. அவ்வாறு உருப்பெறும் மரபுகளே சமுதாய நியதிகளாகக் கருதப்படுகின்றன. எனவே பழக்கம் என்பது தனி மனிதனைச் சார்ந்ததென்றும், வழக்கம் என்பது சமுதாயத்தைச் சார்ந்தது என்றும் மரபு சமுதாயம் விதிக்கும் கட்டுப்பாடு என்றும் கூறலாம். மேலும் பழக்கம் என்பது தொடக்க நிலையாகவும், வழக்கம் என்பது தொடர் நிலையாகவும், மரபு பண்பாட்டின் முதிர்நிலை எனவும் வகைப்படுத்தலாம். தனி மனிதப் பழக்கங்களே காலப்போக்கில் சமுதாய வழக்கங்களாக உருப்பெற்று தலைமுறை தலைமுறையாக நிலைத்து வாழ்வுபெறும் நிலையில் மரபுகளாக நிலைத்து நிற்கின்றன. அவ்வாறு நிலை பெற்ற பழக்க வழக்கங்கள் ஒரு சமுதாயத்தின் ஓர் இனத்தின் வரலாற்றை அறியப் பயன்படுகின்றன.

வரலாற்று மூலங்கள் கிடைக்க வாய்ப்பில்லாத இடங்களில் வட்டார இலக்கியங்கள் அதாவது நாட்டார் இலக்கியங்கள் வரலாறு எழுத துணை புரிகின்றன. இராமப்பய்யன் அம்மானை மற்றும் இரவிக்குட்டிப் போர் கதைப்பாடல்கள் கி.பி.பதினேழாம் நூற்றாண்டில் மதுரை திருமலை நாயக்கனின் படைகளுக்கும் வேணாட்டு வீரர்களுக்கும் நடைபெற்ற போரின் வரலாற்றைக் கூறி அமைகின்றன. கொங்கு நாட்டைச் சார்ந்த தீரன் சின்னமலை காவிரிக்கரையில் மேக்ஸ்வல் படையை வென்ற நிகழ்ச்சியை கும்மிப்பாடல்கள் தெரிவிக்கின்றன. கட்டபொம்மன் கும்மி, கட்டபொம்மன்

கதை, வீரபாண்டிய கட்டபொம்மன் கதைப்பாடல், பாஞ்சாலங்குறிச்சி சண்டை போன்ற கதைப்பாடல்கள் கட்டபொம்மனின் வீர வரலாற்றினை விரித்துரைக்கின்றன. இப்பாடல்கள் குறிப்பிடும் தகவல்களும் அன்றைய வெள்ளையர் படைத்தளபதிகளின் நாட்குறிப்பேடுகள் தரும் தகவல்களும் ஒத்து வருகின்றன. வெள்ளையனை எதிர்த்துப் போராடிய வீரத்தலைவன் புலித் தேவனை சிந்து பாராட்டிப் பாடுகின்றது. செட்டி நாட்டவர்களின் பூர்வீகம் சோழநாடு. பாண்டி நாட்டில் குடியேறிய அவர்களது பூர்வீக வரலாற்றைத் தாலாட்டுப் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது. இவ்வாறு நாட்டுப்புற இலக்கியத்தின் உதவியால் ஒருகால கட்டத்தில் வரலாற்றை மீண்டும் உருவாக்க முடிகிறது.

மதுரை மாவட்டத்தில் கிடைத்த கதைப்பாடல்களில் கருப்பத்தேவன் கதை, பெரியண்ணன் பெரியசாமி கதை, வண்ணான் கதை, ராசாமகள் கதை, முத்திருளி கதை ஆகிய ஐந்து கதைப் பாடல்கள் உடன்கட்டை ஏறுகின்ற செய்தியைத் தருகின்றன. கணவன் இறந்த நிலையில் மனைவி அவனோடு தீயில் பாய்ந்து உயிர் துறத்தலை உடன்கட்டை ஏறுதல் என்பர். இது சதி என்னும் சொல்லால் வடநாட்டில் குறிக்கப்படுகிறது. இங்கு குறிப்பிட்டுள்ள ஐந்து கதைப் பாடல்களில் முதல் நான்கு கதைப்பாடல்களில் உடன்கட்டை ஏறுபவர்கள் பெண்ணாயிருக்க, முத்திருளி கதையில் மட்டும் உடன்கட்டை ஏறுபவர் ஆணாகக் காட்டப்பட்டுள்ளது. முத்திருளி என்ற பள்ளர்குலப்பெண் இறந்த போது அவளது காலதன் மறவன் உடன்கட்டை ஏறுகிறான். அதனால் பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் உடன்கட்டை ஏறிய வரலாற்று உண்மை வட்டாரக் கதைப்பாடலிலிருந்து நமக்குத் தெரியவருகிறது.

வட்டார வழக்கியல் அடிப்படையில் வள்ளுவரின் வரலாற்றை நோக்கினால் அந்த தெய்வப்புலவர் குமரி மண்ணைச் சார்ந்தவர் என்று கருத முடிகிறது. திருவள்ளுவர் எழுதிய திருக்குறளிலே வருகின்ற பல சொற்கள் குமரி மாவட்டப் பேச்சு வழக்கில் மட்டும் இன்றும் வழங்கி வருகின்றன. இவற்றுள் சில இங்கே எடுத்தாளப்படுகின்றன.

அகம் அல்லது அகத்து என்ற சொற்கள் உள்ளே என்னும் பொருள்பட குமரி மாவட்டத்தில் பேசப்படுகிறது. "புறத்துறுப் பெல்லாம் எவன் செய்யும் யாக்கை, அகத்துறுப்பு அன்பி லவர்க்கு" என்ற குறளில் வருகின்ற அகத்து என்ற சொல் உள்ளே என்னும் பொருளைத் தருகின்றது. குமரி மாவட்டத்தில் இறுதி அல்லது கடைசி என்ற சொல்லுக்கு அற்றம் என்னும் சொல்லையே பயன்படுத்துகின்றனர். திருக்குறளிலும் அதே சொல் பயன்படுத்தப்படுகிறது. "விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன், முயக்கற்றம் பார்க்கும் பசப்பு" வீட்டின் உள்ளே மடையுடன் கூடிய சிறிய முற்றத்தை அங்கணம் என்று குமரி மாவட்ட மக்கள் அழைக்கின்றனர். "அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தார், அல்லார்முன் கோட்டி கொளல்" என்பது குறள்.

குமரி மாவட்டத்தில் காதினைச் செவி என்றுதான் கூறுவார்கள். திருவள்ளுவர் இந்தச் சொல்லைப் பல இடங்களில் குறிப்பிடுகிறார். அவர் காது என்ற சொல்லை எங்கும் பயன்படுத்தவில்லை. மடி என்றால் சோம்பல் என்று பொருள். இச்சொல் அதே பொருளில் குமரி மாவட்டத்தில் மட்டும் வழங்கப்படுகிறது. திருவள்ளுவர் மடியின்மை என்று ஒரு அதிகாரத்தையே வகுத்துள்ளார். அந்த அதிகாரத்திலுள்ள பத்து குறட்பாக்களிலும் மடி என்ற சொல்லை வள்ளுவர் பயன்படுத்துகின்றார். குமரி மாவட்டக் கோவில்களில் நடைபெறும் விசேஷ வழிபாடுகளைச் "சிறப்பு" என்றே கூறுவர். வள்ளுவர் அதே சொல்லை அதே பொருளில் திருக்குறளில் பயன்படுத்துகிறார். "சிறப்பொடு பூசனை செல்லாது; வானம், வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு" என்பது குறள். நாஞ்சில் நாட்டில் குழந்தைகளை "மக்கா"(ன்) என்று மிகவும் அருமையாகப் பாசத்துடன் அழைக்கிறார்கள். அதே சொல்லை அதே பொருளில் வள்ளுவப் பெருந்தகை தமது குறளில் எட்டு இடங்களில் தொடர்ந்து பயன்படுத்துகின்றார்.

தமிழகத்தின் பிற பகுதிகளில் கரைபுரண்டோடும் நீரை மட்டும் வெள்ளம் என்பர். குளத்து நீரை வெள்ளம் என்று கூறும் வழக்கம் இல்லை. ஆனால் குமரி மாவட்டத்தில் மட்டும் குளத்து நீரை வெள்ளம் என்றுதான் கூறுவர். வள்ளுவரும் குளத்து நீருக்கு வெள்ளம் என்ற சொல்லையே பயன்படுத்துகின்றார். "வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர் தம், உள்ளத்தனையது உயர்வு" என்பது குறள். ஓடுகின்ற நீரில் அல்லி, தாமரை போன்ற மலர்கள் வளர முடியாது. குளத்து நீரிலேதான் ஆதாவது குளத்து வெள்ளத்திலேதான் அம்மலர்கள் வாழ முடியும், வளர முடியும். குளத்து நீரை வெள்ளம் என்று குறிப்பிடும் வள்ளுவரது பாங்கு இங்கு சிந்திக்கத்தக்கது. குமரி மாவட்ட மக்கள் மாட்டு வண்டியை சக்கடா வண்டி என்றுதான் அழைப்பார்கள். இதனை வள்ளுவர் சாகாடம் என்று கூறுகிறார். "பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ், சாலமிகுத்துப் பெயின்" என்பது குறள். இதுபோன்ற குமரி மாவட்ட மக்கள் பயன்படுத்தும் பல சொற்கள் திருக்குறளிலே வருகின்றன.

சிலப்பதிகார பதிப்புரையில் டாக்டர். உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் இளங்கோவடிகளின் வரலாற்றினைக் கூறும்போது "நூலாசிரியர் மலைநாட்டினராதலால் இந்நூலில் (சிலப்பதிகாரத்தில்) அந்நாட்டுச் சொற்கள் பல அவ்வவ்விடத்து வந்துள்ளன" என்று கூறுகின்றார். இக்கருத்து வள்ளுவருக்கும் பொருந்துமல்லவா? வள்ளுவர் தாம் பிறந்த மண்ணில் வழங்கிய பல சொற்களைத் தமது நூலிலே பயன்படுத்தியுள்ளது இயற்கையே என்னும் முடிவுக்கு வர டாக்டர். உ.வே.சாவின் கூற்று துணையாகின்றது.

நாஞ்சில் நாட்டுக்கே உரிய உழவியல் செயல்முறையான "பொடிப் பருவத்தை" திருவள்ளுவர் தமது குறளிலே மிக அழகாக எடுத்துக் கூறுகின்றார். ஒரு பலம் புழுதி கால் பலம் ஆகும்படி உழுது காயவிட்டால் நிலத்தில் பயிர் மிகவும் செழித்து விளையும் என்பதை "தொடிப் புழுதி

கஃசா உணக்கின் பிடித்தெருவும், வேண்டாது சாலப்படும்" என்று வள்ளுவர் கூறுகின்றார். இவற்றிலிருந்து நாஞ்சில் நாட்டின் உயிர் நாடியான உழவுத் தொழிலின் சில நுணுக்கங்களை வள்ளுவர் நன்கு அறிந்திருந்தார் எனத் தெரிய வருகிறது. மேலும் இக்குறளில் வருகின்ற "உணக்கல்" என்ற சொல் குமரி மாவட்ட மக்களின் பேச்சு வழக்கில் இன்றும் உள்ளது.

வேட்டியை எப்போதும் மடித்துக் கட்டுவது குமரி மாவட்ட மக்களின் தனிப்பண்பாகும். நாஞ்சில் நாட்டில் அடிக்கடி மழை வருவதால் வேட்டியை மடித்துக்கட்டும் பழக்கம் தோன்றியது என்று கூறுவர். மேலும் நாஞ்சில் நாட்டின் செழிப்பை கண்ணுற்ற சேர, சோழ, பாண்டியர் மட்டுமல்ல, விஜயநகர், நாயக்கர், மகமதியர் படைகள் அடிக்கடி அப்பகுதியில் வந்து போரிட்டதால் அங்குள்ள மக்கள் எப்போதும் போருக்குத் தயாராக நிற்க வேண்டிய நிலையில் இருந்ததால் வேட்டியை மடித்து கட்டும் வழக்கம் தோன்றியது என்றும் கூறுவார் உண்டு. இங்கு வேட்டியை மடித்துக் கட்டு வதை வள்ளுவர் தமது குறளிலே குறிப்பிடுவது சிந்தனைக்குரியதாய் விளங்கு கின்றது. சமுதாயத்தின் வளர்ச்சிக்கு முயலும் ஒருவனுக்கு தெய்வம் ஆடையை மடித்துக் கட்டிக்கொண்டு உடனே உதவி செய்ய முன்வந்து நிற்கும் என்று கூறுகின்றார் வள்ளுவர். "குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம், மடி தற்றுத் தான் முந்துறும்" என்பது அக்குறள்.

மேலும் வள்ளுவநாட்டை அடுத்திருந்த சேர நாட்டில் பண்டைக் காலத்தில் பிணம் தழுவும் ஒரு பொல்லாத வழக்கம் இருந்து வந்துள்ளது. அதனைத் திருவள்ளுவர் தமது நூலிலே குறிப்பிடுகிறார். "ஏறு தழுவுதல்" தமிழனின் வீர விளையாட்டு என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் சேர நாட்டில் பண்டைக் காலத்தில் பிணம் தழுவும் ஒரு வினோதமான வழக்கம் இருந்து வந்துள்ளது என்பதைப் பலர் அறியார். திருவள்ளுவர் தமது குறளிலே இதனைக் குறிப்பிடுகிறார்.

"பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று".

இதுதான் பிணம் தழுவும் வழக்கத்தைக் குறிப்பிடும் குறள். தனது வாடிக்கையாளர்களை மிகவும் அன்போடு தழுவுவதாக நடிக்கும் ஒரு விலை மகளின் செயல் இருட்டறையில் முன்பின் தெரியாத ஒருவரின் பிணத்தைத் தழுவுவதை ஒக்கும் என்று கூறுகிறார் திருவள்ளுவர். இந்தப் பிணம் தழுவும் வழக்கம் சேரநாட்டில் நம்பூதிரி இனத்தவர்களிடையே வழக்கில் இருந்தது. திருமணமாகாமல் ஒரு கன்னிப்பெண் இறந்துவிட்டால், அந்தப் பிணத்தின் மீது சந்தனம் பூசி ஓர் இருட்டறையில் கிடத்துவார்கள். பின்னர் அந்த ஊரில் உள்ள ஏழை இளைஞன் அறையின் உள்ளே சென்று கன்னிப் பெண்ணின் பிணத்தைத் தழுவ வேண்டும். அவன் அந்த அறையை விட்டு வெளியே வரும் போது அவன் உடம்பிலே சந்தனம் இருக்க வேண்டும். அதுவே அவன் பிணத்தைத் தழுவியதற்கு அறிகுறி. பிணந்தழுவிய அந்த ஏழை இளைஞனுக்கு பெண்ணின் பெற்றோர்கள் கூலியைக் கொடுத்து அனுப்புவார்கள். கூலிக்காக

முன் பின் தெரியாத ஒரு பிணத்தைத் தழுவும் இளைஞனையும், பணத்திற்காக எந்த உடலையும் தழுவுகின்ற விலைமகளையும் திருவள்ளுவர் அழகாக ஒப்பிடுகிறார். இந்தக் கொடிய வழக்கத்தை, அபிடிபாய்ஸ் என்ற பிரெஞ்சு நாட்டு அறிஞர் "இந்துசமய பழக்க வழக்கங்களும் விழாக்களும்" என்ற தமது நூலிலே மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறார்.[1] இதே கருத்தினை எட்கார் தர்ஸ்டன் என்ற அறிஞரும் தமது "தென்னிந்திய சாதியினரும் பழங்குடி மக்களும்" என்னும் நூலிலே மறைமுகமாக கூறுகின்றார். "திருமணம் ஆகாத நம்பூதிரி இனத்துப் பெண்கள் இறந்துவிட்டால் சில திருமணச் சடங்குகள் அப்பெண்ணின் சடலத்திற்கு நடத்தப்படும். அதன் பின்னரே அச்சடலம் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லப்படும்" என்பது அவர் கூற்று[2].

அபிடிபாய்ஸ் கூறுகின்ற பொல்லாத அந்த வழக்கம் இப்போது மறைந்து விட்டது. பிற்காலத்தில் நம்பூதிரிகள் இறந்த கன்னிப்பெண்ணின் கழுத்திலே தாலியைக் கட்டி சுடுகாட்டுக்கு அனுப்புவார்கள். திருமணமாகாத பெண்கள் இறந்துவிட்டால் அது குடும்பத்திற்கு அவமானம் என்று கருதியதால்தான் இந்த வழக்கங்கள் அக்காலத்தில் இருந்தன. இந்த வழக்கத்தை திருவள்ளுவர் தமது நூலிலே குறிப்பிடுவது "வள்ளுவர் குமரி மாவட்டத்தைச் சார்ந்தவர்" என்ற கருத்திற்கு மிகச் சிறந்ததோர் சான்றாக அமைகிறது. திருவள்ளுவர் மதுரையிலோ அல்லது மயிலாப்பூரிலோ பிறந்திருந்தால், உலகிலே வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத இந்த வினோதமான சமுதாய வழக்கம் அவருக்குத் தெரிந்திருக்க முடியாது. இந்த அரிய சான்றினை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ இயலாது. தமிழகத்தில் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத இந்தச் சமுதாய வழக்கத்தை திருவள்ளுவர் தமது திருக்குறளிலே குறிப்பிடுவது அவர் குமரி மண்ணைச் சார்ந்தவர்தான் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

சங்கப் புலவர்கள் புகழ்ந்து பாடிய நாஞ்சில் நாடு இன்றைய குமரி மாவட்டத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்றது. நாஞ்சில் நாட்டை ஆண்டு வந்தவன் நாஞ்சில் பொருநன் என்ற நாஞ்சில் வள்ளுவன். நாஞ்சில் வள்ளுவனும் திருக்குறளை இந்த உலகுக்குத் தந்த திருவள்ளுவரும் ஒரே இனத்தைச் சார்ந்தவர்களாகத் தான் இருந்திருக்க வேண்டும். தமிழ் அறிஞர்களாக அவ்வைதுரைசாமிப் பிள்ளை, சாமி சிதம்பரனார் ஆகியோர் வள்ளுவரை நாடாண்ட மன்னராகக் கருதுவர்.[3] வள்ளுவ நாட்டின் மன்னராக இருந்த திருவள்ளுவர் மகாவீரர் புத்தர் போன்று அரச பதவியைத் துறந்து துறவியாக மாறி அறநெறிக் கருத்துக்களை மக்களிடையே பரப்ப உலகப் பொதுமறையாம் திருக்குறளை நமக்குத் தந்தருளினார் என்று கூறப்பட்டுள்ளது. மன்னராக இருந்த துறவியாக மாறிய காரணத்தால் தான் அரசியல் நுணுக்கங்களை மிகவும் சிறப்பாக அவரால் கூறமுடிந்தது. வள்ளுவநாட்டு முட்டத்தை கல்வெட்டுகளும் செப்பேடுகளும் குறிப்பிடுகின்றன. முட்டத்தை அடுத்துள்ள திருநாயனார் குறிச்சிதான் திருவள்ளுவரின் பிறப்பிடமாக கருதப்படுகிறது. திருநாயனார்குறிச்சி வட்டாரத்தில் குழந்தைகள்

அழுகால் "போநட்டும் அரசே" என்னும் பொருளில் "போட்டு நாயனே" என்று தாலாட்டுவார்கள். அவ்வட்டார கடற்கரையில் நடைபெறும் நாடகங்களில் அரசனை நோக்கி " பொன்னு நாயனே ஒரு சங்கடம்" என்ற வசனத்தை கேட்கலாம். இவ்வட்டாரத்தில் நாயனார் என்ற சொல்வந்து அரசன் என்றும் தலைவன் என்றும் பொருள் கொள்ளப்படுவது சிந்திக்கத்தக்கது. திருவள்ளுவ நாயனார் என்ற பெயரும் திருநாயனார் குறிச்சி என்ற ஊர் பெயரும் திருவள்ளுவர் பெயர் கூறி நிற்கின்றன.

இவ்வாறு வட்டார வழக்கியல் அடிப்படையில் நோக்கும்போது திருவள்ளுவர் குமரி மண்ணிலே தோன்றியவர் என நாம் கருத முடிகிறது.

<u>மேற்கோள்கள்:</u>


1. Abbe J A Dubais - <u>Hindu manners, customs cremonies</u> Page.17

2. Edgar Thurston. <u>Castes and Tribes of Southern India</u> Vol.V P.197.

3. சாமிசிதம்பரனார் - <u>வள்ளுவர் வாழ்ந்த தமிழகம்.</u> பக்.27
அவ்வைதுரைசாமிபிள்ளை - <u>தெய்வப்புலவர் திருவள்ளுவர்</u> பக்.13.

மேஜர்பானர் மேன் செப்பேடு
*********************

திரு. வே. மாணிக்கம்,
4ஏ பக்தராய்ப் பணிவார் தெரு,
பாளையங்கோட்டை 627 002.

மேஜர்பானர்மேன் 1799-இல் வெளியிட்ட செப்பேட்டு விளம்பரம் தமிழகத்தில் பாளையப்பட்டுத் தலைமையிடங்கள் சிலவற்றுள் காணப்படுகிறது. இந்தக் கட்டுரை பாவலியில் காணப்படும் செப்பேட்டை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. பாவாலி என்னும் கிராமம் காமராசர் மாவட்டம் விருதுநகருக்கு மேற்கே 4 கி.மீ. தொலைவில் உள்ளது. அன்று 72 பாளையங்களில் ஒன்றாகப் பாவாலி விளங்கியது. இன்று ஜமீதாரின் வழியினர் ஒருவரும் இல்லை. ஊருக்கு மேற்கே பராமரிப்பு இல்லாமல் உள்ள அரண்மனையின் ஒரு பகுதியில் பள்ளி ஒன்று இயங்கிவருகிறது. அரண்மனைக்குக் கிழக்கே செப்பேட்டுத்தூண் உள்ளது. இந்த இடத்தில் முன்னர் ஊர்ச்சாவடி இருந்ததாகச் சொல்லப்படுகிறது. செப்பேட்டின் அகலம் 52 செ.மீ. உயரம் 31 செ.மீ. எழுத்து ஆழமாகப் பொறிக்கப்பட்டுள்ளதால் தெளிவாக உள்ளது.

<u>செப்பேட்டுச் செய்தி:</u>

1. ஶ்ரீ௱ ௲௯௱ ௲ அக்டோபர் மீ ௩ உயக சகார்த்தம் ௲௭௱உயக ௵ மெல் செல்லாநின்ற சித்தார்த்தி ௵ அற்பசி மீதிருநெல்
2. வெலிச் சீமையுடனெ செர்ந்த பாளையப்பட்டுச் சீமைகளிலே யிருக்கப்பட்ட பாளையக்காறர் சகலவித குடியானபெர்க
3. ளுக்கும் தெரியும்படிக்கு விளம்பரம் பண்ணி விக்கிறது யென்றால் மெசீர்பானர்மென் துரையவர்கள் கும்பினி
4. யாரிடத்திலே பெற்ற உத்திரவினாலெ தற்காலத்திலெ கும்பினியாரவர்கள் திருநெல்வேலிச் சீமைகளிலெ பாளையஞ்செ
5. ரிக்க அகத்தியம் உண்டானதும் பாஞ்சாலங் குறிச்சியா னெழாயிரம் பண்ணையான் நாகலாபுரத்தான் கொலார்ப
6. ட்டியான் காடல்குடி குளத்தூரானிவர்களனவரும் அஸத்தப்பி* துர்மாற்க நடத்தைகளாக நடந்திலெ இவர்க
7. ளுடைய பாளையப்பட்டுகளைக் கட்டிக்கொள்ள நிமித்தியம் உண்டானதும் பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மநாய
8. க்கன் அவனுடைய தானாபதி சிவசுப்பிரமணியபிள்ளை நாகலாபுரத்துப் பாளையக்காறனுக்குத் தமையனாகவும்காரிய

9. ஸ்தனைகவுமிருந்த சவுந்தரபாண்டிய நாயக்கனிவர்களை யுயிர்செதமாக
ஆக்கினை செய்ததும் மெஸர்பனர்மென்துரை

10. யவர்கள் நாகலாபுரம் யெளாயிரம் பண்ணைப் பாளையகாறறையு
மின்னஞ்சி* அது முக்கிய மாயிருக்கப்பட்ட மனுடர்களை

11. யும் அவரவர் பாளையப்பட்டுகளை நீக்கிவிச்சு சென்னபட்டணத்துக்கு
அனுப்பிவிக்கும்படி நிமித்தியம் உண்டானதும் பா

12. ளையப்பட்டுகளிலெயுள்ள கொட்டைகளையெல்லாமிடித்து அதிலுள்ள
செர்வைகாரர் செவகர் குடியானபெர்கள் கைய்யிலுள்

13. ள ஆயுதங்களையும் வாங்கிக்கொள்ள நிமித்தியம் உண்டானது மித்தியாதி
காரியங்களெல்லாமிதர்க்கு முன்வகை விபரமா

14. கவிளம்பரப்படுத்தி விளம்பரங்களிலே சகலமான பேர்களுக்கும்
லொகப் பிறசித்தமாய்த தெரியப்பட்டிருக்குமெயின்ன

15. ங்கீழெ எழுதப்பட்ட காரியகுணங்களை யெல்லாஞ் சகலமான
பெர்களுக்குந் தெரியப்படுத்த வேண்டியது மெசர்பனர்மென்

16. துரையவர்களுக்கு நிமித்தமாய்த் தொனி விளம்பரம் பண்ணிவிக்கிறது
யென்னமென்றால் யினிமெல்பட்டுயாதாமொரு

17. பாளையக்காறன் மறுபடி கொட்டை கொத்தளமுடையங்கள் பொட்டாலும்
பீரங்கி ரெக்குலா சாகொபி மற்றதுகள் வைத்திருந்தா

18. லும் மித்தியாதிகளைச் சம்பாதித்தாலு மவர்களை கும்பினியாருடைய
ஆதரவுகளையுமிழந்து அவர்களுடைய பாளையப்பட்டுகளையும்

19. கும்பினியார் கட்டிக்கொண்டு அந்தப்பாளையக்காறனையும் கும்பினியாருக்கு
தொனினபடி தெண்டிப்பார்கள் பாளையப்பட்டுக

20. ளிலுள்ள செர்வைக்காறர் செவுகர் காவல்காறர் குடியான பெர்களிந்தவித
மனுடர்களில் யாதாமொரு மனுடர்களானாலும் து

21. பாக்கியாகிய கல்வெடி திரிவெடி யீட்டி வல்லயங்கள் பிடித்த பெர்களைக்
கண்டாலு மிதுகளை யொளித்து வைத்திருந்த பெர்களைக்

22. கண்டாலுமவர்களை யுயிர்ச்செதம் பண்ணுவார்களந்தப் பாளையக்
காறரவர்களுடைய
பாளையப்பட்டுக் குடியானபெர்.

23. களுடைய நடத்தைகளுக்கு அந்தந்த பாளையக்காறர்தாமெ உத்தரவாதம்
பண்ணவெணும் அதல்லாமலும் யாதாமொரு பாளை

24. யகாறனுடைய சனங்களாயுதபாணிகளாய் யெந்தச் சீமைகளிலெ
யாகிலும் சல்லியங்களும் பெலவந்தகளும் செய்யுறதை

25. க்கண்டாலந்தச் சனங்களுக்கு உயிர்ச்செதமாகிய தெண்டனையும்
நடக்கிறது மல்லாமலந்தச் சனங்களுடைய பாளையப்ப

26. ட்டுப்பாளையக்காறனுடைய சீமைகளையும் கட்டிக்கொண்டு அந்தப்
பாளையக்காறனைக் கும்பினியாருக்குத் தொனின தெண்டினையுங் நட

------

* "மின்னஞ்சிலது முக்கிய" – என்று எட்டையபுரம் செப்பேட்டில் உள்ளது.

27. ப்பிவிப்பார்களின்னமறிய வெண்டிய தென்னமென்றால் மெசர்பானர்மென் துரையவர்கள் பெற்ற உத்தரவுக்காக நடத்துவிச்ச

28. காரியங்களையும் சீமைக்கு சவுக்கியமாகும்படியாய் மெலெழுதியிக்குப் பட்ட சட்டங்களையும் சகலவித சனங்களுக்குமிப்

29. பொதைக்கு மினிமெலென்றென்றைக்கும் அறிந்து மனதிலே வைக்கவேண்டியது மிகவும் யுத்தமாயு அகத்தியமாபு மிருக்கப்ப

30. ட்டதானபடியினாலெ யிந்த விளம்பரத்தையொரு செப்புத்தகட்டிலெ எழுதி அந்தந்தப் பாளையப்பட்டுத் தலைக்கிருமங்க

31. ளிலிப் பிறபலமாயிருக்கப்பட்ட யிடங்களிலெ அடிக்கும் படியாய் உத்தரவாச்சுது அதுவறியவும் இந்தபடிக்கு மெசர்

32. சான்பனர்மென் துரையவர்கள்

அரசியல் சூழல்:
***********

மேஜர் பானர்மேன் செப்புப்பட்டயச் செய்தியைத் தெளிவாக உரை அன்றைய அரசியல் மாற்றத்தை விளக்கு வேண்டியது தேவையாகும். ஆர்க்காட்டு நாவாபு 1781-இல் ஆங்கிலேயருக்குக் கொடுத்திருந்த வரி தண்டும் உரிமையை 1785-இல் திரும்பப் பெற்றார். தமிழகத்தின் தெற்குச் சீமையில் வரிதண்டும் உரிமையை மட்டுமாவது தங்களிடம் ஒப்படைக்குமாறு ஆங்கிலேயர் நவாபை வற்புறுத்தினர். அவர் அதற்கு உடன்படவில்லை. நவாபின் விருப்பத்திற்கு எதிராக 1790-இல் தெற்குச் சீமையில் வரிதண்டும் உரிமையைத் தாங்களே ஏற்றுக்கொண்டதாக ஆங்கிலேர் ஓர் அறிக்கையை வெளியிட்டனர். திருநெல்வேலியில் ஒழுங்காகச் சம்பளம் கிடைக்கப்பெறாமல் நிலைகுலைந்து நின்ற நவாபின் படைகளையும் அவர்கள் தங்களோடு எளிதாக இணைத்துக் கொண்டனர். தவிர்க்க இயலாத சூழ்நிலையில் நவாபு 1792-இல் ஆங்கிலேயருடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். அதன்படி ஆங்கிலேயர் தெற்குச் சீமைகளிலே வரிதண்டல் செய்து செலவு போக எஞ்சிய தொகையை அவர்களுக்கு நவாபு கொடுக்க வேண்டிய கடனுக்கு வரவு வைத்துக் கொள்ளவேண்டும். கடன்தொகை முழுவதும் வரவு வந்த பின்னர் நாட்டைத் திரும்ப நவாபிடம் ஒப்படைத்து விட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.[1]

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் தெற்குச் சீமையின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஆங்கிலேயர் முதலில் பாளையங்களை ஒழுங்கு படுத்துவதில் ஈடுபட்டனர். ஆங்கிலேயரிடம் எதிர்ப்புணர்வு கொண்ட பாளையங்களை ஒடுக்குவது அவர்களுடைய முதல் பணியாக இருந்தது. பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர்கள் தொடக்கம் முதலே வெள்ளையரிடம் விரோதம் பாராட்டி வந்தனர். இதனாலேயே பாஞ்சாலங்குறிச்சி ஆறு பெரும் படையெடுப்புகளைச் சந்திக்க நேர்ந்தது.[2] 1790-இல் வீரபாண்டியக் கட்டபொம்மன் ஆட்சிப் பொறுப்பேற்ற போது அப்போராட்டம் உச்ச நிலையை எய்தியது.

1799 செப்டம்பர் 5-ஆம் நாள் மேஜர் பானர்மேன் பாஞ்சாலங்குறிச்சியைத் தாக்கினார். பாஞ்சாலங்குறிச்சி தரைமட்டமாக்கப் பட்டது. 1799 அக்டோபர் 16-ஆம் நாள் கட்டபொம்மன் கயத்தாற்றில் தூக்கிலிடப்பட்டார். அந்தக் காலகட்டத்தில்தான் மேஜர் பானர்மேன் இந்தச் செப்பேட்டு அறிக்கையை வெளியிட்டார். இதன் மூலப்படிவம் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

செப்பேடு குறிப்பிடும் செய்திகள்:

இந்தச் செப்பேட்டில் 12,13,14 ஆசியவரிகளில் "இதற்கு முன்வகை விபரமாக விளம்பரப்படுத்தி" என்று ஆங்கிலேயர் முன்னர் செய்த விளம்பரம் ஒன்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விளம்பரம் 1792-இல் வெளியிடப்பட்டதாகும். ஆங்கிலேயர் 1790-இல் தென்சுச் சீமை நிர்வாகப் பொறுப்பை நவாபுவிடமிருந்து வலுக்கட்டாயமாகப் பெற்றனர். கும்பினி நிர்வாகம் 1792-இல் பாளையங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள கர்னல் உறாமில்டன் மாக்ஸ்வெல் என்பவரை ( Col. Hamilton Maxwell ) நியமித்தது. இவர் நவம்பர் 1792-இல் பாளையக்காரர் அனைவரையும் திருநெல்வேலிக்கு அருகேயுள்ள கங்கைகொண்டான் கிராமத்திற்கு வரவழைத்து கவர்னர் கிளைவால் ( Lord Clive son of Robert Clive ) ஒப்பமிடப்பட்ட விளம்பரத்தை ஒவ்வொருவரிடமும் கொடுத்தார். தோலில் எழுதப்பட்ட இந்த விளம்பரத்தில் ஒன்றினைக் கேப்டன் ராவ் தமிழக அரசு அருங்காட்சியகத்திற்குக் கொடுத்ததாகத் தம்முடைய "ஒரு பாளையக்காரர் மீதான ராணுவ நீதிமன்றத் தீர்ப்பு" என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.[3]

இந்த விளம்பரத்தின் மூலம் பாளையக்காரர்கள் கோட்டைகட்டவும் படைதிரட்டவும் ஆயுதங்கள் சேகரிக்கவும் தடைவிதிக்கப்பட்டது. அவர்கள் குத்தகைதாரர் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். பாளையக்காரர் என்ற உரிமை பாரம்பரியமாக வருவது. ஆனால் "குத்தகைதாரரை" அரசு எப்போது வேண்டுமானாலும் மாற்றலாம். பாளையக்காரர்களுக்கு நவாபு அளித்திருந்த பல உரிமைகளை ஆங்கிலேயர் இந்த அறிக்கை மூலம் பறிக்க முயன்றனர். பாளையங்களை ஒழிக்கும் திட்டத்தை நவாபு விரும்பவில்லை. நவாபு இணங்காவிட்டாலும் இதனை நிறைவேற்றிவிட வேண்டுமென்று ஜூன் 1795-இல் இங்கிலாந்திலிருந்த இயக்குநர்கள் ( Court of Directors) முடிவு செய்தனர்.[4]

ஆனால் கும்பனியரால் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இயலவில்லை. என்பதைக் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார் (ப. 163) பாஞ்சாலங்குறிச்சிப் பாளையம் இந்தத் திட்டத்திற்குப் பெரும் தடையாக நின்றது. வீரபாண்டியக் கட்டபொம்மு இந்த அறிவிப்பை ஏற்கமறுத்தார். இது தமது பாளைய உரிமையையும் தன்மான உணர்வையும் பறிக்கும் திட்டம் என்பதை உணர்ந்தார். இதனை எதிர்த்து வரி கொடுக்க மறுத்தார். அவர் ஆங்கிலேயருக்கு எதிராக ஒரு கூட்டணியை உருவாக்கினார். அதில் நாகலாபுரம், கோலார்ப் பட்டி, ஏழாயிரம் பண்ணை, காடல்குடி, குளத்தூர் ஆகிய பாளையங்கள் இணைந்தன. செப்பேட்டின் 5,6வது வரிகளில் இவர்கள் குறிப்பிடப்.

பட்டுள்ளனர். 1797--இல் ராமநாதபுரத்தில் ஏற்பட்ட புரட்சியில் நெல்லைச் சீமை பாளையக்காரர்களில் பெரும்பாலானவர்கள் கட்ட பொம்மன் தலைமையில் கலந்து கொண்டனர் அவர்கள் வரி செலுத்தவும் மறுத்தனர் என்று கால்டுவெல்லும் இந்த கூட்டணியைக் குறிப்பிட்டுள்ளார். (ப.173)

1792-இல் இந்த விளம்பரத்தை கர்னல் மாக்ஸ்வெல் வெளியிடப் பட்டபோது பானர்மேன் அவருடைய செயலாளராக இருந்தார்.[5] எனவே இந்தத் திட்டத்தை முன்பே நன்கு புரிந்து இருந்த மேஜர் பானர்மேன் அதை நிறைவேற்ற 1799-ல் தான் வெளியிட்ட விளம்பரம் மூலம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதை நிறைவேற்றும் வகையில் எட்டை யபுரத்தார் மற்ற பாளையங்களுக்கு முன் மாதிரியாகத் தம்முடைய மூன்று கோட்டைகளையும் இடித்தார். தொடர்ந்து பாளையக்காரர்கள் பலர் தங்கள் கோட்டைகளை அழித்தனர். எனினும் 1801-இல் கட்டபொம்முவின் சகோதரர் ஊமைத்துரையைத் தூக்கிலிட்ட பின்னரே ஆங்கிலேயரால் இந்த் விளம்பரத்தை முழுமையாக நிறைவேற்ற முடிந்தது. பாளையக்காரர்களின் காலகட்ட கோட்டை அமைப்பையும், தொழில்நுட்பத்தையும் பிற்காலத்தவர் காணமுடியாமல் போனதற்கு மேசர் பானர்மேனுடைய மேற்கண்ட நடவடிக் கையே என்பதை இந்த விளம்பரம் மூலம் அறிய முடிகிறது.

அடிக்குறிப்புகள்:

1. A History of Tirunelvelly- Bishop Caldwell- P.168.
2. 1761 பிரிஜ்மன், 1762 - பிளிண்ட், 1776 புல்லார்ட்டன், 1799 பானர்மென், 1801-அக்னியூ.
3. Court Xzartial of a Poligar Chief. Copt. R.L. Rau. Imprint 1981. P.20
4. கட்டபொம்மு. தி.ந.சுப்பிரமணியன். ப.96
5. திருநெல்வேலிச் சீமைச்சரித்திரம், குருகுகதாசப்பிள்ளை ப.204.
6. மே.பா. ப.256.

*******

பின்னிணைப்பு:

PRCOLAMATION

WHEREAS it has been fully explained by Proclamation already issued to the Polegars and the inhabitants of the Pollams, why Government has been compelled to assemble a delachment at this period in the Tinnevelly District. And whereas it is publicly and generally known, that in conse-

..23..

quence of the refractory and disobedient conduct of the Polegars of Panjalam Courchy, Naglepore, Kollarpettah, Yalarampannah, Kdalgoody and Kaladoor Major John Banner man has been obliged from the orders he has received, to assume their Pollams, and further to punish with death Cataboma Naig, the Polegars of Panjalam Courchy, Soobram moouea Pillay, his manager, and Soundarapandea Naig, the brother and servant of the Naglepore Polegars and as it is also publicly known why Major Bannerman has been obliged to banish from their Pollams, and send to Madras the Polegars of Naglepore and Yalarampannah, and several other Principal persons, and to insist upon all the forts in the different Pollams, being destroved, and all the arms being taken from the Sherogers, peons, and inhabitants, Major Bannerman finds it expedient, hereby, farther to publish for general information as follows.

That,any Polegar rebuilding any fort whatever, or procuring or possessing guns, ginjal-pieces etc. Willbe considered to have forfeited the protection of the Company, his Pollam will be assumed, and he himself otherwise punished as Government may determine. That any Sherogar, Cowlgar, inhabitant, or any person of any description whatever, (inhabitant of the Pollams) found armed with a firelock, metchlock, pike, or spear, or found concealing then shall be subject to the punishment of death.

That every Polegar shall be responsible for the conduct of the inhabitants of his Pollams, and that armed parties, belonging to any Polegar, who shall be found commitsting disturbances, violence, or outrage in any part of the country shall not be only subject to the punishment of death themselves, but the Polegar to whom such parties belong will be dispossessed of his Pollam, and otherwise punished as Government may determine.

And whereas it is highly proper and necessary, that the several measures which Major Bannerman has been obliged

by his instructions to adopt together with the permanent regulations which it is deemed absolutely expedient to establish as above, for the welfare of the country in future, should be generally known and understood by all descriptions of people both now and in all time coming, It is hereby notified, that it has been ordered, that this proclamation shall be inscribed in the principal village of very Pollam.

Given under my hand in Campat Kytar this 21st Oct. 1799.

JOHN BANNERMAN.

# காமராஜர் மாவட்டத்தில் சேதுபதி இனம்

****************************

டாக்டர் எஸ்.எம்.கமால்
இசா பள்ளிவாசல் தெரு,
இராமநாதபுரம் 623 501

அரசியல் மாற்றங்களினால் நாடுகளும் நாட்டுப் பிரிவுகளும் ஏற்படுவதை வரலாற்றின் வாயிலாக அறிய முடிகிறது. தமிழகத்தில் பாண்டியர், சோழர் ஆட்சிகளில் கூற்றம், வளநாடு, நாடு, ஊர் என்றும் நாயக்கர் ஆட்சியில் பாளையம் சீர்மை, சமுத்திரம், பேட்டை என்றும் ஆற்காட்டு நவாப் ஆட்சியில் ஜில்லா, தாலுகா, மிட்டா, பிர்கா என்றும் நிர்வாக உட்பிரிவுகள் இருந்து வந்தன. தென்னகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஆற்காட்டு நவாபிடமிருந்து கைப்பற்றிய ஆங்கிலேயர் நவாபினது நிர்வாக அமைப்பினை அப்படியே வைத்து இருந்தனர்.

## வரலாற்றுத் தொடர்புகள்:

ஆங்கிலேயரின் ஆட்சியில், மதுரை ஜில்லா பரப்பில் மிகப் பெரிய தாக இருந்ததால் அதற்குட்பட்ட இராமநாதபுரம், முதுகுளத்தூர், பரமக்குடி, திருவாடானை, சிவகெங்கை, அருப்புக்கோட்டை தாலுகாக்களையும் மதுரை ஜில்லாவின் திருப்பத்தூர், திருநெல்வேலி ஜில்லாவின் சாத்தூர், திருவில்லிப்புத்தூர் தாலுகாக்களையும் கொண்ட புதிய ஜில்லாவாக இராம நாதபுரம் ஜில்லாவினை 1.6.1910ல் தோற்றுவிக்கப்பட்டது.[1] நாடு விடுதலை அடைந்தபிறகு மாவட்ட நிருவாகம் செம்மையாகச் செயல்பட வேண்டும் என்ற நோக்கில் மீண்டும் இந்த ஜில்லா 1.7.1985ல் மூன்று மாவட்டங்களாக பிரிக்கப்பட்டபோது உருவானது. இந்த காமராஜர் மாவட்டம்.

இதில், முந்தைய இராமநாதபுரம் சீமை அல்லது மறவர் சீமை என வழங்கப்பட்ட சேதுபதியின் சீமை தெற்குப் பகுதி அருப்புக்கோட்டை, திருசுழியல் தாலுகாக்களாக இந்த புதிய மாவட்டத்தில் அமைந்துள்ளன. மதுரை நாயக்க மன்னரது இந்தப் பகுதி சேதுபதி சீமையாக மாறிய வரலாற்றுச் செய்திகளை குறிப்பிடுவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

முப்பத்தைந்து ஆண்டுகளாக ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருந்த திருமலை நாயக்கருக்கு கி.பி.1658ல் மிகப் பெரிய சோதனை ஒன்று ஏற்பட்டது. விஜயநகரப் பேரரசரை துணிச்சலுடன் எதிர்த்து நின்ற பெருமகன் வணங்காமுடியாக விளங்கிய திவாங்கூர் மன்னரை தலைவணங்கச் செய்தவர், மைசூர் தளபதி நந்திராஜாவின் படைகளை நிர்மூலம் ஆக்கிய வர் என வரலாறு புகழ்கின்ற திருமலை மன்னர், படுத்த படுக்கையாக நலிவுற்று இருந்தார். மாற்றார் படையெடுப்பினை எதிர் கொள்ள வேண்டிய இக்கட்டான நிலை அவருக்கு கன்னடியர், மைசூரில் இருந்து மதுரை நோக்கி விரைந்து வந்து கொண்டு இருந்தனர் அவர்களை பொருதி வென்று வரக் கூடிய தளபதி எவரும் மதுரை அணியில் இல்லை. பதினாறு ஆண்டுகளுக்கு முன்னர் சடைக்கன் சேதுபதியை சிறைப்பிடித்த கசப்பான

அனுபவம் ஒரு புறம் இருக்க, இப்பொழுது அதே சேதுநாட்டு மன்னரிடம் உதவி கோருவதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லை. ஒருவாறு மனத்தை திடப்படுத்திக் கொண்டு சேதுபதி மன்னருக்கு ஓலை அனுப்பி வைத்தார்.

கடந்ததை மறந்து சேதுபதி மன்னரும் பதினையாயிரம் மறவர்களை திரட்டியவாறு மதுரைக்கு விரைந்தார். மதுரை படைகளுடன் இணைந்த பேரணியை தலைமை தாங்கிச் சென்று கன்னடப் படைகளை திண்டுக்கல்லுக்கு அருகில் தோற்கடித்தார். எஞ்சிய எதிரிகளை மைசூர் மாநில எல்லைவரை துரத்தியடித்து விட்டு மதுரை திரும்பினார். மதுரை பேரரசைக் காத்த திருமனை சேதுபதி மன்னரை திருமலை நாயக்க மன்னர் பலவாறு பாராட்டி சில சிறப்புக்களை செய்ததுடன் திருப்புவனம், திருச்சுழியல், பள்ளிமடம் பகுதிகளையும் அன்பளிப்பாக வழங்கினார்.[2]

இந்தப்பகுதி, பாண்டியர் ஆட்சியில் பொலியூர் நாடு, வேம்பு நாடு, பருத்திக்குடி நாடு, நிலக்குடி நாடு என்ற நிலக்கூறுகளாக அமைந்திருந்தன. சேதுபதிகளின் ஆட்சியில் இவை கமுதி, பள்ளிமடம் என்ற வருவாய் வட்டங்களாக வழங்கப்பட்டன.[3]

## மக்கள்:

சேது நாட்டில் பரவலாகவும் எண்ணிக்கையில் மிகுதியாகவும் இருந்தவர்கள் முக்குலத்தோர் எனப்படும் கள்ளர், மறவர், அகம்படியர். இவர்களுக்கு அடுத்தபடியாக இருந்த குடிகள் பள்ளு, பறை எனப்பட்ட பாட்டாளி மக்கள் வேளாளர், பிராமணர், செட்டிகள், நாடார், இஸ்லாமியோர் ஆகியோர்.[4] இந்த பகுதியிலும் அதே மக்கள் இருந்து வந்துள்ளதை இங்குள்ள ஊர்களின் பெயர்களில் இருந்து தெரியவருகிறது.

| | |
|---|---|
| கள்ளர்:- | கள்ளங்குளம், கள்ளத்திகுளம், தொண்டமான்குளம், பல்லவர் ஏந்தல். |
| மறவர்:- | மறவர் பெருங்குடி, அம்பலத்தேவன், நத்தம். |
| அகம்படியர்:- | அகத்தார்குளம், அகத்தார் இருப்பு. |
| பள்ளுபறை:- | குடும்பன்குளம், பறையன்குளம். |
| பிராமணர்:- | பிராமணன்குளம், குருக்கள்குளம், நாலுவேதன்குளம். |
| செட்டிகள்:- | செட்டிகுளம், செட்டிக்குறிச்சி. |
| வேளாளர்:- | வேளாளர்குளம், பிள்ளை(மா)யார்குளம், பிள்ளை(மா)யார் ஏந்தல். |
| நாடார்:- | நாடார்குளம் |
| இஸ்லாமியர்:- | துலுக்கன்குளம், துலுக்கன் குறிச்சி.[5] |

இராமநாதபுரம் சீமையின் பிறபகுதிகளில் இல்லாத சமணரும், வடுகரும் இந்தப்பகுதிகளில் இருந்துவந்துள்ளனர். சாத்தனூர், சாத்தன் குளம், சாத்தன் ஏந்தல், சாத்தனேரி, சாத்தனாதபுரம் ஆகிய ஊர்கள், சமணர் குடியிருப்புகளாக இருந்தவை. கி.பி. ஏழாம் நூற்றாண்டில்,

அரசில் செல்வாக்கினை இழந்த இந்த மக்கள், மதுரையில் இருந்து இந்தப் பகுதியில் புகழிடம் பெற்று இந்த ஊர்களை அமைத்திருக்க வேண்டும். இவர்களைப் போன்றே வடபுலங்களில் இருந்து வந்த கவர நாயக்கர், கம்பளத்தார், ரெட்டிகள், கன்னட கவுண்டர் ஆகிய சாதியினர் மதுரை மண்டலத்தில் விஜயநகர ஆதிக்கம் வலுப்பெற்ற பொழுது, அரசியல் ஊக்குவிப்புகளை எதிர்பார்த்து இங்கு குடியேறியதாகத் தெரிகிறது. ரெட்டியபட்டி, எட்டப்பன்குளம், சஞ்சன் நாயக்கன்பட்டி, புல்லநாயக்கன்பட்டி, பொம்பன் குளம், பொம்பன்கோட்டை, திம்மபுரம், கவுண்டன்குளம் என்ற இன்றைய ஊர்கள் அவர்களை அடையாளங் காட்டுவதாக அமைந்துள்ளன.

தெலுங்கையும், கன்னடத்தையும் தாய் மொழியாக கொண்டிருந்த இந்த மக்கள் நாளடைவில் இந்த நாட்டு மக்களுடன் இரண்டரக்கலந்து சேது நாட்டு குடிகளாகவே மாறிவிட்டனர். இதனால் சேதுமன்னர்கள், இந்த மக்களை வேற்று நாட்டவராகவோ, வேறு இனத்தவராகவோ கொள்ளாமல், தமது நாட்டின் ஏழைய மக்களைப் போன்று இவர்களுக்கும் தகுதிக்கேற்ற சிறப்புக்களை வழங்கி வந்தனர். மன்னாரெட்டிகள் என்ற தமிழ் அறிஞர் புலமைத்தனத்திற்கும் பிரபந்தம் பாடியதற்கும் வடகரை, தென்கரை என்ற இரு ஊர்களை வரகுணவளநாட்டில் சர்வ மானியமாகப் பெற்றார். இவரது வழியினரும் தொடர்ந்து பல சிறப்புக்களை பெற்ற செய்திகளும் உள்ளன. காவல் பணியை திறம்படச் செய்த திருச்சுழியல் லிங்கம நாயக்கரும், அம்பலம்பணியை சிறப்பாக மேற்கொண்ட கல்லூரணி இராமக்கவுண்டரும் சேதுபதிகளது ஆதரவுக்குரியவர்களாகி நிலக்கொடைகளைப் பெற்றனர்.[6]

இந்தப் பகுதி ஊர்களின் பெயர்களை இவ்விதம் உன்னிப்பாக படிக்கும் பொழுது வேறு சில செய்திகளும் தெரியவருகின்றன. களுவன்சேரி (களுவன்), ஒட்டன்குளம் (ஒட்டன்) அனுப்பனேந்தல் (அனுப்பன்), பணிக்கன் ஏந்தல் (பணிக்கன்) என்ற வெளி மாநில வீட்டோடிகளும் இங்கு வந்து குடியேறியமை புனாகின்றது. மேலும் இந்தப் பகுதியின் ஆட்சியாளர்களாக விளங்கிய சேது மன்னர்களது சிறப்புப் பெயரில் சில ஊர்களும் அமைந்துள்ளன கடலில் பாய்ச்சி, கிழவ் ஏரி, கூத்தன் ஏந்தல், கோலாகலன் ஏந்தல் சேதுராயன் ஏந்தல், மானங்காத்தான், விஜயரகுநாதபுரம் என்ற ஊர்களும் இந்த மன்னரது பணியாளர் பெயரில் ஆதித்தன் ஏந்தல், சின்ன சோழந்தி, பெரிய சோழந்தி, படைவெட்டிபுரம், கணைமுறித்தான், வீரமுடி ஏந்தல், முடிமன்னர்கோட்டை, நீறைமீட்டான் ஏந்தல், அணிகலக்கி ஏந்தல், ஆள்வெட்டி ஏந்தல் என்பன அவை.[7]

இந்த குடிமக்கள் அனைவரும் நல்ல உழைப்பாளிகளாக இருந்து வந்தனர். விவசாயத்தை பிரதான தொழிலாகக் கொண்டிருந்த, இவர்களில் நான்கில் ஒரு பகுதியினர் என்றும், ஏனையோர் விவசாயம் சம்பந்தப்பட்டவராக இருந்ததாகத் தெரிகிறது. இவர்களது பொதுவான உணவு கம்பு, ராகியுமாக இருந்தது. சென்ற நூற்றாண்டின் துவக்கத்தில் இங்

கிருந்த விவசாய கூலி ஒருவருக்கு ஒருநாள் கூலியாக 1½படி கம்பு அல்லது ராகியும் அல்லது 2 படி சாமை அல்லது குதிரைவாளியும் கொடுக்கப்பட்ட தாகவும், அதன் மதிப்பு ரூ.0.1.0 ஆகவும் இருந்தது. இவர்களது கூரை வீடுகளில் புஞ்சை தானியத் தட்டைகளைக் கொண்டு கூரை வேய்ந்து இருந்ததாகவும் இராமநாதபுரம் மேனுவலில் காணப்படுகிறது.[8]

கி.பி.1782-91 சேதுபதி மன்னரது பிரதானியாக இருந்த முத்து இருளப்ப பிள்ளை என்பவர் இந்த பகுதி முழுவதும் பயணம் செய்து மண்ணின்தரம், நீர் ஆதாரம், விளைச்சல் திறன் ஆகியனவகளை நேரில் ஆய்வு செய்து நஞ்சை, 'புஞ்சை என்று வகைப்படுத்தி இருந்த நிலங்களை, நஞ்சை, நஞ்சைத் தரப்புஞ்சை, நஞ்செய் வான்பயிர், புஞ்சை, புஞ்சை வான்பயிர், குளம்கோர்வை என தரப்படுத்தி அதற்குரிய தீர்வைகளையும் நிர்ணயம் செய்தார்.

இந்தப் பகுதியில் நஞ்சை வான்பயிர் நிலங்களில் சாகுபடி செய்யப் பட்ட கரும்பு, வாழை, வெற்றிலை ஆகியவை தரமானதாகவும் சிறந்த வகையினதாகவும் இருந்திருக்க வேண்டும் என்பதை அவைகளுக்கு உரிய வரி விதிப்பில் இருந்து அறிய முடிகிறது. சேது நாட்டின் பிற பகுதிகளில், வாழை, கரும்பு, வெற்றிலைப் பயிர்களுக்கு ஆண்டுத் தீர்வையாக முறையே ரூ.4.7.0, ரூ.4.7.0, ரூ.55.10.0 என்ற விகிதத்தில் வசூலிக்கப் பட்ட பொழுது பள்ளிமடம் பகுதியில் இதே பயிர்களுக்கு தீர்வை முறையே ரூ.14.13.7, ரூ.9.15.9, ரூ.58.12.11 என வசூலிக்கப்பட்டு வந்தது.[9]

இன்னொரு செய்தி பொதுவாக அரசுக்கு நில வருமானத்தில் இருந்து தண்டல் செய்யப்படும் தொகை வரி, இறை, தீர்வை, பாட்டம் என்ற பொதுப் பெயர்களால் வழங்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் சேது பதி மன்னருக்கு பள்ளிமடம் பகுதியில் இறுக்கப்பட்ட இரு வகையான இறை கள் மட்டும், பழங்காய்ச்சி என்றும், பாதகாணிக்கை என்றும் வழங்கப் பட்டு வந்தன. கிராமங்களில் மரங்களில் பழங்கள் பழுக்கத் தொடங்கிய அளவில், ஒரு கிராமத்திற்கு ரூ.3.0.5 தீர்வை செலுத்தப்பட்டு வந்துள்ளது. இதுவே பழங்காய்ச்சி என்ற வரியாகும். புஞ்சை நில சாகுபடிக்காக குழி ஒன்றுக்கு ரூ.1.1.0 அல்லது ஏக்கர்க்கு ரூ.0.2.3. வீதம் வசூலிக் கப்பட்ட தொகை பாதகாணிக்கையாகும்.[10]

இவ்விதம் அமைதியும் விசுவாசமும் மிக்க குடிகளாக இருந்த இந்த மக்களை கி.பி.1795ல் சேதுபதி சீமையை ஆக்கிரமித்த ஆங்கிலேயர், நசுக்கி, ஒடுக்கினர். வரி வசூல் என்ற பெயரில் இவர்களது உடமைகளை கொள்ளை கொண்டபொழுது இவர்கள் குமுறி எழுந்தனர். சித்திரங்குடி மைலப்பன் சேர்வை, சிங்கன் செட்டி ஆகிய மக்கள் தலைவர்கள் தலை மையில் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். கி.பி.1795-1800க்கும் இடையில் பரவியிருந்த கிளர்ச்சியில் திருசுழியல், பள்ளிமடம், பந்தல்குடி

கிராம மக்கள் தீவிரமாக ஈடுபட்டு இருந்ததை ஆங்கிலேயரது ஆவணங்கள் தெரிவிக்கின்றன. இந்தக் கிளர்ச்சி நசுக்கி அழிக்கப்பட்ட பொழுது திருச்சுழியல் கோட்டையில், பெரிய மருது சேர்வைக்காரரது மகனும், தளபதியுமான உடையனை தூக்கில் இடப்பட்டதுடன், அந்தப் புரட்சி முடிவுபெற்றது.[11]

சமுதாயப் பணிகள்:

குடி உயர கோல் உயரும் என்ற முதுரைக்கு இணங்க பலவகையிலும் உழைத்து வந்த இந்த குடி மக்களைக் கொண்ட சமுதாயத்தில் ஆன்மீகமும் மனித நேயமும் செழிக்க வேண்டும் என்பதற்காக சேது மன்னர்கள் பல அறப்பணிகளை இங்கு மேற்கொண்டனர். வரலாற்று பெருமை மிக்க திருச்சுழியல் திருமேனிநாதர் ஆலயம், சொக்கன் பெருமாள் ஆலயம், வீர சோழன கல்யாண பரமேஸ்வரர் ஆலயம், எரி சக்கரப்பெருமாள் ஆலயம், பள்ளிமடம், காளைநாதர்ஸ்வாமி ஆலயம், பாலவநத்தம் வேணுகோபால் சாமி ஆலயம், பானையம்பட்டி கைலாசநாதர் ஸ்வாமி ஆலயம், சூரனூர் கரியமால் அழகர் கோயில், அருப்புக்கோட்டை வாழவந்த அம்மன் கோவில் ஆகிய திருக்கோயில்களில் அன்றாட வழிபாட்டிற்கும், ஆண்டு திருவிழாவிற்கும் ஏராளமான கிராமங்களை இறையிலியாக வழங்கினர். இந்த ஆலய பணியாளர்களும், மன்னரது கொடை உள்ளத்திற்கு உரியவர்களாக இருந்தனர் என்பதும் தெரிய வருகிறது. பாலவநத்தம் கோயில் பசு மேய்க்கி, அந்தக்கோயில் தேவரடியார்கள், திருச்சுழியல் கோயில், தாசி கல்யாணி, அருப்புக்கோட்டை வாழவந்த அம்மன்கோயில், நாதசுரம் கருப்பணன், அதே கோயில் முட்டுக்காரர், தவசிமுத்து, பள்ளிமடம் கோயில் கணக்கு முத்தழகப்பன் ஆகியோர்களும் சேதுபதிகளது சர்வ மான்யம் பெற்றவர்கள் ஆவர்.

இவை தவிர அத்தியூரணி, அத்தியூரணி மடம், நத்தக்காடு சித்தி ரெட்டியார் மடம், முடுக்கன் குளம் தோப்பூர், மல்லாங்கிணறு பிடாரி சேரி, வேலாயுதபுரம் சத்திரங்களும் காரேந்தல், திருசுழியல், கொக்குளம், பூலாங்கால் ஊர்களின் பள்ளிவாசல்களும் சேதுபதிகளது சமரச மனப்பான்மைக்கும், தாராளமாக கொடைகளுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.[12] இத்தகைய வரலாற்று பின்னணியைச் கொண்ட சேதுபதி சீமைப் பகுதிகளுள் புதிய ஜில்லாவாக பொலிகின்ற காமராஜர் மாவட்டம் தொடர்ந்தும் பல புதிய சாதனைகளின் கருவூலமாக விளங்கும் என்பதில் ஐயம் இல்லை.

அடிக்குறிப்புக்கள்:

1. அரசு ஆணை எண் 399(1910) பொதுத்துறை.
2. ஆர். சத்தியநாத அய்யர் (1927) மதுரை நாயக்கர் வரலாறு பக்கம் 93.
3. இராஜா இராம் ரௌ (1891) இராமநாதபுர சமஸ்தான வரலாறு பக்கம் 10.

4. மேற்கண்டது. பக்கம். 33-40

5. தமிழ்நாடு அரசு: கிராமங்களின் அகர வரிசை
(இராமநாதபுரம் மாவட்டம்)

6. இராமநாதபுர சமஸ்தான மான்ய கணக்கு
வரிசை எண் 63, 89.

7. தமிழ்நாடு அரசு: கிராமங்களின் அகர வரிசை (இராம
நாதபுரம் மாவட்டம்)

8. இராஜா இராம் ராவ (1891)
இராமநாதபுர சமஸ்தான வரலாறு.

9. மேற்கண்டது: பக்கம் 297-98.

10. மேற்கண்டது: பக்கம் 298.

11. இராணுவ ஆலோசனைகள் தொகுதி 289, 24.10.1801.
பக்கங்கள் 7676-78.

12. இராமநாதபுர சமஸ்தான கணக்கு பதிவுகள்

'செவல்பட்டி குடைவரைக்கோவில் விநாயகர்'
****************************

சீ. இலட்சுமணன்,
சிங்கம்புணரி.

கல்லைக் களி மண்ணாகக் கருதி கவின்மிகு சிற்பங்களைச் செதுக்கியவர் தமிழர். அதுமட்டுமன்று குன்றைக் குடைந்து கோவில்களும் அமைத்தனர் என்பதற்கு ஏறக்குறைய அறுபத்தொன்பது குகைக் கோவில்கள்[1] இன்றும் நின்று சான்றளிக்கின்றன. குடைவரைக்கலைத் தமிழகத்தில் முதன் முதல் பல்லவமன்னன் முதலாம் மகேந்திரவர்மரால் கி.பி. 600ல் அறிமுகப் படுத்தப்பட்டது. என்று ஆய்வாளர் கூறுகின்றனர்[2]. ஆனால் பிள்ளையார் பட்டியிலுள்ள பிற்கால பிராமிக் கல்லெழுத்தைச் சான்றுகாட்டி[3], அறிஞர் டாக்டர் எ.வி. ஜெயச்சந்திரன் அவர்கள் பல்லவர்காலத்திற்கு முந்தியதாக, கி.பி. 5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கூறுவார்[4]. பாண்டிய நாட்டுப் பகுதியிலுள்ள இருபத்தாறு குகைக்கோவில்களில் சிலவற்றில் அமைந்துள்ள கல்லெழுத்துச் சான்றுகளைக் கொண்டு மலையடிக்குறிச்சி ஆனமலை, திருப்பரங்குன்றம் ஆகியவற்றை முறையே கி.பி. 632, கி.பி. 770 கி.பி. 773ச் சார்ந்தனவாகக் கொள்ளலாம். ஏனையவற்றை ஆங்கமைந்துள்ள சிற்ப அமைதி, கட்டிட அமைப்பு ஆகியவற்றைக் கொண்டு யூகித்துக்கொள்ளலாம். இக்குடைவரைக் கோவில்களில் விநாயகர், நடராசர், சிவலிங்கம், முருகன், திருமால், சேஷ்டாதேவி, சப்தமாதர்கள், மன்னர்கள், வாயிற்காவலர்கள் திருவுருவங்கள் அமைந்துள்ளன.

விண்ணிற்கும் மண்ணிற்கும் நாயகனாகிய விநாயகர் தோற்றம்பற்றி புராண ரீதியிலும், வரலாற்று வழியிலும் அறிஞர்களிடையே ஒத்த கருத்தைக் காணவியலாது. விநாயகரின் சிற்பவடிவத் தோற்றம் முதன்முதல் பல்லவன் ராஜசிம்மன் காலத்தில்தான் காணப்படுகிறது என்பார். திரு. கே. ஆர். சீனிவாசன்[5], திருஞான சம்பந்தரும்[6], அப்பரும்[7] தம் தேவாரங்களில் யானை முகத்தானைக் கூறிப்பிடுவதால் அவ்வருளாளர் காலத்திற்கு முற்பட்டவர் எனவும் முடிவு செய்யலாம். 'பிறந்தது எப்படியோ' என்ற தம் நூலில் திரு. தெ.பொ.மீ. நரசிம்ம பல்லவன் காலத்தில்தான் விநாயகர் சிறுத் தொண்டரால் வாதாபிலிருந்து கொண்டுவரப்பட்டதாகக் கூறுகிறார்[8].

சங்க காலத்தைச் சார்ந்த பரிபாடலில் (3:37)[9] வரும் ஐங்கை மைந்தன்" எனும் சொல்விநாயகரைக் குறிப்பதாகவும் கொள்வர். கல்லெழுத்தின் அமைதி கொண்டு பிள்ளையார் பட்டியின் காலம் கி.பி. 5 ஆம் நூற்றாண்டு என உறுதிபடுத்தப்பட்டிருப்பதை மேலே குறிக்கப் பட்டுள்ளது.

<u>பிள்ளையார் பட்டிப்பிள்ளையார்</u>:-

இன்று அனைவர் கையிலும், பையிலும், வீடுகளிலும், தொழிலகங் களிலும் பிள்ளையார்பட்டி விநாயகரின் படத்தைக் காணலாம். அவர்

இன்று இந்தியா முழுவதுமட்டுமின்றி கடல் கடந்த நாடுகளுக்கும் சென்று விட்டார்[10]. பிள்ளையார்பட்டி என்னும் சிற்றூர் பசும்பொன் மாவட்டத்தில், திருப்பத்தூருக்கும் குன்றக்குடிக்கும் நடுவிலுள்ளது. இங்குள்ள குடைவரைக்கோவில் விநாயகரைக் கல்வெட்டுக்கள் தேசிவிநாயகர், கற்பக விநாயகர் எனக் குறிக்கின்றன[11]. இவரே தமிழகத்தில் சிலை வடிவில் முதன்முதல் காட்சியருளுகிறவர். இருதளங்களையுடைய குகையில் ஐங்கரத்தான் வடதிசை நோக்கி எழுந்தருளியுள்ளார். தலையில் கிரிட மகுடமுள்ளது. விரிந்தசெவிகள், துதிக்கை வலம் புரியாகவுள்ளது. இடக்கொம்பு சிறியதாகவும், வலக்கொம்பு சற்று நீண்டுமுள்ளது. சுமாரான வயிறு, இருகைகளே உள்ளன. வலக்கையில் மோதகம் அல்லது சிவலிங்கம் உள்ளது. இடக்கையை வயிற்றின் ஓரத்தில் கடிஉறந்தமாக வைத்துள்ளார். எக்ஞோபவீதம் கிடையாது. வயிற்றில் வயிற்றுப்பட்டையுள்ளது. கைகளில் தோள்வளையும், மணிக்கட்டில் வளையல்களும் அணி செய்கின்றன. அர்த்தபத்மாசனநிலையில் கால்கள் அமைந்துள்ளன. திரு. எ.வி. ஜெயச்சந்திரன் அவர்கள் கூறுவது போல் நுணுக்கிய வேலைப்பாடுகளின்றி தட்டையாகவும் சற்று கரடுமுரடாகவுள்ளது.

<u>செவல்பட்டி விநாயகர்</u>:-

காமராஜர் மாவட்டம், சாத்தூர் வட்டத்தில் வெம்பக்கோட்டைடைக்கும் திருவேங்கடத்திற்கும் நடுவேயுள்ள சிற்றூர் செவல்பட்டி. முன்னாள் ஜமீனாக விளங்கிய இவ்வூரில் ஊருக்குமேற்கேயுள்ள ஒரு சிறிய கற்குன்றில் இக்குகைக்கோவில், வடக்கு நோக்கி அமைந்துள்ளது. ஏறக்குறைய 60 அடி உயரத்திலுள்ள இக்குகைக்கோவிலுக்கான படிகள் சிதைந்துள்ளன. ஒருதளக்குகையில் கிழக்கு நோக்கி, இரு துவாரபாலகருடன் ஒரு அறை அமைந்துள்ளது. அவ்வெற்றறை சிவலிங்கத்திற்காக அமைக்கப்பட்டிருக்கலாம். வடக்குநோக்கி குகையின் தரையிலிருந்து சுமார் 3 அடி உயரத்தில் 4 அடி உயரத்தில் இருந்த நிலையில் விநாயகரும், நின்ற திருக்கோலத்தில் விஷ்ணுவும் செதுக்கப்பட்டுள்ளனர். மேற்குநோக்கி விரித்த செஞ்சடையாட கைகளை வீசி நடனமாடுகிறார் முக்கட்செல்வர்.

விநாயகர் வேலைப்பாடுகளுடன் கூடிய கிரிடம் அணிந்துள்ளார். இவ்வலம்புரி விநாயகரின் துதிக்கை கீழே தொங்காமல் மார்பிலிருந்து வளைந்து கையின் நுனிப்பகுதி வலத்தோளின் சற்று கீழேவரை வளைந்துள்ளது. வலக்கொம்பு பருத்து குட்டையாக முழுமையாக உள்ளது. ஆனால் இடக்கொம்பு முற்றுமில்லை. வயிற்றிற்கும் மார்பிற்குமிடையில் மார்புப்பட்டை சன்னமாகவும் வயிற்றுப்பட்டை வேலைப்பாடுகளுடன் சற்று அகலமாகவுள்ளது. வலத்தொடையின் மீதுள்ள வலக்கையில் நீண்ட கொழுக்கட்டையும், இடத்தொடையின் மீதுள்ள இடக்கையில் உருண்டையான (பழம்?) பொருளுமுள்ளன. மேற்கைகளின்றி இருகைகளே உள்ளன. நன்கு உருண்டையான தொந்தியின் தொப்புள் சற்று பள்ளமாகவுள்ளது. கைகளில் வளையல்களும், நாகதோள்வளையல்களும் அணிந்துள்ளார்.

பத்மாசன நிலையில் அமைக்கப்பட்ட இரு பாதங்களும் தொந்தியின் காரணமாக விலகியுள்ளன. மாலா யாக்ஞோபவீதம் அணிந்துள்ளார். இருகால்களுக்குமிடையே கௌபீனப் பகுதி நுண்ணிய வேலைப்பாடுகளுடன் விளங்கிறது. திரு. எ.வி.ஜெயச்சந்திரன் அவர்கள் இக்குகையை முற்காலத்தைத் தொடர்ந்து, மாற்றக்காலத்தைச் சார்ந்து கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கூறுவார்.[12] சிற்ப அமைப்பில் இவ்விநாயகர் பிள்ளையார்பட்டி விநாயகர் அமைப்பைப்பின்பற்றி சிறுமாற்றங்களுடனும் நுணுகிய வேலைப்பாடுகளுடனும் அமைக்கப்பட்டுள்ளார். ஆகவே இக்குகைக் கோயிலை மற்றுமோர் பிள்ளையார்பட்டி எனவும் கூறலாமா?

அடிக்குறிப்புகள்:-

1. P.Z. Pattabiraman - Sanduares Rupestres Del (INDFDE SUB) Vol. I & II 1975.
2. C. Sivaramamoorthy - Kalugumalai and Early Pandyan Rock-cut Shrines - P. 13 - 1961.
3. Iravatham Mahadevan - Tamil Brahmi Inscriptions of Sangan age - P. 15 - IInd International Conference Seminor of Tamil Studies Jan. 3-10-1968.
4. Dr. A.V. Jayachandran - P.3 - Stylis in Pandyan Sculpturing - Seminar on Pandiyan History - Madura University 22-3-1971.
5. K.R. Srinivasan - Some aspects of Religion as revealed by Early monuments and literature of the south P. 35 - 1959-60.
6. திருஞான சம்பந்தர் 2:232:3, தருமை ஆதினப்பதிப்பு - 1953
7. திருநாவுக்கரசர் 4-2-15 - ஷை - - 1957
8. தொ.பொ. மீனாட்சி சுந்தரனார் - பிறந்தது எப்படியோ - பக். 10 - 1951.
9. பரிபாடல் - மர்ரே பதிப்பு பக். 10 - 1957.
10. டாக்டர் ஜெயபாரதி - மயில் வார இதழ் - 16.3.93.
11. சா. கணேசன் - பிள்ளையார்பட்டி வரலாறு பக். 43, 1983.
12. எண் 4-ல் குறித்தபடி.

# அருப்புக்கோட்டை கல்வெட்டுக்கள்

பி. சந்திரசேகரன்,
வரலாற்றுத் துறை, இராஜபாளையம்
இராஜுக்கள் கல்லூரி,
இராசபாளையம்.

## முன்னுரை:-

அருப்புக்கோட்டை என்பது தற்சமயம் காமராசர் மாவட்டத்தில் விருதுநகரை அடுத்துள்ள ஒரு சிறு நகரமாகும். 1914-ம் ஆண்டில் இந்திய கல்வெட்டு இலாகவினர், தங்களுடைய ஆண்டறிக்கையில் அருப்புக் கோட்டையின் சில கல்வெட்டுக்களை வெளியிட்டுள்ளனர். அவைகளின் மூலப் பிரதிகளை வைத்துக் கொண்டு அருப்புக்கோட்டையின் கல்வெட்டுக் கால வரலாறு கீழ்க்கண்டவாறு தெளிவிக்கப்படுகின்றது.[1]

## கல்வெட்டுக்களின் காலம்:-

கிடைக்கப் பெற்ற கல்வெட்டுக்களில் இரண்டு கல்வெட்டுக்கள் ஜடாவர்மன் குலசேகரவர்மன் என்றும் மற்றவைகள் சுந்தரபாண்டியன் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இவைகள் பிற்காலப் பாண்டியர்களிக்காலமான கி.பி. 13-ம் நூற்றாண்டு என்று தோராயமாக நிர்ணயிக்கலாம்.[2]

## நிலப்பகுதியின் விபரம்:-

இப்பகுதி என்பது செங்காட்டிருக்கை என்று 13-ம் நூற்றாண்டில் அழைக்கப்பட்டிருக்கின்றது. பொதுவாக இருப்பிடங்கள் ஊர், நகரம், புரம், பட்டிணம் என்றுதான் கல்வெட்டிக் காலங்களில் அழைக்கப்படும். ஆனால் இது இருக்கை என்றழைக்கப்படுகின்றது. இருக்கை என்பது பொது வானதாக இருப்பிடம் என்று பொருள்படும். இங்கு இருக்கை என்பது ஒன்று இந்த ஊர் புதியதாகத் தோன்றியிருந்ததால் இருக்கை என்றழைக் கப்பட்டிருக்கலாம் அல்லது ஒரு சமுதாயத்தினைச் சார்ந்தவர்களல்லாமல், பல்வேறு சமுதாயப் பிரிவுகள் தங்கியிருந்ததனால் அது பொதுவாக இருக்கை என்ற பெயராக அழைக்கப்பட்டிருக்கலாம். மேலும் இது செங்காடு என்றழைக்கப்பட்டுள்ளது. இந்த செங்காடு என்ற கல்வெட்டுச் சொல் லானது, தற்சமயம் வழக்கத்திலிருக்கும் செவக்காடு என்ற சொல்லின் தாய் சொல்லாகயிருந்திருக்கலாம். செவக்காடு அல்லது செங்காடு என்பது சிவந்த மண்ணையுடைய காட்டுப் பகுதியாகும். இப்பொழுதும் அருப்புக்கோட்டை என்பது சிவந்த மண் பரப்பு கொண்ட பகுதியாகத்தான் உள்ளது. எனவே செங்காட்டிருக்கை என்பது செவந்த மணல் கொண்ட காட்டுப் பகுதியில் இருக்கையினை ஏற்படுத்தியதால் செங்காட்டிருக்கை என்ற பெயர் இதற்கு தோன்றலாயிற்று.

## வணிகர்களின் இருப்பிடம்:-

இந்த இருக்கையானது வணிகர்கள் வசித்து வந்த பகுதியாக இருந்தது. கல்வெட்டு எண் 412- ஆனது ஒரு தெருவான சிவல்லவன் பெருந்தெருவான தேசியர் விஜயப் பட்டணம் என்ற ஒன்றினைக் குறிப் பிடுகின்றது. இந்த பெயர் பன்னாட்டு வாணிகர்கள் இங்கு ஒரு பெரிய

..35..

தெருவில் வசித்தார்கள் என்பதனைக் குறிப்பிடுகின்றது. மேலும் இப்பகுதியில் மற்றொரு தெருவான இடத்துவலி விக்கிரம பாண்டியன் பெருந்தெரு ஒன்றும் காணப்பட்டது.[3] இந்த தெருவில் தென் இலங்கை சென்று வணிகம் செய்த வளைஞ்சியர்கள் என்ற வணிக குழுவினரும் வசித்திருந்தனர். இந்த பகுதி வெளிநாட்டு வணிகர்கள் வந்து தங்குமிடமாகவும் மட்டுமின்றி வணிகர்கள் என்று சாதாரணமாக அழைக்கப்படும் உள்நாட்டு வணிகர்கள் வசிக்கும் பகுதியாகவும் விளங்கியுள்ளது. இவர்கள் வளியிற் பழி விலங்கி என்றும் ஓர் பெரிய தெருவினிலே வசித்துள்ளனர். இவர்கள் செக்கு வைத்து எண்ணை பிழிந்து விற்பனை செய்யும் வணிகர்களாவர். மேலும் இவர்கள் அந்த கிராம உள்ளாட்சி நிறுவனமாக ஊர் என்ற அமைப்பில் பாதி உரிமையுடையவர்களாகவும் திகழ்ந்தார்கள்.[4]

கிராம அமைப்பு:-

இப்பகுதியில் வணிகர்கள் தங்கியிருந்தாலும் இப்பகுதி கி.பி.13-ம் நூற்றாண்டின் சமூகத் தன்மைக்கேற்ப விளை நிலங்களை கொண்ட ஓர் ஊர் பகுதியாகவும் விளங்கியது. இந்நிலங்கள் ஓர் ஊர் என்ற சமூகத்தின் உடமையாகயிருந்ததா அல்லது தனியார் உடமை நிலங்களாகயிருந்தனவா என்பது கேள்விக் குறியாகும். கல்வெட்டுச் சொற்களான கும்பனூர் முத்தரையன் நிலம், மதுவளிகங்கன் நிலம், அருவிட்ட சொக்கன் நிலம், தென்னிலங்கை நாடாள்வான் நிலம் என்பவைகள். நிலங்கள் தனியார் உடமையாகயிருந்தன என்பதற்கு ஆதாரம் கூறுவது போலயிருந்தாலும்,[5] தனியார்கள் நிலத்தின் மீது உடமை கொண்டாடினார்களா அல்லது மேற்படி நிலத்தின் மீது விளைந்த விளைச்சல் மீது உரிமை கொண்டாடினார்களா என்ற சந்தேகம் தீர்வதற்கு போதுமான ஆதாரங்களில்லை. ஆனால் அதே சமயத்தில் ஊரார்கள் விற்பனை செய்பவர்களாகச் சொல்லப்படுவதால்,[6] ஒருவேளை நிலத்தின் மொத்த உடமை ஊராருக்கு அதாவது ஒரு சமூகப் பிரிவினருக்குச் சொந்தமானதாகயிருக்குமோ என்ற ஐயப்பாடும் எழுகின்றது.

இடத்துவளி என்ற ஓர் சமூகப் பிரிவினர்கள் இந்த ஊரின் முக்ய மானவர்களாக இருந்திருக்கின்றார்கள். இந்த இடத்துவளி என்பவர்கள், தட்டான் தொழில் செய்பவர்கள் ஆவர்.[7]

நிலத்தின் மீது கடமை:-

நிலங்கள் பதினாறு சாண் கோலால் அளக்கப்பட்டிருக்கின்றது. கோயிலுக்கொன்று கடமையாக ஒருமா அளவு நிலத்துக்கு 4 கலமும், புன்செய் நிலத்துக்கு 16 மேனியும், காந்திரமும் அளக்க நிர்ணயிக்கப் பட்டுள்ளது. கோயிலுக்கு கடமையாக அளக்க வேண்டிய நெல்லு களத்தி லேயே எல்லாவித சுத்தமும் செய்து அளக்கப்பட்டுள்ளது. அதாவது கல், பதர், செத்தை, உளைமடிவால், வாசி போன்றவைகள் நீக்கம் செய்யப் பெற்றிருக்க வேண்டும்.[8]

**நிலத்தானம் வழங்கும்முறை:-**

நிலத்தினைக் கோயிலுக்கென்று வாங்கியவர்கள், நிலத்தினைக் கோயிலுக்கென்று முழுமையும் தந்துவிடாமல் அதில் பயிர் வைக்கும் உரிமையினை (காராண்மையினை) நிலத்தினை வாங்கியவர்களே வைத்துக் கொள்ளுகின்றார்கள். ஆனால் அவர்கள் நிலத்தின் முழுவிளைச்சலையும் அனுபவிக்காமல், விளைச்சலில் பகுதியினை கோயிலுக்கு அளிக்கின்றார்கள். இங்ஙனம் கோயிலுக்கு அளக்கும் பொழுது, பயிரின் தன்மையினை நோக்கியும், அதில் வீணான சாவிப் பயிரினைக் கழித்துவிட்டு, மீதமிருக்கின்ற பயிர் நின்ற நிலத்திலிருந்து கணக்கிடப்பட்டு அளக்கப்படுகின்றது.[9]

**முடிவுரை:-**

கல்வெட்டுக்கள் அருப்புக்கோட்டையினை நகரமாகவும், கிராமமாகவும் சித்தரிக்கின்றன. இருந்த போதும் இப்பகுதி கோட்டை என்ற அமைப்புடன் எப்பொழுது இயங்கியது என்பது ஆராயபாலற்குரியது.

**அடிக்குறிப்புகள்:-**

1. இந்திய அரசு கல்வெட்டு இலாகா துறையின் அறிக்கைகள் எண் 402/1914, 403/1914, 405/1914, 407/1914, 408/1914, 409/1914, 410/1914, 412/1914.
2. திரு. என். சேதுராமன் எழுதிய பிற்காலப் பாண்டியர் வரலாறு என்ற நூல் துணை புரிந்தது.
3. இ.க.அ. 407/1914.
4. இ.க.அ. 402/1914
5. இ.க.அ. 410/1914
6. இ.க.அ. 409/1914
7. இ.க.அ. 409/1914
8. இ.க.அ. 412/1914
9. இ.க.அ. 410/1914.

# அய்யனார் கோவில் – ஓர் ஆய்வு

**************************

க. அழகர்,
தமிழ்த் துறை,
இராசபாளையம் ராஜுக்கள்
கல்லூரி,
இராசபாளையம்.

## முன்னுரை:

சமய வாழ்வுக்கு இன்றியமையாத அடிப்படை கடவுள் கொள்கையாகும். கடவுள் ஒருவர் உண்டு என்ற உணர்வும், அவரை வாழ்த்தி, வழிபட்டி வணங்குவது மக்களுடைய கடமையாக உள்ளது. இயற்கையின் கூறுகளான நிலம், நீர், தீ, வானம், காற்று என்ற ஐம்பூதங்களை ஆக்கிப் படைத்து, ஆட்டிப் படைக்கும் முதற்பொருள் கடவுள் என்பதை உணர்ந்த மக்கள் தெய்வத்தை வணங்க ஆரம்பித்தனர். அப்படி காலந்தோறும் மக்களால் வணங்கப்பட்டு வரும் தெய்வம் காமராசர் மாவட்டம், இராசபாளையம் வட்டத்திலுள்ள அய்யனார் கோவிலாகும். அய்யனார்கோவில், மற்றும் இக்கோவிலுள்ள சின்ன ஓட்டக்காரன், பெரிய ஓட்டக்காரன், பிணந்தின்னி மாடசாமி போன்ற தெய்வங்களின் வரலாற்றை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## அய்யனார் கோவில் இருப்பிடம்:

இராசபாளையம் வட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் பல தெய்வங்களாக, இராக்காச்சி கோவில், ஏழு கன்னிமார், கோட்டமலை கருப்பையா, வலக்கட்டு கருப்பசாமி, குருக்கலாஞ்சி, விரியின்கோவில், பொரசம்பர கருப்பையா, காளியம்மன், முருகன், மாவரசிம்மன், நல்லவர் மார்பிள்ளை, பொம்மக்கா, காலாடி, ஒத்தக்கொம்பு அய்யனார், சல்போட்டுக் காளை, வெரியாண்டி, பேபாறையான், வண்டிப் பத்தரகாளி போன்ற தெய்வங்கள் உள்ளன. அவற்றுள் அய்யனார் கோவில் இராசபாளையம் வட்டத்திலிருந்து 14 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள தெய்வமாகும்.

## மக்கள் தெய்வத்தை வணங்கக் காரணங்கள்:

ஆதி காலத்தில் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை மக்கள் மேற்கொண்டனர். இயற்கையின் சீற்றமாகிய மின்னல், இடி, புயல் போன்றவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இயற்கைச் சக்திகளான சந்திரன், சூரியன், பாறைகள், மரங்கள் போன்றவற்றை தெய்வங்களாகக் கருதி பயத்துடன் வழிபட்டனர். இவ்வாறு வழிபட்டால் தங்களுக்கு நன்மை செய்யும் என நம்பினர். இயற்கைச் சக்திகளால் தமக்கு நன்மை கிடைத்தபோது தாங்கள் வழிபாட்டை இயற்கைத் தெய்வங்கள் செவிசாய்த்து ஏற்றுக் கொண்டதாகக் கருதி அவற்றிற்கு விழா எடுத்துத் தங்களுடைய நன்றிக் கடனைச் செலுத்தினர். இதுவே மக்கள் தெய்வங்களை வழிபடக்காரணமாயிற்று. இக்கூற்றை நிரூபிக்கும் வகையில் ஆர். இராமநாதன் கூறுவதைக் காணலாம். "மனிதன் இயற்கையின் தன்மைகளுக்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்டு, அதன் வலிமை தன்னைப் பாதிக்காமல் இருக்க, குற்ற உணர்விலிருந்து விடுவித்துக்

கொள்ளவும், ஏஅதனும் ஒரு வழியைத் தேடுவது இயல்பாக உள்ளது. இதுவே வழிபாடாகும். மனிதன் இறைவனிடம் நம்பிக்கை வைப்பதற்குக் காரணம் இயற்கையிடமும், மரணத்திற்கும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம்"[1].

பொதுவாக மக்கள் நோயி நொடி இல்லாமல் தாங்கள் நீண்ட காலம் வாழவும், குடும்பத்தில் சண்டை சப்தம் இல்லாமல் ஒற்றுமையாக இருக்கஊவும், செல்வங்கள் தங்களுக்கு வந்து அடையவும், மழையின் பயனைப் பெறவும், இறைவனை வணங்குகின்றனர்.

இந்த முறையில் இராசபாளையம் வட்டம் மேற்குத் தொடர்ச்சி மலையிலுள்ள தெய்வங்களாகிய அய்யனார், சின்ன ஓட்டக்காரன், பெரிய ஓட்டக்காரன், பிணம் தின்னும் மாடசாமி போன்ற தெய்வங்களை பல்வேறு இனத்து மக்கள் பக்தியுடன் வழிபடுகின்றனர்.

<u>அய்யனார் என்பதற்குப் பொருள்</u>:

பொதுவாக "ஐயன்" என்னும் சொல்லுக்கு அரசன், உயர்ந்தோன், கடவுள், குரு, தந்தை, மூத்தோன் என மணிமேகலை தமிழ் அகராதி பொருள் கூறுகிறது".[2] இத்துடன் 'ஆர்' விகுதி சேரும் பொழுது அய்யனார் எனப் பெயர் வருகிறது. இக்கருத்தையே தமிழ் லெக்சிகன் அகராதி "ஐயன் என்னும் சொல்லுக்கு முனிவன், ஆசான், பார்ப்பான், தந்தை, உயர்ந்தோன், எஜமான், அரசன்"[3] எனப் பொருள் கூறுகிறது. "ஐயன் என்னும் சொல்லுக்கு கழக அகராதி அரசன், அரிகரபுத்திரன், அருகன், அழகுடையவன், ஆசிரியன், உயர்ந்தோன், கடவுள், குரு, சிவன் தந்தை, தமையன், தலைவன், மூத்தோன்"[4] எனப் பொருள் கூறுகிறது.

ஐயனார் என்பதற்கு "அரிகரபுத்திரர், சாத்தன், ஐயப்பன் என்ன பொருள் கூறுகிறது"[5] கழக அகராதி.

<u>அய்யனாரின் வரலாறு</u>:

அய்யனார் என்பவர் பிறக்கவில்லை. அவர் மண்ணில் காளான் முளைப்பதைப் போன்று இந்தப் பூமியில் தானாக முளைத்தவர் என்பர். ஆதனால் இவரை தானா முளைச்ச நீராத்து லிங்கம் அய்யனார் என்றும், தானா முளைச்ச தலைமலை வீரப்பன் என்றும் கூறுவர். இதற்கு மாறாக தமிழ் லெக்சிகன், கழக அகராதி போன்ற நூல்கள் அரிகரபுத்திரன் ஐயனார் என்று கூறுவதன் மூலம் அவர் பிறந்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. இக்கருத்தினை நிலை நாட்டும் பொருட்டு ஐயர் என்பவரே அய்யனார் ஆனார் என்பர். இராசபாளையம் மேற்குத் தொடர்ச்சி மலையில் முன்பு ஐயர்கள் வாழ்ந்து இருக்கிறார்கள். அதனால் அவர்கள் வாழ்ந்த பகுதி ஐயன்செழும்பு என அழைக்கப்படுகிறது. இப்பொழுதும் உள்ள ஐயன் செழும்பில் தென்னை மரங்களும், மா மரங்களும் உள்ளன. அக்காலத்தில் முனிவர்கள் மலைக்குள் தவம் செய்து இருக்கிறார்கள். அப்படி தவம் செய்தவரே இந்த அய்யனார் என்பர். ஒரு சிலர் நாட்டில்

பஞ்சத்தின் காரணமாகவும், போரின் காரணமாகவும், மலைக்குள் சென்று அத்திப்பழம், கிழங்கு போன்றவற்றை பொறுக்கித் தின்று வாழ்ந்துள்ளனர். அப்படிச் சென்றவரே இந்த அய்யனார் என்பர். இதன் மூலம் அய்யனார் மலையில் தானாக முளைத்தவர் என்றும், திருமாலுக்கு மகனாகப் பிறந்தார் என்றும், நாட்டிலிருந்து மலைக்குச் சென்றார் என்றும் அறிய முடிகிறது. ஆரம்பத்தில் மலைக்குள் மரம் வெட்ட, விறகு பொறுக்கச் கொடி அறுக்கச் சென்றவர்கள். இத்தெய்வத்தைக் கண்டு, தங்களுக்கு சீக்கிரம் விறகு கிடைக்கவும், கொடி கிடைக்கவும் வணங்கியுள்ளனர். அத்தெய்வத்தின் சக்தி தங்களுக்குக் கிடைத்தவுடன் அதற்கு விழா எடுக்க முடிவு செய்தனர். அதன்படி இன்று தாழ்த்தப்பட்ட மக்களில் ஒரு பிரிவினர் புது வருடம் சித்திரை மாதம் அன்று வெள்ளைக் குடை திருவிழா எடுத்து ஆடுகின்றனர். அப்பொழுது "அய்யனார் தெய்வம் குதிரை வாகனத்தில் அமர்ந்து இருக்க, அத்தெய்வம் உள்ள வண்டியை வீதிகள் தோறும் இழுத்துச் செல்லுகின்றனர். மக்கள் எல்லோரும் பயபக்தியுடன் வணங்குகின்றனர். அந்த நாள் அய்யனார் கோவிலுக்குச் சென்றும் வணங்குகின்றனர். இக்கருத்தை வலியுறுத்தும் பொருட்டு தமிழ் லெக்சிகன் கூறுவது, "கிராம மக்களுடைய காவல் தெய்வமாக உள்ள அய்யனார், தனது கொடியில் சேவல் சின்னம் கொண்டு, கறுப்புக் குதிரையில் பயணம் செய்கிறார்"[5]. அய்யனார் மீது பக்தி கொண்ட பெண்கள் அவர் மீது தாலாட்டுப் பாடலும் பாடுகிறார்கள். பொன்னம்மாள் என்பவள் அவரைத் தாலாட்டுவது;

"எட்டு மணி அடிக்க இடையரெல்லாம் சூழ்ந்து நிற்க;
பத்து மணி அடிக்க பழியரெல்லாம் சூழ்ந்து நிற்க
அங்க மழை ஏழு அம்மரவு தண்ணி வர
அம்மரவு தண்ணியெல்லாம் பாலாறு பெருகி வர
பாலாறு தண்ணியெல்லாம் ஏழாறு பெருகி வர
ஏழாத்து தண்ணியெல்லாம் ஒரு ஆறு கூடி வர
அம்மரவு தண்ணியிலே பாண்டியரோ நீராட
முக்காலிபோட்டு இந்த நீரோத்துலிங்கம் முங்கி நின்று நீராடுறாராம்"[7]

இப்பொழுதும் அய்யனார் கோவிலில் ஏழாற்று தண்ணீர் ஒரு ஆற்றிலே வருவதைக் காணலாம்.

<u>சின்ன ஓட்டக்காரன், பெரிய ஓட்டக்காரன்:-</u>

சின்ன ஓட்டக்காரன், பெரிய ஓட்டக்காரன் என்ற இருவரும் அண்ணன் தம்பிகள். எதற்கும் அஞ்சாத வீரர்கள், நல்ல கம்பீரமான தோற்றம் உடையவர்கள். சிறு வயது முதலே தந்தையை இழந்த இவர்கள், தன் தாய் பூரணம் பராமரிப்பிலேயே மதுரையில் வாழ்ந்து வந்தார்கள். அப்பொழுது தான் மதுரை மீனாட்சி திருவிழாவுக்கு கொடி மரம் நட்ட மரங்கள் தேவைப்பட்டது. இம்மரங்களை வெட்டிக் கொண்டு வருவதற்கு தகுதியான ஆட்கள் சின்ன ஓட்டக்காரன், பெரிய ஓட்டக்காரன்

என்ற இருவர்களால் தான் முடியும் என்பதை உணர்ந்த ஊர் மக்கள், அவர்களை மரம் வெட்ட அனுப்பி வைத்தனர். அவர்கள் தாய் முதலில் மறுத்தாலும் பின்பு ஒத்துக்கொண்டாள். பின்பு இருவருக்கும் கட்டுச் சோறு கட்டிக் கொடுத்து, அரிவாள், கைகோடரி இவற்றைக் கொடுத்து அனுப்பி வைத்தாள். அண்ணன் தம்பி இருவரும் மரங்களைத் தேடி பல மலைகளுக்குச் சென்றார்கள். நல்ல மரங்களாக கிடைக்கவில்லை. கடைசியாக அய்யனார் வசிக்கும் மலைக்கு வந்தார்கள். அய்யனார் கோவிலுக்கு மேலே மரங்களை வெட்டி இருக்கிறார்கள். வெட்டுச் சத்தத்தைக் கேட்ட அய்யனார், அவ்விடத்திற்கு சென்று ஒரு புதர் மறைவில் நின்று கொண்டு அவர்கள் வெட்டுவதைப் பார்ப்பதோடு அவர்கள் தோற்றம், வீரம் இவற்றைக் கண்டும் வியந்தார். தனக்கு உதவி ஆட்களாக அவர்களை இங்கேயே தன்னுடன் வைத்துக் கொள்ளலாம் என்பதை சிந்தித்து ஒரு முடிவு செய்தார். உடனே ஒரு சோதனை நடத்தினார். அவர்கள் வெட்டக் கூடிய மரத்திலிருந்து இரத்தம் வரும்படி செய்தார். இரத்தம் வரும் அம்மரத்தை விட்டுவிட்டு வேறொரு மரத்தை வெட்டினர். உடனே அம்மரத்தில் பாலாகப் 'பொங்கி வடிந்தது. அதை விடுத்து வேறொரு மரத்தை வெட்ட தண்ணீராகப் பொங்கி வடிந்தது. இதைப் பார்த்து வியந்த இவ்விருவரும் "என்ன இந்தச் சோதனை" என்று பேசிக்கொண்டிருக்கும் போது புதர் மறைவிலிருந்து அய்யனார் வயதானவர் வேடம் பூண்டு அவர்களை நோக்கி வந்தார். வந்தவர் அவர்கள் யார்? எங்கிருந்து வந்து இருக்கிறார்கள்? யாருக்காக கொடிமரம் வெட்டுகிறார்கள் என்பதை கேட்டு அறிந்தார். பின்பு அவர்களிடம் நான் நல்ல மரங்களை உங்களுக்குக் காட்டுவேன்; நீங்கள் வெட்டி எடுத்துச் செல்லலாம்; ஆனால் ஒரு வாரத்திற்குள் எனது எல்லைக்கு வரவேண்டும் என்று அவர்களிடம் சத்தியம் வாங்கிக்கொண்டார். அண்ணன் தம்பி இருவரும் அர் நல்ல மரங்களைக் காட்ட அவற்றை வெட்டி எடுத்துக் கொண்டு மதுரையில் போய் சேர்த்தார்கள். மீனாட்சிக்கு கொடி மரமும் நடப்பட்டு விழாவும் கொண்டாடப்பட்டது. ஒரு வாரமும் கழிந்துவிட்டது. அண்ணன், தம்பி இருவரும் ஒரு கிழவன் சொல்லி நாம் போகவா என்று இருமாப்புக் கொண்டு போகவில்லை. அவர்கள் வராததைக் கண்ட அய்யனார், தானே மதுரைக்குச் சென்றார். அங்கு தனது சக்தியால் அவ்வூரிலுள்ள மக்கள் அனைவரையும் காய்ச்சலாகவும், வயிறு வலியாகவும் போட்டார். மேலும் தான் ஒரு குடுகுடுப்பைக் காரனாக வேடம் புனைந்து வீதியில் சென்று ஒரு வீட்டில் தண்ணீர் வாங்கிக் குடித்தார். அவ்வீட்டிலுள்ளோர் சாமி இவ்வூரில் உள்ளோர் அனைவரும் காய்ச்சலாக, வயிறு வலியாக, வயிற்றுப்போக்காக கிடக்கிறார்கள். ஒரு காலமும் இப்படி இருந்தது இல்லை. இதற்குக் காரணம் என்ன? என்று கேட்டனர். உடனே அய்யனார் இவ்வூரிலுள்ள அண்ணன், தம்பி இருவரும் மீனாட்சிக்கு கொடி மரம் வெட்டிக்கொண்டு வந்து இருக்கிறார்

கள். அவர்களை அவர்கள் வெட்டிய அந்த மலைக்கு திருப்பி அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பினால் இவ்வூரிலுள்ள எல்லோரும் உயிர் பிழைத்துக் கொள்வார்கள் என்று கூறினார். உடனே ஊரிலுள்ள பெரியவர்கள் எல்லாம் ஒன்று திரண்டு, அண்ணன், தம்பி இருவரையும் மலைக்கு அனுப்ப ஏற்பாடு செய்தார்கள். ஆனால் அவர்களுடைய தாய் பூரணம் இதற்கு சம்மதிக்கவில்லை. பின்பு ஊர்க் கட்டுபாட்டை மீற முடியாதது என்பதை அறிந்த தாய், தானும் தன் மகன்களுடன் கட்டுச் சோற்றைக் கட்டிக் கொண்டு புறப்பட்டாள். மூன்று பேரும் ஊரை விட்டுப் புறப்பட்டுச் சென்றார்கள். நடந்து சென்ற அவர்கள் இரவாகிவிட்டதால் அய்யனார் கோவிலுக்குச் சற்று கிழக்கே ஒரு இடத்தில் தூங்கினார்கள். தாய் நடுவிலும் அண்ணன் தம்பி இருவரும் இருபுறமும் படுத்துக் கொண்டார்கள். தன்னை விட்டுவிட்டுத்தன் மகன்கள் சென்றாலும் சென்று விடுவார்கள் என்பதை உணர்ந்த தாய் தன்னுடைய முந்தானைச் சேலையால் இருவரையும் கட்டிக் கொண்டு தூங்கினாள். தாய் நன்றாகத் தூங்கியதை அறிந்த இருவரும் முடிச்சை அவிழ்த்துக் கொண்டு அய்யனாரிடம் சென்று விட்டார்கள். தூக்கத்தை விட்டு எழுந்த தாய் பதறிப் போய் "டே சின்ன ஓட்டக்காரா, பெரிய ஓட்டக்காரா" என்று கூப்பிட்டுக் கொண்டு ஓடி அய்யனார் கோவில் ஆற்றைக் கடக்கும் போது, அய்யனார் ஆற்றில் அவளை கடக்க விடாதபடி வெள்ளத்தைவிட்டு விட்டார். அம்மா சப்தம் கேட்ட இருவரும் அம்மா நீ ஆற்றுக் அந்தப் புறம் தான் இருக்கவேண்டும், நாங்கள் இங்கே தான் இருக்கப் போகிறோம் என்று குரல் கொடுத்து விட்டு சிலையாகிவிட்டார்கள். ஆற்றுக்கு அப்புறம் உள்ள தெய்வம்தான் இன்று வண்டி பத்திரகாளி என்று அழைக்கப்படுகிறது. இவ்வாறு அவர்கள் வரலாறு கூறப்படுகிறது.

<u>பிணம் தின்னும் மாடசாமி</u>:-

இப்பிணம் தின்னும் மாடசாமியை தாழ்த்தப்பட்ட மக்களின் ஒரு பிரிவினர் வணங்குகின்றனர். முன்பு ஒரு காலத்தில் மனிதர்களைப் பிடித்துச் சாப்பிடக் கூடிய ஒரு அரக்கன் இருந்து இருக்கிறான். காட்டிற்கு வேலைக்குச் சென்ற அனைவரும் மாலை மூன்று மணிக்குள் வீட்டிற்கு வந்துவிட வேண்டும். இல்லையெனில் அவ்வரக்கன் பிடித்துத் தின்று விடுவான். அப்போது காட்டிற்கு புளியம்பழம் அடிக்கச் சென்றவன், இருட்டி விட்டதால் ஆறாவது மைலுக்குப் பக்கத்திலுள்ள ஒரு மடத்தில் தங்கிருக்கிறான். இரவு நேரம் சென்றால் தன்னைப் பிடித்துத் தின்றுவிடுவான் அவ்வரக்கன் என்பது அம்மனிதனின் எண்ணம், அவ்வேளையில் அய்யனார் மற்றும் சின்ன ஓட்டக்காரன், பெரிய ஓட்டக்காரன் குதிரையில் வந்து அம்மடத்திலுள்ள அவனைப் பார்த்து என்னடா 'இங்கே இருக்கிறாய் என்று வினவ, அவன் "சாமி இந்நேரம் நான் சென்றால் ஊருக்குப் பக்கத்திலுள்ள அரக்கன் என்னைப் பிடித்துத் தின்று விடுவான், அதனால் தான் இங்கே போகிற உயிர் இங்கேயே போகட்டும் என்று தங்கிவிட்டேன் என்றான். உடனே சின்ன

ஒட்டக்காரன், வாடா எங்களோடு உன்னைக் கொண்டு போய் உன்னுடைய வீட்டில் போய் விடுகிறோம் எனக் கூறி தங்களுடன் அவனை அழைத்துச் சென்றனர். பெரிய மநதை வந்தவுடன் அம் மனிதனைக் கண்ட அரக்கன் அவனைப் பிடிக்க ஒடி வரும்பொழுது சின்ன ஒட்டக்காரன் தான் வைத்திருந்த வலையை வீசி அவ்வரக்கனைப் பிடித்து இழுத்துக்கொண்டு, அம்மனிதனை வீடு கொண்டுபோய் சேர்த்தனர். அவ்ன் சாமி என்னுடைய உயிரைக் காப்பாற்றிய நன்றிக்காக நான் வருடந்தோறும் நான் தங்கிய மடத்தில் பானக்கரம் கரைத்து பொது மக்களுக்கு ஊற்றுவேன் என்றான். இப்பொழுதும் சித்திரை மாதந்தோறும் அந்த மடத்தில் பானைக்கரம் கரைத்து ஊற்றுவதை நாம் காணலாம். அவ்வரக்கனை இழுத்துச் சென்ற சின்ன ஒட்டக்காரன் அய்யனார் கோவிலுக்குப் பக்கத்திலுள்ள ஒரு இடத்தில் கழுத்து உயரம் குழி தோண்டி, அவ்வரக்கனை அக்குழிக்குள் இறக்கி மண்ணைப்போட்டு மூடி அதற்கு மேல் குழிதாளியைப் போட்டு மூடினார். அவ்வரக்கன் மேலே எழுந்து விடாதபடி இன்னும் அக்குழிதாளியை சங்கிலியால் பிணைக்கப்பட்டு இருப்பதைக் காணலாம். அவ்வரக்கனுக்குப் பூசை செய்யும்போது குழிதாளியைத் திறக்காமல், தேங்காய், பழம், பூ, பத்தி வைத்து கும்பிடுகிறார்கள். குழிதாளியை திறந்தால் அவ்வரக்கன் மீண்டும்எழுந்து வந்துவிடுவான் என்பது மக்களின் எண்ணமாக உள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களில் ஒரு சிலர் மேல் இந்த பிணம் தின்னும் மாடசாமி தெய்வம் வருகிறது. உடனே அத் தெய்வம் சுடுகாட்டுக்கு ஓடிப்போய் தீயில் வெந்து கொண்டிருக்கும் பிணத்தின் கை, கால்களை எடுத்துத் தின்று கொண்டு ஓடுவதைக் காணலாம்.

முடிவுரை:

இக் கட்டுரை மூலம் அய்யனார் தானாக பூமியில் முளைத்தவர் என்றும், திருமாலுக்கு மகனாகப் பிறந்தவர் என்றும் அறியப்படுகிறது. சின்ன ஒட்டக்காரன், பெரிய ஒட்டக்காரன் மதுரைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்களின் வீரத்தைக் கண்டு அய்யனார் தனக்கு உதவி ஆட்களாக வைத்துக் கொண்டார் என்றும் அறிய முடிகிறது. தாய் வண்டிப் பத்திரகாளி, பிணம் தின்னும் மாடசாமி வரலாறும் கூறப்பட்டுள்ளது.

குறிப்புகள்:

1) ஆறு இராமநாதன், தமிழ்நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், ப.266.
2) மணிமேகலை தமிழ் அகராதி, ப.140
3) Tamil Lexicon, Vol. VI. P. 580
4) கழகத் தமிழ் அகராதி, ப.226
5) I bid P. 226
6) Tamil Lexicon Vol. VI. P. 581
7) பேட்டி – பொன்னம்மாள்; 75, இராசபாளையம் நாள் 25.1.94,

# THE SOCIO-CULTURAL ASPECTS GLEANED FROM ANDAL'S PASURAMS

Dr. V.BALAMBAL,
Department of History
UNIVERSITY OF MADRAS.

There were few women in Indian society who have established their name and fame with their own efforts, talents and expressions. The Caste System was a block to the progress of women and they were very backward and faced many sufferings. But women like Andal, Avvaiyar, Karaikkal Ammaiyar, Thilagavathiyar and Mangayarkarasiyar were able to make their lives meaningful which in turn made them historically important persons. Though they were more religious and devoted to their lords, their expressions have allotted a separate place in the cultural history of of country. They had composed many verses in praise of their lords, which apart from expressing their religious vervour, incidentally give a good account of the socio-cultural aspects of the society of their times. There is a marked difference in the approach between Andal and Saiva Saint women. She resembles more the Gopikas of the north.

Andal also known as Goda, Kothai, Chudikkodutta Nachiyar etc., is believed to be the incarnations of Mother Earth (Bhudevi). She was found in a basil grove in Stivilliputtur by Vishnuchitta or Periyalvar and brought her up with great love and care. Periyalvar supplied tulsi garlands to the Vishnu temple and Kothai, because of her immense love for the Lord, wore the garland before it was sent to the temple. When her hair was found in the garland, the priest complained to Periyalvar, who in turn found out the real culprit and warned her. But surprisingly the Lord Himself made them understand that He wanted the garlands adorned by Kothai. Hence the old practice continued and Periyalvar called her Andal and Chudikkodutta Nachiyar. She wanted to be united with the Lord in wedlock. The Lord also convinced her father and His acceptance for Goda. The marriage was to take place in Srirangam and Goda was taken in procession from Srivilliputtur to Srirangam and she went to the sanctum, she became a jyoti and immersed with the Lord.

During her maidenhood Andal, the only woman Alvar composed Tiruppavai (30 verses) and Nachiyar Tirumozhi (143 verses into 10 cantos). To an orthodox Vishnu devotee, these verses may look like devotion songs in praise of the Lord. But an indepth study of these verses proves otherwise also. They reveal the social and cultural practices of the then society. Some of them were indigenous in character and many other had Vedic influence. Hence it is a mixture of Vedic as well as Tamil culture.

The period of Andal is still a disputed question. Tradition attributes her date of birth as 97th year of the Kali age i.e., 3005 B.C. But modern scholars give different dates (i.e.) 400 A.D. or 716 A.D. or 9th Century A.D. Most accepted theory is that she belonged to the post-Sangam age. But there is no difference of opinion about other details about her birth (i.e.) she was born in the Tamil month of Adi in Purvaphalguni as terism (Puram) at Stivilliputtur.

Periyalvar brought her up with all love and care and she also started showing keen interest in her Lord. This is expressed in the form of Tiruppavai and Nachiyar Tirumozhi. It is not known whether Andal had formal education. Her knowledge and skill of expression are plain proof of her literary strength. Perhaps Periyalvar would have giver her formal as well as informal education to Andal. Similarly it may be understood many women of ancient time were not given opportunity to go to educational institution for obvious reasons.

The feelings of a teenage girl and longing for marrying a person whom she loved and the pangs of separation and the greatest devotion to her lover are well expressed in Andal's verses. The people of the time had good knowledge about Ramayana, Mahabharata and Puranas and Vedas. Andal's Pasurams specify incidents from these religious literature. Importance is given to the exploits of Krishna. Krishna killed the demon Putana while drinking the poisonous milk. He destroyed another demon who came as a cunning cart. Lord Ranganatha is Sesha Sayana (i.e.) reclines on a serpent conch amidst milky Ocean.[1] He destroyed Kesi in the form of a

horse and defeated the mallas wrestlers) of Kamsa's Court.[2]

Her knowledge of Ramayana and the character of Kumbakarna is revealed when she was waking a girl to join her for the Pavainonbu. She asks her whether Kumbakarna has given his sleep to her.[3] . Krishna killed Kuvalayapita (an elephant) by puucking its tusks.[4] Krishna marries 16000 virgins after killing Narahasura.[5] Here Andal feels jealous about the conch in the hand of Krishna saying that 16000 girls are Krishna's wealth whereas Krishna Himself is conch's wealth. In her agony and separation, she feels tht the Conch is better placed than anybody as it has the fortune of kissing the lotus lips of Krishna ofter.

Her knowledge of Geography, climate, clouds, sky, animals, birds, seasons etc., are well depicted in her verses. When she wants to send message to the Lord of Venkata Hills, she calls the clouds to do the job.[6] ... We are reminded of Mega Sandesa of Kalidasa.

The people are aware of 108 sacred shrines of Vishnu in north and south India. When Andal was so involved in knowing about Krishna, Periyalvar gives her a detailed account of all Stalas. She expresses that to her the first and foremost sthala is Srirangam and Lord Sri Ranganatha. She imagines Srivilliputhur as Ayarpadi, girls as Gopikas, the Vadaperun-koil as the house of Nandagopa, the foster father of Krishna and the Lord of the temple as Krishna.

People believed in seven births and dreams. Andal wants not only in that birth but in all other births Ranganath to her Lord and Refuge.[8] The dreams of Andal had come true and it is well narrated in the 6th decade of Nachiyar Tirumozhi. Accordingly she was united with her Lord at the end. People had a nap after good food. It is known as annavasam seydal.[9] The Conch in the land of Krishna had a nap after having the nector from his lotus lips.

While talking serious matters, smiles are used to stress the importance of the theme. When she says about her pangs

of separation, she says though she looks nice outwardly, inwardly she is useless and ugly - It is like a useless wood apple infented with insects inside but looks good outwardly.[10]

Similarly, people have moral fear about their sins and they would go to any extent to get rid of it. One of the ways is to chant the name of Lord Krishna and the sins would vanish like a straw put into the fire.[11] The longing to beget the son existed in the Tamil Society. They preferred sons to daughters and it was believed that those who chant the verses of Andal in praise of God would be blessed with good husbands and sons.[12]

Caste system existed in the Tamil Society. The Brahmins were well respected and enjoyed high status. But spite of it Andal feels that high birth need not be a criterion for high status. She makes this reference because though she belongs to a higher caste, she does not enjoy high status. She is longing for her union with Ranganatha. Whereas the Conch, born of the Asura Panchajanya enjoys closeness to the lotus lips the Lord.[13] This was the personal opinion of Andal as she was envious of the Conch. Other wise, the caste system continued to be rigid in the Tamil Society.

<u>Pavai nonbu</u> was practised by young girls in the month of <u>Margazhi</u> which is very very sacred as celebrations for Siva and Vishnu take place in this holy month.[14] Andal's <u>Tiruppavai</u> gives all importance to this month and tells the practices to be followed by girls to get good husbands. All the girls of a place get up early before sun rise, go to the river for sacred bath, perform the ritual in a common place. Even in the Sangam age, young girls perform <u>Thai nonbu</u> to get good match. Certain rituals and practices of the girls for this Pavai nobbu in Andal's period were the following:[15]

a) They would refrain from taking ghee and milk till the end of the <u>vrata</u>.

b) They would get up early in the morning and bathe in the river.

c) They would refrain from applying collyrium to their eyes.

d) They would not decorate their hair with flowers.

c) They would not speak painful untruth.

f) They would liberally give alms to the poor and ascetics.

g) They would lead a contented life.

If these were done in a perfect manner, the girls would get good husbands. The nnayaka-nayaki bhava is well expressed in the songs of Andal. Apart from getting husband, it was believed that Varuna would bestow heavy showers throughout their region if the nonbu is performed sincerely.[16]

The marriage rituals are well narrated in the sixth decade of Nachiyar Tirumozhi. The dream of Andal expresses the actual practice of marriage of the time. It is interesting to note that both the Vedic practices and Dravidian practice were followed in the Society. The Sangam literature give a detailed account of the Tamil marriage and it is different from the practice depicted in Silappadikaram. The early Sangam marriage does not say about sacred fire on tying of tali. In a decorated pandal with lights and floral garlands for the couple, mothers of sons pour water on the bride's head and flower petals and sacred grains. The marriage is consummated on the same day.[17] Big drums resourded with wedding tunes and the couple were seated under a pandal.[18] No Aryan element such as sacred fire or priest chanting mantras etc., are followed in earlier itme times.[19] But in Silappadikaram which is at the end of the Sangam period, Kannagi and Kovalan aged 12 and 16 respectively were married with Vedic rituals. Their marriage was announced to the whole region; drum and Conch were used to make good sounds; the sacred ornament (tali?) was taken around for all to bless it; grand old Brahmin priests conducted the marriage with Vedic rites; Kannagi and Kovalan circumambulated the sacred fire in a clock-wise direction; the womenfolk took round the paligai for prosperity; the marriage was consummated on the same day.

There was both simple and ritualistic marriages in the Sangam age. The letter was due to Aryan influence. In both cases there was no reference to the tying of tali. This was also not included in the Vedic marriage. There was no special mantra for tying the tali in a Vedic marriage. It was later added to the rituals.

In her beautiful dream about her marriage with Narayana, Andal gives a detailed description of the marriage of the time. It was a mixture of both Aryan and Dravidian practice. The bridegroom comes in a procession.[20] This practice is followed even today as mappillai alaipou. The priliminary rituals are performed on the previous to the marriage.[21] Earlier the elderly people negotiate with bride's father for terms. On the marriage day the sister-in-law dresses the bride with the new saree and garlands.[22]

The Apasthamba Sutras on Vedic marriage give a good account of Vedic marriage. The elders coming for a girl, marriage rituals, panigrahana, hajahoma, circumambulation, saptapati, placing the foot on the grinding stone etc. Scuh practices are narrated in Tiruppavai too. The Brahmin priests sprinkled holy water on the couple and chanted mantras and tied amulets on their wrists to ward off evils.[23] The groom was received by beautiful married girls with auspicious lamps and pots filled with water.[24]

There is no mention of tying of tali in Tiruppavai but panigrahana or catching the land is described . In a decorated pandal with the noise of the drum and conch the panigrahana takes place.[25] In this verse Andal imagines herself as Nappinnai, a cousin of Krishna who has the right to marry her. Though medically the marriage between the first cousins is disapproved, it has been a agelong practice in Tamilnadu and Andal also wishes the same to happen to her.

The next important ritual is curcumambulating the sacred fire holding each other's hand and performing Saptapati which is the main part of a Vedic marriage.[26] The bridegroom with his left hand lifts the right foot of the bride and place it on the grind stone.[27] This practice ensures that the bride

would prove to be a patient, modest, submissive and unperturbed. The next practice was the lajahoma in which the bride's brother put the parched rice on her hand and both husband and wife pour the same into the sacred fire.[28] The last ritual stated in her song is the smearing of soffron power and sandal paste over their bodies and the procession taken by them to declare their marriage.[29]

Perhaps the practice of tying tali was not practised during the time of Andal too.

The girl in love and suffering from separation does not take care of her health; she does not comb her hair and chew betels too. This sort of thing is found in Sangam literature. Kama, as the God of love was worshipped by young girls. They observed Kama nonbu and had one meal a day. They celebrated Panguni festival,[30] which is similar to Holi festival of modern times. The practice of wearing upper garment was not commonly practised in the period of Andal. She says about the use of saffron paste on her bosom and wants it to be obliterated without any trace whatsoever by His embrace and Union.[31] This practice of decorating the bosom is described in Sangam literature as foyyal, with sandal paste. She firmly says that she would marry Ranganatha.[32] This sort of choosing her partner is reflected in the form of Kalavu manam in the Sangam age.

It is interesting to note that the religious literature composed by Andal of ancient time throw light not only on the religious aspect but on the socio-cultural themes too. The influence of Aryans and Vedic culture was very much felt at that time. The total surrender to the Lord on one side and her longing to be with them all the time form the theme of her verses. But incidentally, Andal expresses her knowledge of Vedas, Ithihasas, Puranas, Customs, Practices, Geography, religious, rituals etc., in her masterly compositions of Tiruppavai and Nachiyar Tirumozhi.

NOTES:

1. *Tiruppavai*, V.6.
2. ibid., V.8.
3. ibid., V.10.
4. *Nachiyar Tirumozhi*, Canto 7. V.1.
5. ibid., V.9.
6. *Nachiyar Tirumozhi*, Canto 8.
7. *Tiruppavai*, V.4
8. *Tiruppavai*, V.8.
9. *Nachiyar Tirumozhi*, Canto, 7. V.5.
10. ibid., V.6
11. *Nachiyar Tirumozhi*, Canto6, V.11.
12. ibid.
13. ibid., Canto 7, V.5
14. But this is wrongly considered inauspicious by the Hindus and no marriage is celebrated during the whole month.
15. *Tiruppavai*, V.2.
16. ibid., V.3.
17. *Ahananuru*, V.86
18. ibid., V.136.
19. P.T.Srinivasa Iyengar, *The Tamils*, P.80.
20. *Nachiyar Tirumozhi*, Canto 6, V.1.
21. ibid., V.2.
22. ibid., V.3; In *Tiruppavai* the sister-in-law is Anthari who vanished from the hands of Kamsa when he attempted to kill her thinking it as Krishna.
23. ibid., V.4.
24. ibid., V.5.
25. ibid., V.6; Even now the staunch believers of the Vedic mantras would not permit the bride to shake hands with anybody after tying of tali (mangalyatarana) till the panigrahana is over).
26. ibid., V.7.
27. ibid., V.8.
28. ibid., V.9.
29. ibid., V.10; This practice is not followed in modern times but in villages even now the couple are taken on procession and they are welcomed by all the people in their respective houses.
30. *Nachiyar Tirumozhi*, Canto 1.
31. ibid., Canto 8, V.7.
32. ibid., Canto 1, V.5.

# GANDHIJI IN RAJAPALAYAM

P.S.Chandraprabhu, M.A.,M.Phil.
Senior Lecturer in History
Rajus' College,
RAJAPALAYAM.

